# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஓரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 492 — 1998 நவம்பர் — ரூபா 8.00


27 NOV 1998
மாநகராட்சி
யாழ்ப்பாணம்

உள்ளே


- வர்த்தகர்கள் புதிய அரசியல் முறையை வேண்டுகிறார்கள் ............ 2
- 25 பேரைக் கைது செய்தனர் ............ 3
- உலக சந்தைகளை பயம் பிராந்தி பிடித்துக் கொண்டுள்ளது ............ 4
- இந்திய ஸ்டாலினிசக் கட்சிகள் காங்கிரஸ் கட்சிக்கு முண்டுகொடுக்கின்றன ............ 5
- ரூஷ்ய மார்க்சிச வரலாற்றாசிரியருக்கு அனைத்துலக அஞ்சலி: வடிம் றொகோவினுக்கு மாஸ்கோவில் இறுதி சடங்கு ............ 7
- இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ............ 8
- வறுமையினதும் சுகாதார நிலையின் சீரழிவையும் அம்பலமாக்குகின்றது ............ 13


**சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலைப் புலிகளின் கைதில் இருந்து விடுதலை செய்யும் அனைத்துலகப் பிரச்சாரம்**

— 8-11 பக்கம்

## கொழும்பு பல்கலைக்கழக கருத்துக்கணிப்பின்படி

# இனவாத யுத்தத்தை நூற்றுக்கு 77 வீதமானோர் எதிர்க்கின்றனர்

ஆசிரியர் குழு

கொழும்பு பல்கலைக்கழக மானிட, சமூக விஞ்ஞானக் கல்வி நிலையத்தினால் சமீபத்தில் நடாத்தப்பட்ட கருத்துக்கணிப்பின்படி இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது என நூற்றுக்கு 77 வீதமானோர் கருத்து வெளியிட்டுள்ளனர். மேலும் இந்தப் பிரச்சினையை சமத்துவம், பரஸ்பரம் நல்லெண்ணம், அரசியல் தீர்வினை அடிப்படையாகக் கொண்டே தீர்க்க முடியும் என நூற்றுக்கு 54 வீதமானோர் கருதுவதை அந்தக் கணிப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இந்த முக்கிய விடயங்களை வெளியிட்ட கருத்துக்கணிப்பானது கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறையின் தலைவரான பேராசிரியர் எஸ்.ரி. ஹெட்டிகேயினால் நெறிப்படுத்தப்பட்டதோடு இதற்கு அவசியமான தரவுகளைத் திரட்டுவதில் நாற்பது பல்கலைக்கழக மாணவர்கள் சுயவிருப்பின் பேரில் பங்குகொண்டனர்.

பெரும் குழுறல்களை ஏற்படுத்தியுள்ள இந்தக் கருத்துக் கணிப்பின் மூலம் அம்பலமான விடயங்களினால் குழம்பிப் போன இனவாதிகளும் அவர்களைத் தலையில் வைத்துக் கொண்டாடும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் சூடுபட்ட பன்றிபோல் அலறி விழுந்து கருத்துக் கணிப்பைத் தாக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்தக் கருத்துக் கணிப்பில் யுத்த நடவடிக்கைகள் மூலம் மட்டும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு நூற்றுக்கு 77.4 வீதமானோர் "இல்லை" எனப் பதில் அளித்துள்ளனர். "ஆம்" என நூற்றுக்கு 20.7வீதமானோர் பதில் அளித்துள்ளனர்.

வடக்கின் மோதுதலுக்கு எப்படித் தீர்வு காணமுடியும்? என்ற கேள்விக்கு நூற்றுக்கு 31 வீதமானோர் பரஸ்பரம் ஒத்துழைப்பின் மூலம் எனவும் 11.4 வீதமானோர் அரசியல் தீர்வு மூலம் எனவும் இன்னும் 11.7 வீதமானோர் தமிழ் மக்களுக்கு சமத்துவம் வழங்குவதன் மூலம் எனவும் பதிலளித்துள்ளனர்.

இனக்குழுச் சமாதானத்தை உருவாக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் ? என்ற கேள்விக்கு நூற்றுக்கு 32.7வீதமானோர் சமத்துவத்தின் அடிப்படையில் எனவும் நூற்றுக்கு 23.4வீதமானோர் பரஸ்பரம் ஒத்துழைப்பு மூலம் எனவும் நூற்றுக்கு 2.5 வீதமானோர் அரசியல் தீர்வு மூலம் எனவும் கூறியுள்ளனர்.

இந்தக் கருத்துக்கணிப்பில் கேட்கப்பட்டிருந்த மற்றொரு கேள்வி, இனக்குழு பிரச்சினைக்கு உரிய

19ம் பக்கம் பார்க்க

# சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்ததை விடுதலைப் புலிகள் ஊர்ஜிதம் செய்ய வேண்டும்! வெள்ளவத்தை பகிரங்கக் கூட்டம் வெற்றி

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கிளிநொச்சியில் நான்கு சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டதற்கு எதிராக இடம்பெற்றுவரும் பிரச்சார இயக்கத்தின் ஒரு பாகமாக அக்டோபர் 11ம் திகதி மாலை கொழும்பு வெள்ளவத்தை மாநகரசபை சந்தைக்கு எதிரில் சோ.ச.க.நடாத்திய பகிரங்கக் கூட்டம் வெற்றி கண்டது.

இந்தக் கூட்டத்துக்கு சோ.ச.க. மத்திய குழு உறுப்பினரும் கம்கறு மாவத்த, தொழிலாளர் பாதை பத்திரிகைகளின் பிரதம ஆசிரியருமான கே.ரத்னாயக்க தலைமை தாங்கினார்.

சோ.ச.க.மத்திய குழு உறுப்பினரான எம். அரவிந்தன் தமிழில் பேசியதோடு கூட்டத்தில் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர்.விஜே டயஸ் சிறப்புரை நிகழ்த்தினார். அவரது உரையும் தலைவரின் உரையும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன.

சோ.ச.க.அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டதையும் அவர்களை விடுதலை செய்ய சோ.ச.க.வும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் உலக சோசலிச வெப் நிலையமும் முன்னெடுத்த அனைத்துலகப் பிரச்சாரத்தையும் பற்றி விபரித்த ரத்னாயக்க, அதன் பெறுபேறாக அவர்கள் நால்வரையும் விடுதலை செய்வதில் சோ.ச.க.வெற்றி கண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

"கைது செய்யப்பட்ட எமது அங்கத்தவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ள போதிலும் இந்தச் சம்பவம் தொடர்பான ஒரு விடயத்துக்கு சோ.ச.க.தனது கவனத்தைச் செலுத்துகின்றது. அது விடுதலைப் புலிகள் எமது அங்கத்தவர்களைக் கைது செய்ததையோ அல்லது அவர்களை விடுதலை செய்ததையோ உத்தியோகபூர்வமாக ஊர்ஜிதம் செய்யாததேயாகும். ஆதலால் எமது அங்கத்தவர்களின் பாதுகாப்புக்கு எதிரான ஆபத்து தொடர்ந்து இருந்து கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கையைப் பற்றி அறிந்த எவரும் எமது இந்தக் கருத்துடன் இணங்குவர். ..."

ஆதலால் சோ.ச.க.அங்கத்தவர்களை விடுதலை செய்ததை ஊர்ஜிதம் செய்தல், விடுதலை செய்யப்பட்டவர்களுடன் திட்டவட்டமான தொடர்புகளை சோ.ச.க. தலைமை ஏற்படுத்திக் கொள்ள இடமளித்தல், வன்னிப் பிராந்தியத்தில் கட்சி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட இடமளித்தல் என்ற கோரிக்கைகளை சோ.ச.க.விடுதலைப் புலிகளிடம் முன்வைப்பதாக ரத்னாயக்க குறிப்பிட்டார்.

அதன் பேரில் இலங்கையின் உள்ளும் அனைத்துலக ரீதியிலும் தொழிலாளர் வர்க்கம், ஒடுக்கப்படும் மக்கள், புத்திஜீவிகள், ஜனநாயக உரிமைகளையிட்டு அக்கறை கொண்டவர்களிடையே உலக பொதுஜன அபிப்பிராயத்தை கட்டியெழுப்பும் பிரச்சாரத்தினை சோ.ச.க.வும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் தொடுத்துள்ளதாக கூறிய அவர் இந்த வெள்ளவத்தைக் கூட்டம் அதன் ஒரு பாகம்



வெள்ளவத்தை சந்தைக்கு முன்னால் நடைபெற்ற பிரச்சார கூட்டப் பேச்சுக்களை கேட்போரில் ஒரு பகுதியினர்

எனவும் குறிப்பிட்டார்.

சோசலிச சமத்துவக் கட்சியும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஏனைய பகுதிகளும் முதலாளித்துவத்தை தூக்கி வீசி உலக சோசலிசத்தை ஸ்தாபிதம் செய்யப் போராடுகின்றன. அதன் ஒரு பாகமாக இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தையும் அதனுடன் இணைந்து சிறீலங்கா ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தையும் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கும் முன்நோக்குக்காகவும் சோ.ச.க.போராடுகின்றது. இதன் ஒரு பாகமாகவே சோ.ச.க. தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை காக்கும் தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்தை முன்வைக்கின்றது. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடுவதன் மூலம் மட்டுமே ஊர்ஜிதம் செய்ய முடியும் என

10ம் பக்கம் பார்க்க

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள– தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் பாதை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
சோசலிச சமத்துவக் கட்சியின்
பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

# வர்த்தகர்கள் புதிய அரசியல் முறையை வேண்டுகிறார்கள்

இலங்கையின் முன்னணி ஆறு முதலாளித்துவ வர்த்தக அமைப்புக்களது தலைமையில் அக்டோபர் 22ம் திகதி பண்டாரநாயக்க மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிகளின் மகாநாடும் அதைத் தொடர்ந்து இம்மாதம் 9ம் திகதி பிரித்தானிய அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர் டெரெக் பெட்ஷெட் இலங்கைக்கு வருகை தந்து நடாத்த உள்ள தலையீடுகளும் ஏகாதிபத்தியவாதிகளும் இலங்கை முதலாளி வர்க்கமும் இந்நாட்டினுள் புதிய பிற்போக்கு அரசியல் மாற்றங்களுக்கும் அணிதிரள்வுக்கும் செய்யும் முயற்சியை எடுத்துக் காட்டிக் கொண்டுள்ளது.

இதுவரை காலமும் வர்த்தக அமைப்புக்கள் யூ.என்.பி.யுடனும் சி.ல.சு.க.வுடனும் மிகவும் நெருங்கிய உறவு வைத்துக் கொண்டு திரைமறைவில் இருந்து செயற்பட்டு வந்துள்ளன. ஆனால் அக்டோபர் 10ம் திகதி முன்னர் ஒருபோதும் இல்லாத விதத்தில் இந்த வர்த்தக அமைப்புக்கள் அரசியல் வேலைத்திட்டத்தை முன்வைத்து சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டின.

இந்த மகாநாட்டுக்கான அழைப்பை இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் கென் பாலேந்திரா, தேசிய வர்த்தக சபையின் தலைவர் ஆர்மயின் வீரசிங்க, இலங்கை தேசிய கைத்தொழில் சபையின் தலைவர் நிமல் சமரக்கொடி, வர்த்தக, கைத்தொழில் சபையின் தலைவர் பட்ரிக் அமரசிங்க, இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தின் தலைவர் நிஹால் ஒஸ்டின் இலங்கை ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் லின் பெர்னாந்துவும் விடுத்து இருந்தனர். அத்தோடு இம்மகாநாட்டின் அழைப்பாளராக சிலிங்கோ நிறுவனத்தின் தலைவர் லலித் கொத்தலாவலை பணியாற்றினார்.

பிரித்தானிய தொழிற்கட்சி அரசாங்கத்தின் வெளிநாட்டு, பொதுநலவாய நாடுகள் அலுவலகத்தின் இராஜாங்க அமைச்சரான டெபெக் பெட்செட் இலங்கைக்கு வருகை தந்து, நவம்பர் 9ம், 10ம் திகதிகளில் அரசாங்க, எதிர்க்கட்சி தலைவர்களை சந்திக்க உள்ளார். அவரது வருகையின் நோக்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது சம்பந்தமாக 1997 ஏப்பிரலில் இலங்கைக்கு வருகை தந்த அன்றைய பிரித்தானிய கொன்சர்வேட்டிவ் கட்சி அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர் செட் பொக்ஸ் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் யூ.என்.பி.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் ஏற்படுத்திக் கொண்ட இருதரப்பு உடன்படிக்கைக்கு உயிர்கொடுப்பதாகக் கருதப்படுகின்றது.

## பத்து அம்சம்

அக்டோபர் 22ம் திகதிய சர்வகட்சி மகாநாட்டில் முதலாளித்துவ எஜமானர்கள் முன்வைத்த 10 அம்சங்கள் வருமாறு:

1.வடக்கு கிழக்கு மோதலை பயனுள்ள முறையில் தீர்த்தல்

2.பாகுபாடு காட்டாது இருப்பதை உத்தரவாதம் செய்தல்

3.சகல இலங்கையர்களதும் தனிப்பட் பாதுகாப்பையும் சமாதானத்தையும் உத்தரவாதம் செய்தல்

4.ஆங்கிலத்தை தொடர்பு மொழியாகவும் அரசாங்க மொழியாகவும் சட்டமாக்குதல்

5.அரசாங்க சேவையினதும் நிதிச் சேவை ஆணைக்குழுவினதும் பொலிசினதும் அதிகாரத்தை உத்தரவாதம் செய்தல்

6.சகல தேசிய பிரச்சினைகள் பற்றிய சட்டத்தை தயாரிக்க முன்னர் வெள்ளை அறிக்கை மூலம் பொதுஜன அபிப்பராயத்தை உருவாக்கல்.

7.விவசாய, கைத்தொழில், வர்த்தகத் துறைகளில் அரசாங்கம் மாற்றம் கண்டாலும் ஒரு நீண்ட பொதுக் கொள்கையைக் குறைந்த பட்சம் 15 ஆண்டுகள் கடைப்பிடிக்க அரசாங்கமும் எதிர்க்கட்சியும் உடன்படுதல்.

8.இன்றைய வர்த்தக அவசியங்களுக்கு பொருத்தமான விதத்தில் தொழிற் சட்டங்களையும் பயன்பாட்டையும் மாற்றுதல் உழைப்புச் சந்தையின் அடையாளம், விடுமுறை நாட்களை குறைத்தல், முதலாளிகளதும் ஊழியர்களதும் உரிமைகள், கடமைகள் சம்பந்தமான சமத்துவம் சம்பள விளைதிறன் தொடர்புபடுத்தப் படவேண்டும்.

9.வேண்டிய கல்வி சீர்திருத்தங்களை அங்கீகரித்து நடைமுறைக்கிட ஆதரவளித்தல்

10.முதலாளிமார் சம்மேளனங்களுடனும் படைகளுடனும் பேச்சுவார்த்தை மூலம் தேசிய பொருளாதார கொள்கையை தயார் செய்தல்.

இந்த அனைத்து முதலாளித்துவ கட்சிகளுடனும் முதலாளித்துவ முகாமுக்குப் போன சந்தர்ப்பவாதிகளின் கட்சிகளும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் "வர்த்தக பிரஜைகளின்" ஆரம்பிப்பைப் பற்றி குதூகலித்துக் கொண்டுள்ளனர். அரசியலமைப்புச் சட்ட அமைச்சர் ஜீ.பீ.பீரிசுடன் "பிரச்சினை" உள்ளதால் மகாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்த யூ.என்.பி.யை அதில் கலந்து கொள்ளச் செய்ய அரசாங்க பிரதிநிதிகள் குழுவுக்கு தாம் தலைமை தாங்கும் யோசனையையும் கூட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்தார். இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளாது போனாலும் முதலாளித்துவ எஜமானர்களின் வேலைத்திட்டத்துக்கு முழு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்த யூ.என்.பி.தலைவர் அதை உத்தரவாதம் செய்யும் பொருட்டு அக்டோபர் 26ம் திகதி அவர்களுடன் வேறாக ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்து கொண்டார். ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளின் வெளிநாட்டு தூதுவர்கள் பலரும் கலந்து கொண்ட இம்மகாநாட்டில் தமது ஆதரவையும் வழிநடாத்தலையும் வெளிக்காட்ட அமெரிக்கத் தூதுவர் பவுண் டொனலி கூட்டத்தினுள் தலையிட்டார்.

முதலாளித்துவ வர்த்தக அமைப்புக்கள் புதிய அரசியல் அமைப்பையும் அதன் கீழ் தொழிலாளர்களை அடியோடு சுரண்டும் புதிய நிலைமைகளையும் வேண்டிக் கொண்டுள்ளனர். இந்த மாற்றங்களை உருவாக்கிக் கொள்வதில் காட்டும் சகிப்பற்ற தன்மை காரணமாக முதலாளித்துவ வர்த்தகர்கள் அரசியல் ஆரம்பிப்பில் ஈடுபட்டுள்ளனர். தமது இந்த ஆரம்பிப்பை மகாநாட்டினுள் பேசும் நேரகாலத்தை நிர்வகிக்கும் அதிகாரத்தை கூட அவர்கள் தமது கைக்குள் போட்டுக்கொண்டு இருந்தனர். முதல் யோசனையை நடைமுறைக்கிடுதல் அதாவது, "சமாதானத்தை உருவாக்கும் தீர்வை" நடைமுறைக்கிடுவதை முதலில் கவனத்துக்கு எடுப்பதாக மகாநாட்டில் கூறிக் கொள்ளப்பட்டது. அதன் பேரில் தாம் அமைக்கும் தேசியக் கமிட்டிக்கு இரண்டு அங்கத்தவர்கள் வீதம் அனுப்பும்படி அரசியல் கட்சிகளுக்கு முதலாளிகள் சிபார்சு செய்தனர்.

ஆனால் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின்படி "ஆனால் சமாதானத்தை உருவாக்கும் இந்த முயற்சியின் தலைமை வர்த்தக பிரஜைகளின் கைகளில் இருக்க வேண்டும்" எனக் கூறியுள்ள மகாநாட்டின் அழைப்பாளர் லலித் கொத்தலாவலை "நாம் தலைமை வழங்குவோம். அரசியல் வாதிகள் எம்மைப் பின்பற்ற வேண்டும்" எனக் கூறியுள்ளார். சமாதானத்தை உருவாக்கும் பேரில் பொதுஜன முன்னணி, யூ.என்.பி, விடுதலைப் புலிகள் உட்பட்ட சகல முதலாளித்துவ அமைப்புக்களும் அணிதிரள வேண்டும் என இந்த வர்த்தகர்கள் வலியுறுத்திக் கொண்டுள்ளனர். "விடுதலைப் புலிகளை ஒன்றாகக் கொணர்வதற்கு முன்னதாக பொதுஜன முன்னணியையும் யூ.என்.பி.யையும் ஒன்றுபடுத்தும் மூலோபாயம் உங்களிடம் உண்டா?" என ஒரு முதலாளித்துவப் பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்கு சிலிங்கோ நிறுவனத்தின் அதிபர் லலித் கொத்தலாவலை: "ஆம். எம்மிடம் உண்டு." என ஈடாட்டம் இல்லாமல் குறிப்பிட்டார். அத்தோடு விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்ல தாம் பிரதிநிதித்துவம் செய்யும் சிங்கள இனவாதிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்துவதாகவும் கூறினார். (சன்டே லீடர் 98-11-07)

அமெரிக்க தூதுவர் தனியார் துறையின் இந்த ஆரம்பிப்புக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறி "வடக்கு கிழக்கு மோதுதல் தீர்க்கப்படுமானால் இலங்கைக்கு மேலும் மேலும் சுபீட்சத்தை நோக்கி செல்லும் வல்லமை கிட்டும்" எனக் கூறி இந்நாட்டின் ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ வர்க்கத்தை ஊக்குவித்தார்.

பொதுஜன முன்னணி, யூ.என்.பி.முதலாளித்துவக் கும்பல்கள் இரண்டுக்கும் இடையேயான மோதுதல்களால் சமாதானத்தை உருவாக்கும் பேரில் கடந்த ஆண்டில் பிரித்தானிய இராஜாங்க அமைச்சர் சியம் பொக்சின் தலையீட்டில் செய்து கொள்ளப்பட்ட இருதரப்பு ஒப்பந்தம் குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டுள்ளது. அக்டோபர் 26ம் திகதி வர்த்தக பிரஜைகள் எனப்படுவோர் தம்முடன் பேச்சுவார்த்தைக்கு வந்த போது அந்த உடன்படிக்கையை மீண்டும் நடைமுறைப்படுத்த அரசாங்கத்தை நெருக்குமாறு யூ.என்.பி.தலைவர் கேட்டுக் கொண்டார். ரணில் விக்கிரமசிங்க சியம் பொக்சின் உடன்பிடிக்கையை நடைமுறைப்படுத்தும்படி குரல் கொடுப்பது நவம்பர் 9ம் திகதி பிரித்தானிய இராஜாங்க அமைச்சர் டெரிக் பெட்செட் தலையீட்டுக்கு தயாராகிக் கொண்டாகும். பிரித்தானிய அமைச்சர் இலங்கை வருவது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது ஐ.நா.விஜயத்தின் போதும் பின்னர் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுடனான பேட்டியின் போதும் விடுதலைப் புலிகளுடனான "சமாதானப் பேச்சுவார்த்தைக்கு" "வழிசமைத்துக் கொடுப்பவர்கள் இருந்தால் நல்லது" எனக் கூறிவந்துள்ள ஒரு நிலைமையில் ஆகும்.

ஏகாதிபத்திய ஆளும் வர்க்கமும் ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவமும் கைபோட்டுக் கொண்டுள்ளது தெற்கின் முதலாளித்துவக் கட்சிகளுடன் மட்டுமல்லாது விடுதலைப் புலிகளை உள்ளடக்கிய பிற்போக்கு கூட்டை அமைப்பதற்காகவேயாகும்.

தற்சமயம் இலங்கை வந்துள்ள பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் பாராளுமன்றத் தூதுக் குழுவும் இதற்கு தள்ளப்பட்டுள்ளது. நவம்பர் 4ம் திகதி இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய தொழிற்கட்சி எம்.பி.ஜோன் ஒஸ்டின் பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்றுள்ளார். அதற்கு யூ.என்.பி.க்கும் அரசாங்கத்துக்கும் இடையே நெருக்கமான புரிந்துணர்வு உருவாக வேண்டும் என்றுள்ளார்.

அதிகாரப் பரவலாக்கம் என்ற பேரில் இனவாத யுத்தத்தின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமது இராணுவ ஆட்சியை ஸ்தாபிதம் செய்து ஒன்றில் விடுதலைப் புலிகளை தோற்கடிப்பது அல்லது அதனை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து "சமாதானத்தையும்" "உறுதியான ஆட்சியையும்" உருவாக்கித் தருவதாக பொதுஜன முன்னணி அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இலங்கை முதலாளிகளுக்கும் வாக்குறுதி வழங்கி இருந்தது. பொதுஜன முன்னணி அரசாங்கம் இந்த யுத்தத்தை மறுபுறத்தில் தென் மாகாணங்களில் ஒடுக்குமுறை ஆட்சியை அபிவிருத்தி செய்யப் பயன்படுத்திக் கொண்டது. இது முதலாளிகளைக் காக்க இடம்பெற்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் முதலாளித்துவத் தலைவர்களை பேச்சுவார்த்தை மேசைக்கு தள்ளும் அவசியத்தை வலியுறுத்த ஏகாதிபத்திய சக்திகள் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை ஊக்குவித்தனர்.

ஆனால் அரசாங்கம் படுமோசமான யுத்த நெருக்கடிக்குள் வீழ்ந்து

17ம் பக்கம் பார்க்க

## அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

World Socialist Web Site
http://www.wsws.com

* அமெரிக்கா:
http://www.socialequality.com

* அவுஸ்திரேலியா:
http:www.workersnews.flex.com.au

* பிரித்தானியா:
http:/www.socialequality.org.uk

* கனடா:
http://www.egalitesociale.com

* ஜேர்மன்:
http://gleichheit.de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பசறை குறாப் வேலைநிறுத்தம்:*

# பொலிசார் தொழிலாளி மீது துப்பாக்கி பிரயோகம் செய்து 25 பேரைக் கைது செய்தனர்

விஜித சில்வா,
எம். அரவிந்தன்,
ஆர்.எம். குணதிலக

அப்புகஸ்தன்ன பிளான்டேசன் கம்பனிக்குச் சொந்தமான பசறை குரூப்பைச் சேர்ந்த மூன்று பெண் தொழிலாளர்கள் உட்பட 25 தொழிலாளர்கள் பசறைத் தோட்ட நிர்வாகியின் பங்களாவைத் தீயிட்டு அழித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் நவம்பர் 10ம் திகதி வரையும் ரிமான்டில் வைக்கும்படி பதுளை மஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார். இங்ஙனம் கைது செய்யப்பட்டவர்களுள் சண்முகம் மகேஸ்வரி, மயில்வாகனம் வளர்மதி, செல்வராஜா சரோஜா என்ற பெண் தொழிலாளர்களும் அடங்குவர். இவர்களுடன் கூடவே இராமையா பியசேன, கந்தையா உதயசூரியன், முருகேசு கதிரவேல், இராமன் மகாலிங்கம், ஆசீர்வாதம் விவேகானந்தன், ஆறுமுகம் ரகு, பெரியசாமி தேவராஜ், இராமசாமி இராஜரத்னம், கோவிந்தன் வரதராஜா, வேலாயுதன் மார்க்கண்டன், அந்தோனிமுத்து லோரன்சு, நடேசன் கோமனிராஜா, அருளானந்தம் யேசுராஜா, கந்தையா பெரியசாமி, செல்லையா இன்பராஜா, முத்தையா கமலகுமார், ஆறுமுகம் பத்மநாதன், சந்தனம் சேரன்ராஜா, செபஸ்தியான் சந்தனம் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

25 தொழிலாளர்களை கைது செய்வதன் மூலம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த பசறை குரூப் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக தோட்ட நிர்வாகமும் பொலிசாரும் தொடுத்துள்ள வேட்டையை வன்மையாகக் கண்டனம் செய்யும் சோசலிச சமத்துவக் கட்சியும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் கைது செய்யப்பட்டுள்ள சகல தொழிலாளர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யும்படி வேண்டுகின்றது.

தொழிலாளர்களுக்கு எதிரான இந்த வேட்டையை ஆரம்பிப்பதற்கு தோட்ட நிர்வாகிகள் அக்டோபர் 25 இரவு பசறை குரூப் தோட்ட நிர்வாகியின் பங்களாவும் வாகனமும் தீமூட்டி எரிக்கப்பட்ட சம்பவத்தை சாட்டாக்கிக் கொண்டுள்ளனர். நிர்வாகம் அதை தொழிலாளர்களின் வேலையாகக் காட்ட முயற்சிக்கின்றது.



பொலிஸ் துப்பாக்கி சூட்டினால் இரண்டு கால்களிலும் படுகாயம் அடைந்த தோட்டத் தலைவர் சந்தனம் அந்தனிசுவாமி

முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் இதற்கு எண்ணெய் வார்ப்பதோடு தொழிலாளருக்கு எதிரான வேட்டையை நியாயமானதாக்கிக் காட்டும் பிரச்சாரத்திலும் ஈடுபட்டுள்ளன. அக்டோபர் 27ம் திகதிய ஐலன்ட் பத்திரிகையின் தலைப்புச் செய்தி ஏதோ சம்பவத்தை நேரில் கண்டது போல் "நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் சேர்ந்து தோட்ட நிர்வாகியின் பங்களாவுக்கு தீமூட்டியதாக" எழுதி இருந்தது.

### தொழிலாளர் கூறியது

தொழிலாளர் கூற்றின்படி, அக்டோபர் 25ம் திகதி இரவு தொழிலாளர் லயன்களுக்கு தொடர்ந்து கல்வீச்சு இடம்பெற்றதாகவும் அதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் லயன்களில் இருந்து வெளியேறி தோட்டப் பக்டரிக்கு அருகே கூடி நின்றுள்ளனர். இந்தக் கல்வீச்சு தொடர்ந்து இடம்பெற்றுள்ளது. அங்கு கல்வீச்சில் ஈடுபட்ட தோட்ட நிர்வாகியின் கையாளாக விளங்கிய கருணாதாசவை பிடிப்பதில் தொழிலாளர் வெற்றி கண்டதோடு அவனை அருகில் நின்ற பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். ஆனால் பொலிசார் அந்தக் கருணாதாசவுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது அவனை விடுதலை செய்ததாக தொழிலாளர் தெரிவித்தனர். இதற்குச் சற்று நேரத்தின் பின்னர் சில வெடிச் சத்தங்கள் கேட்டதோடு தோட்ட நிர்வாகியின் பங்களா தீப்பற்றி எரிவதைக் கண்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

வீடுகளுக்குக் கல்வீச்சு இடம் பெற்றது பற்றி பொலிசுக்கு முறைப்பாடு செய்யச் சென்ற தோட்டத் தலைவர் சந்தனம் அந்தோனிசுவாமியின் இரண்டு கால்களுக்கும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் கடும் காயம் ஏற்பட்டது. இப்போது அவர் பதுளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவ தினத்தன்று இந்தத் தீவைப்புச் சம்பவத்துக்கு முன்னதாக பொலிசாரும் குண்டர்களும் வழக்கமாக நடமாடும் தோட்டத்தின் ஸ்டார் கிளப்புக்கு சமீபமாக அமைந்துள்ள தொலைபேசி நிலையத்துக்கு சமீபமாக மூன்று கலன் பெற்றோல் இருந்ததைத் தொழிலாளர் கண்டு பிடித்தனர். அன்றையதினம் தோட்ட அதிகாரியான "இரண்டாம் துரை",

கணக்கப்பிள்ளை உட்பட்ட இன்னும் சிலர் பொலிசாருடன் சேர்ந்து சதியில் ஈடுபட்டதாக தொழிலாளர்களுக்குத் தகவல் கிடைத்தது.

தொழிலாளர்கள் வசிக்கும் லயன் அறைகளுக்கு கல்வீசிய பேர்வழி தோட்ட நிர்வாகியின் கையாளான கருணாதாசவாக இருந்ததன் மூலம் இந்த ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் தோட்ட நிர்வாகியின் திட்டத்தின்படி இடம்பெற்றது என்ற சந்தேகம் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டது.

பங்களா தீவைப்புச் சம்பவம் இடம்பெறுவதற்கு முதல் நாள் வேலைநிறுத்தம் பற்றிய செய்தி சேகரிக்கச் சென்ற வீரகேசரி நிருபர் நெளஷாட்டும் படப்படிப்பாளர் இலட்சுமணனும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு றிமாண்டில் தள்ளப்பட்டனர். அவர்களுக்கு நொவம்பர் 2ம் திகதி வரையும் பிணை மறுக்கப்பட்டது. ஆதலால் இந்த கைது செய்தலும் மறுதினம் பங்களா தீவைப்பு சம்பவம் பற்றிய உண்மை நிலைமையை மூடி மறைப்பதும் முன்கூட்டியே எடுக்கப்பட்ட முடிவு எனத் தொழிலாளர்கள் சந்தேகிக்கின்றார்கள்.

இந்தத் தீவைப்புக்கு முன்னதாக பங்களாவில் இருந்த தோட்ட நிர்வாகியின் வீட்டுத் தளபாடங்களும் ட்ராக்டர்களில் வேறு ஒரு தேயிலை பக்டரிக்கு மாற்றப்பட்டதாகவும் குறிப்பிட்ட தொழிலாளர்கள், தொழிலாளர் தீமூட்டி இருந்தால் தோட்ட நிர்வாகியின் சாமான் சக்கட்டுக்கள் பாதுகாக்கப்பட்டது எப்படி என்ற கேள்வியை எழுப்பினர். முதலாளித்துவ தொடர்புச் சாதனங்கள் இந்தச் சம்பவங்கள் எதையும் அறிக்கை செய்யவில்லை.

தோட்ட நிர்வாகி தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக ஆத்தரமூட்டலைத் தூண்டி நடாத்திவரும் தொழிலாளருக்கு எதிரான வேட்டையானது வேலைநாட்களின் எண்ணிக்கையை வெட்டவும் நலன்புரிச் சேவைகளை அடியோடு துடைத்துக் கட்டவும் பசறை தொழிலாளர்கள் தொழிலாளர் வர்க்கத்தின் ஏனைய சாராரின் ஒத்துழைப்போடு முன்னெடுத்த போராட்டத்தை நசுக்கித் தள்ளுவதையே இலக்காகக் கொண்டிருந்தது. தோட்ட நிர்வாகி இந்த விதத்தில் பாய்ந்து விழுவதற்குக் காரணம் தோட்டக் கம்பனி ஆரம்பித்துள்ள புதிய காட்டுமிராண்டி வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிடுவதன் ஒரு பாகமாகவேயாகும். தொழிற்சங்கத்

5ம் பக்கம் பார்க்க

*கலபொட தோட்டம்- பசறை குறாப்*

# தனியார்மயமாக்கத்தின் தீயவிளைவுகள்

கலபொட தோட்டத் தொழிலாளர்கள் இன்று ஒரு நாகரீகமான வாழ்க்கைக்கு எதுவிதத்திலும் பொருந்தாத குறைந்தபட்ச வசதிகளும் இல்லாத ஒரு நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். தொழிலாளர்கள் இன்னும் மோசமான நிலைமைக்குள் தாம் தள்ளப்படுவதைத் தவிர்க்கவே போராடிக் கொண்டுள்ளனர். அப்புகஸ்தன்ன தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான பசறை குறூப்பைச் சேர்ந்த ஏனைய தோட்டங்களின் நிலைமை ஒன்றில் இதற்குச் சமமானது அல்லது இதைவிட மோசமானது எனத் தொழிலாளர்கள் கூறுகின்றார்கள்.

தொழிலாளர்களுக்கு ஒழுங்குமுறையான கழிவு அறை வசதிகள் செய்து கொடுக்காமை நிர்வாகத்தின் காட்டுமிராண்டித்தனத்தை காட்டுகின்றது. முன்னர் தொழிலாளர்களுக்கு ஒரு லயின் அறைக்கு ஒரு கழிவு அறை இருந்து வந்தது. அவை பராமரிக்காததன் காரணமாக உடைந்து தகர்ந்து போயின. இன்று கழிவறை இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக 2ம் இலக்க லயினில் நூறுபேருக்கு ஒரு கழிவறை மட்டுமே இருந்து கொண்டுள்ளது.

ஒரு லயினுக்கு இரண்டு அல்லது மூன்று பைப்புகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் அவற்றில் தண்ணீர் வருவதாகத் தெரியவில்லை. தனியார்மயமாக்கம் இடம்பெறும் வரையும் தண்ணீர் விநியோகம் இடம்பெற்றதாகவும் தனியார்மயத்தைத் தொடர்ந்து புதிய தோட்ட நிர்வாகி வந்தபின்னர் தண்ணீர் அடியோடு நின்றுவிட்டதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர். லயின் சுற்றாடலை துப்புரவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட தொழிலாளர்களதும் பராமரிப்பு வேலைகளில் ஈடுபட்ட தொழிலாளர்களதும் சேவை நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் லயின்கள் ஒரு அசுத்தமான சூழலில் கைவிடப்பட்டுள்ளன.

புதிய தோட்ட நிர்வாகி வந்ததன் பின்னர் பசறை ஆஸ்பத்திரிக்கு நோயாளிகளை கொண்டு செல்ல இருந்து வந்த வாகன வசதிகளும் ஒழிக்கப்பட்டு உள்ளது. தோட்டத்தினால் வாகன வசதிகள் செய்து கொடுக்க முடியாது போகும் சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுக்கு அதற்கான செலவை வழங்குவது தோட்டத்தின் பொறுப்பாக இருந்து வந்தது. இப்போது அதுவும் இல்லாது போயுள்ளது. தோட்டத்தில் செத்த வீடு இடம்பெற்றால் அதில் கலந்து கொள்ள தொழிலாளர்களுக்கு மாலை 2மணிக்கு விடுமுறை வழங்கப்பட்டு வந்தது. இப்போது அதுவும் இரத்துச் செய்யப்பட்டு விட்டது.

பசறை தோட்ட ஆஸ்பத்திரியை இழுத்துமூடிவிட தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற இருந்த வசதிகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒழிக்கப்பட்டுவிட்டன. வெளிவாரி சிகிச்சை பிரிவு மட்டும் நடாத்தப்பட்டு வந்தது. அதுவும் கூட இப்போது மனநோயாளர் புனர்நிர்மாண ஆஸ்பத்திரி அமைக்கும் பேரில் இழுத்து மூடப்பட உள்ளது.

இங்கு டாக்டராக ஒரு பார்மஸிஸ்ட் கடமையாற்ற வேண்டியேற்பட்டுள்ளது. அவரின் உதவியாளராக ஒரு அட்டென்டன்ட் இருந்து கொண்டுள்ளார். வெளிவாரி சிகிச்சை பிரிவு ஒழிக்கப்படுவதோடு தொழிலாளர்கள் மோசமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என ஒரு டாக்டர் தெரிவித்தார். அவர் இப்பகுதியில் மோசமான போஷாக்கின்மை இருந்து கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த பசறை குரூப் ஆஸ்பத்திரியிலேயே தோட்டத் தொழிலாளர் குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்குவதும் தாய்மாருக்கு ஆலோசனை வழங்குவதும் இடம்பெற்றது. இப்போது இதற்கும் மூடுவிழா நடாத்தப்பட்டுள்ளது.

பசறை தமிழ் பாடசாலை இந்த தோட்ட தொழிலாளர் பிள்ளைகளுக்கு கிட்டிய ஒரு பாடசாலையாகும். அங்கு செல்வதற்கு அவர்கள் 1அல்லது 2 மைல் தூரம் நடக்க வேண்டும். இந்த பாடசாலை இரண்டு சிறிய கட்டடங்களிலேயே அமைந்துள்ளது. இங்கு ஆண்டு 11வரை வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. மாணவர்களின் எண்ணிக்கை 366. இங்கு வணிக, விஞ்ஞான பாடங்களைப் போதிக்க ஆசிரியர்கள் இல்லை. கணிதம் பயிற்சி பெறாத ஒரு ஆசிரிலால் போதிக்கப்படும் நிலை இருந்து கொண்டுள்ளது. ஒன்றரை மணித்தியாலங்கள் பயணம் செய்து பாடசாலைக்கு வரும் நிலைமையில் தாம் இருந்து கொண்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். தண்ணீர் தொட்டி பொருத்தப்பட்டு இருந்தாலும் பாடசாலைக்கு தண்ணீர் கிடையாது. இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள். பாடசாலைக்கு போதுமான கழிவறைகள் இல்லாதுள்ளது.

இதனால் பாடசாலையின் கல்விநிலை கீழ்மட்டத்தில் இருப்பதாகக்குறிப்பிட்ட ஆசிரியர் ஒருவர், பாடசாலைக்கு வரும் மாணவர்களின் கற்கும் சக்தியும் மிகவும் கீழ்மட்டத்தில் இருப்பதாகத் தெரிவித்தார். உரிய உணவு உண்ணாமல் நீண்ட தூரம் பயணம் செய்து பாடசாலைக்கு வரும் மாணவர்கள் பாடசாலையில் மயக்கம் போட்டு விழும் நிலை இருந்து கொண்டுள்ளதாக தெரிகின்றது. வேலைநிறுத்தம் இடம்பெற்ற நாட்களில் மாணவர்களில் பெரும் பகுதியினர் பாடசாலை செல்ல முடியாது போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சந்தைகளை பயப் பிராந்தி பிடித்துக் கொண்டுள்ளது

நிக் பீம்ஸ்

பாதாளத்தில் வீழ்ந்துள்ள பூகோள ரீதியான பொருளாதாரச் சீரழிவுகள் கூர்மையானது. நீண்ட தூரம் செல்ல உள்ளது. முன்னர் ஒரு போதும் இல்லாத விதத்தில் இது தெளிவாகி உள்ள ஒரு சூழ்நிலையில் முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் உலக பொருளாதாரச் சந்தைகளும் பயப் பீதியால் நிலை குலையத் தொடங்கி உள்ளன.

இரண்டு முக்கிய விடயங்கள் தலைதூக்கி உள்ளன. முதலாவது, 1930பதுகளின் பின்னர் முனனர் ஒருபோதுமே இல்லாத விதத்தில் பொருளாதார வீழ்ச்சி மிக வேகமாக உலக நாணய மதிப்பிறக்கமாக மாற்றம் அடையும். இரண்டாவது, அதனால் கடந்த மாதத்தில் இருந்து மலேசியாவில் இடம்பெற்றது போல் மூலதன நிதி நிறுவனங்களும் அரசின் நிர்வாகத்துக்கு உட்பட்ட சில பொருளாதார நிபுணர்களும் உலக சந்தையை வீழ்ச்சி காணச் செய்த புகழ்பெற்றதும் மோசமானதுமென மலேசிய நிலைமையை வருணித்தனர்.

1929ஜனவரியில் 3 பில்லியன் டாலர்களாக இருந்த உலக வர்த்தகம் நான்கு வருடங்களின் பின்னர் அதன் மூன்றில் ஒரு பாகமாகச் சுருங்கியது. இதைக் காட்டும் வகையில் 1934ல் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட சிலந்திவலை படத்தை 'பிஸ்னஸ் வீக்' சஞ்சிகை அண்மையில் பிரசுரித்தது. என்ன தப்பிப் பிழைக்கும் என்பதை சித்திரத்தின் மூலம் ஞாபகப் படுத்துவதாக இது விளங்கியது. "பூகோள ரீதியான நாணய மதிப்பிறக்கம்" சமநிலையில் இல்லை என்பதை வலியுறுத்தும் அதே வேளை சிலரின் தவறான நடவடிக்கைகள் பிரச்சினைகள், அழிவுகளுக்கு வழி சமைக்கலாம் என இது எச்சரித்துள்ளது.

அமெரிக்க நிதிச் செயலாளர் ரொபேட்சனுக்கும் ஜப்பானிய நிதி அமைச்சர் கிவ் மியயாவுமிக்கும் இடையே செப்டம்பர்4ம் திகதி சான்பிராஸ்சிஸ்கோவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை எழுதியுள்ளது.

முக்கிய முதலாளித்துவ சக்திகளுக்கு இடையேயான முரண்பாடுகள் வளர்ச்சி கண்டுள்ளதையும் பலவீனம் அடைந்துள்ள பொருளாதார மூலதன சீரழிவுகளுக்கு முகம் கொடுப்பதற்கான திட்டம் எதுவும் கிடையாது என்பதையும் இப்பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

"அமெரிக்காவும் ஜப்பானும் எந்தவிதமான திட்டமும் இல்லாது, எவ்வளவு சீக்கிரமாகச் செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக இரு நாடுகளும் இரு இடத்தில் ஒரு சமரசமற்ற சூழ்நிலையில் கூடி மறுநாள் கலைந்து சென்றன" எனக் குறிப்பிட்டுள்ளது.

## அமெரிக்க-ஜப்பானிய இழுபறி

ஜப்பானிய வங்கிகளின் சீரழிவு உலக சந்தையின் குழப்பத்துக்கு முக்கிய காரணம் என்பதை ஜப்பானிய தலைவர்கள் ஏற்றுக்கொள்ளாததையிட்டு தாம் அஞ்சுவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறும் அதேவேளையில் குவியும் அமெரிக்க அழுத்தத்தினால் ஜப்பானிய அதிகாரிகள் ஆத்திரத்தில் மயங்கிப் போயுள்ளனர்.

அமெரிக்கப் பொருளாதாரத்துக்கு ஏதும் நடந்தால் எல்லோரும் அதற்கு ஜப்பான்தான் பொறுப்பு என விரல்நீட்டுவார்கள் என பெயர் குறிப்பிடாத ஒரு ஜப்பானிய நிதி அதிகாரி கூறிய கூற்றினை டைம்ஸ் சஞ்சிகை கோடிட்டுக் காட்டியுள்ளமை இந்த நிலைமையை எடுத்துக் காட்டுகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தைகளிற்கு முன்னதாகப் பேசிய அமெரிக்க பெடரல் ரிசேர்வ் வங்கியின் தலைவர் அலன் கிறீன்ஸ்பன், நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் உலகின் அழுத்தம் இல்லாமல் அமெரிக்கா தன்நிறைவு கொண்ட குடியரசாக விளங்கும் என எதுவிதத்திலும் நம்ப முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். ஏக காலத்தில் பல நாடுகளில் நெருக்கடி நிலவுவது இதற்கு முன்னர் ஒருபோதும் இருந்திராத ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டைம்ஸ் சஞ்சிகையின்படி கிறீன்ஸ்பனோ அல்லது ரூபினோ நிலைமைகள் மேலும் மோசமான நிலைமைக்கு இட்டுச் செல்லப்படலாம் என்ற அச்சத்தினால் "பூகோள பொருளாதார வீழ்ச்சி" என்ற பதத்தை கையாளவில்லை.

யேள் கல்லூரியின் நிர்வாகத் துறை அதிபரும் வர்த்தகத் திணைக்களத்தின் முன்னாள் அதிகாரியுமான ஜெப்ரி கார்ட்டன், 'இருளடைந்த குகையின் அந்தத்தில் வெளிச்சம் ஒன்று' தெரிவதாக பல மாதங்களுக்கு முன்னர் இருந்து வந்த கருத்து மாறியதாக அவர் குறிப்பிட்டதாக டைம்ஸ் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

உலகப் பொருளாதாரத்தை முழு அழிவில் இருந்து தடுப்பதே இன்றுள்ள ஒரே எதிர்பார்ப்பு.அடம்ஸ் ஸ்மித் குறிப்பிட்டது போல் அது பார்வைக்கு தோன்றாது. ஒருவரின் கையில் அதாவது, எந்த ஒரு அரசின் அதிகாரத்தாலோ அல்லது எந்த ஒரு நிறுவனத்தின் அதிகாரத்தாலோ கட்டுப்படுத்த முடியாத சக்தி இருந்து கொண்டுள்ளது என்பதை ஒருவர் உணர்ந்து கொள்ள வேண்டும். சுதந்திர சந்தையை மிக உறுதியாக முன்வைக்கும் "வோல் ஸ்ரீட் ஜேர்ணல்" சஞ்சிகை இதற்குச் சமமான அபிப்பராயத்தை வெளியிட்டுள்ளது.

ஒரு தெளிவான தீர்வு தெரியாததால், இந்த சீரழிவு நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளதாக அச்சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது. அது பரவும் சக்தியைக் கட்டுயெழுப்ப எந்த அரசுக்கோ அல்லது அனைத்துலக நிதி நிறுவனத்திற்கோ முடியாது என அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

## பினான்சியல் டைம்ஸ்

பிரிட்டனின் பினான்சியல் டைம்ஸ் சஞ்சிகை செப்டம்பர் 5ம் திகதி "அத்திலாந்திக் சமுத்திரத்தின் மறுபக்கத்தில்" என்ற தலைப்பின் கீழ் எழுதிய ஆசிரியத் தலையங்கத்தில் ஆசியாவின் தீர்மானங்களினால் "பூகோள மயமாக்கத்துக்கு பயமுறுத்தல்" ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

"மூலதனத்தின் மீதான மலேசியாவின் கட்டுப்பாடும் அதன் பங்குச் சந்தையில் ஹொங்கொங்கின் தலையீடும் கவலையைத் தோற்றுவித்துள்ளது. சந்தையின் மேலாதிக்கம் கேள்விக்குள்ளாகி, பாதுகாப்புவாதம் ஒரு விரும்பத்தகாத வருகையாகக் கொள்ளப்படும் ஒரு மிகவும் மாறுபட்ட சூழ்நிலைக்குள் நாம் காலடிவைப்பதாக இருக்கும்." என பினான்சியல் டைம்சின் ஆசிரியத் தலையங்கம் குறிப்பிட்டுள்ளது.

வளர்ச்சியடையும் இந்த அக்கறை பிரதான வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுடன் மட்டும் நின்றுவிடவில்லை. "பிரிட்மார்க் டிசிசன் இக்கொனோமிக்ஸ்" என்னும் முதலீட்டு தகவல் நிறுவனத்தின் பிரசித்திபெற்ற வர்த்தக பொருளியல் நிபுணரான அலன் சினாய் தயாரித்து வரும் அறிக்கையை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். "வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத விதத்தில் ஆசியாவில் தோன்றியுள்ள சூழ்நிலைகள் வளர்ச்சியடையும் நாடுகளில் புதிய மூலதன, கடன் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. ஏன் என்ன நடக்கின்றது. என்ன நடக்கப் போகின்றது. என்ன செய்ய வேண்டும் என்பதை உலகு எங்கும் உள்ள கொள்கை வகுப்பாளர்களினால் புரிந்து கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது. இச்சூழ்நிலையில் நிதிச் சந்தைகள் புதிய பிரதேசங்களை உருவாக்க வேண்டிய உச்ச நிலைமை எதிர்காலத்தில் உள்ளது."

பிசினஸ் வீக் சஞ்சிகை தனது ஆசிரியத் தலையங்கத்திற்கு அப்பால் — பூகோளப் பிரச்சினைக்கு முடிவுகட்ட அமெரிக்க பெடரல் றிசேர்வ் வங்கியும் முக்கிய உலக வல்லரசுகளும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என ஒரு பிரதான கட்டுரையை வரைந்திருந்தது.



அமெரிக்க-டெட்ரொயிட் நகர வீடற்ற மக்கள் ஒரு 'சூப்' நிலையத்தில் சூப்புக்கு காத்து நிற்கின்றனர்

"பூகோளப் பொருளாதாரம் இடைநின்றுவிட்டதா" எனக் கேள்வி எழுப்பி அது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "குளிர் யுத்த காலத்தில் ஒரு உதாரணமாக விளங்கிய அமெரிக்க திறந்த சந்தை முதலாளித்துவம் பின்வாங்கியுள்ளதா?அண்மைக்கால பங்குச் சந்தையின் வீழ்ச்சி பற்றிய பல செய்திகளைத் தருகின்றது.அதில் முக்கியமானது என்னவெனில் ஆசியாவிலும் ரூஷ்யாவிலும் ஏற்பட்ட நிலைமைகள் அமெரிக்கப் பொருளாதாரத்தின் எதிர்காலத் திட்டங்களை சீர்குலைத்துள்ளது. பங்குச் சந்தை வீழ்ச்சி உலகப் பொருளாதார வீழ்ச்சியாக எதிரொலிக்கின்றது. எல்லோராலும் தரப்பட்டதாக கருதப்படும் உலகத் திறந்த பொருளாதாரச் சந்தையிலிருந்து நாடுகள் விடுபடும் உலகை நோக்கி செல்கின்றன.

இந்த அபாயச் சூழ்நிலையின் சமச்சீர் ரேகை நாம் நீண்டகாலமாகத் தரிசித்த நிலைமைகளில் இருந்து மாறுபட்டது என்பது வெளிப்படையானது. உக்கிரத் தன்மையிலும் வேகத்திலும் அது எல்லாப் பொருளியல் நிபுணர்களையும் ஆச்சரியத்துக்கு உள்ளாக்கி உள்ளது. வாழ் நாள் முழுவதும் பணவீக்கப் பிரச்சினைகளுக்குப் பழக்கப்பட்டுவந்த கொள்கை வகுப்போரை பணவீக்கத்தின் வீழ்ச்சியின் மையம் குழப்பியுள்ளது. விலை நிர்ணய அதிகாரத்தின் வீழ்ச்சி கூட்டுத்தாபன நிர்வாகிகளை பயமுறுத்தியுள்ளது. கடன்கள் மீளச் செலுத்தப்படாமை வங்கிகளைப் பயங்கரத்தினுள் தள்ளியுள்ளது.

கடந்த தசாப்தத்தில் திறந்த சந்தை தவிர்க்க முடியாததாக இருந்த போதிலும் ஒரு புதிய மனோபாவம் நிலைகொள்ள ஆரம்பித்தது. எல்லா இடங்களிலும் திறந்த சந்தை மேலும் மேலும் எதிரியாக கணிக்கப்படுகின்றது. நாடுகள் மேலும் மேலும் அதிலிருந்து விலகிச் செல்கிறன. கடந்த வருடத்தில் ஆசியாவில் 50% 70% 80% வரை சந்தை வீழ்ச்சிகண்டு, நன்மதிப்புள்ள சொத்துக்கள் நூற்றுக்கு அதிகமான பில்லியன் டாலர்களால் கரைந்து சென்றது. அமெரிக்க மாதிரி பின்தள்ளப்படும். கடந்த 12 மாதங்களில் கொரியப் பொருளாதாரம் 5 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது. தாய்லாந்து 10வீதத்தினாலும் இந்தோனேஷியா 20 வீதத்தினாலும் வீழ்ச்சி கண்டுள்ளது. கோடிக்கணக்கான மத்தியதர மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்

ஆசியா, லத்தீன் அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பாவும் உலகப் பொருளாதார வளர்ச்சியில் அரைப் பங்குக்கும் மேல் பங்காளிகளாக விளங்கும் என எதிர்பார்க்கும் போது ஆசியாவின் மத்தியதர வர்க்கத்தை காப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது உலகம் பூராவும் உள்ள கூட்டுத்தாபனங்களின் இலாபவீதத்தை குறைத்து "பூகோள அரசியல் ஸ்திரமற்ற நிலையை" அதிகரித்து, பூகோள அபிவிருத்திக்கு ஏற்படக் கூடவிருந்த பிரதித்தாக்கம் அதிகமாக இருந்தது.

சஞ்சிகையில் காட்டப்படும் காரணங்களையும் புள்ளிவிபரங்களையும் விட முன்வைக்கப்படும் தீர்வுகளினூடாக ஆளும் வர்க்கம் பிரச்சினையில் தலைமூழ்கிப்போயுள்ளதை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

எல்லாவற்றுக்கும் முதலாக "வீழ்ச்சியை" நிறுத்த வேண்டும் என்று அது கூறுகின்றது. யாராவது தொலைக்காட்சி முன் தோன்றி எம்மிடம் திட்டங்கள் உள்ளது எனக் கூற வேண்டும்.

## மார்க்சின் தீர்க்கதரிசனம்

அந்தத் திட்டம் என்னவாக இருக்க வேண்டும்? பிசினஸ்வீக் சஞ்சிகையின்படி அதனைப் பெரிதும் ஒத்ததே."சந்தையைக் கட்டுப்படுத்துவதோ அல்லது மூலதனத்தையும் நிதியையும் கட்டுப்படுத்துவது அல்ல . தீர்வு அதற்கு மாறானதே. தீர்வு மேலும் ஒருங்கிணைப்பதே தவிர அதற்குக் குறைவானது அல்ல என நாம் நினைக்கின்றோம். "என்கிறது. ஆசிரியர் இந்தத் தீர்வினை முன்வைத்த தன்னையே அறியாமல் கூறுவது யாதெனில் ரூபனும் அவருடைய ஜேர்மனிய சகாக்களுக்கு மிடையில் சஞ்சிகை முன்வைப்பது போன்ற தீர்வினை ஏன் முன்வைக்க முடியவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றார்.

திறந்த சந்தையை மேலும் முன்னெடுத்துச் செல்ல விடப்படும் அழைப்பு அமெரிக்க வங்கிகளதும் நிதி நிறுவனங்களதும் நலனைக் காப்பதற்கேயன்றி உலகப் பொருளாதாரச் சீரழிவில் இருந்து மீள்வதற்கான திட்டமாக அல்ல.இலாபத்தை நோக்கமாகக் கொண்ட அவர்களுடைய போக்கில் அமெரிக்க சந்தைக்கு எதிரான வெளிநாடுகளின்- குறிப்பாக ஜப்பானின் மூலதனத்தை பெருமளவில் அழித்தல்.

ரூபினினுடனான தனது கலந்துரையாடலின் பின்னர் ஜப்பானிய நிதியமைச்சர் மியாவாசா பின்வருமாறு கூற நேர்ந்தது. சுதந்திரச் சந்தையின் வக்கீலான ஜப்பானின் லோங் ரேம் கிரெடிற் வங்கியின் வங்குரோத்தினால் நீண்டகால கடன் வங்கிகள் அழிக்கப்படவுள்ளது. இது "அமெரிக்காவுக்கும் யப்பானுக்கும் ஒரு ஒழுங்குமுறையான ஆபத்தை உருவாக்கும்□ .அதாவது தனித்தனி வங்கிகளின் வீழ்ச்சியாக அல்லாது பூகோளரீதியான வங்கி அமைப்பினது ஒரு நெருக்கடியாக விளங்கும். பிஸ்னஸ் வீக் கம்யூனிஸ்ட் அறிக்கையை நெருக்கமான ஆய்வுக்கு உள்ளாக்கி இருக்கும் என்பது சந்தேகம். ஆனால் அமெரிக்காவின் பொருளாதார நிலைமையும் உலகம் பூராவும் உள்ள ஒவ்வொரு நாடுகளது நிலைமையும் 150 ஆண்டுகளுக்கு முன்னைய மார்க்சின் ஆய்வுகளை நினைவுக்குக் கொணர்கின்றது.

இச்சஞ்சிகை விளக்கியுள்ளது போல் கோர்ப்பரேட் அமெரிக்கா "வெகு விரைவில் இயந்திரங்கள், உபகரணங்கள், தொழிலாளர்கள், முகாமையாளர்கள், விநியோகிஸ்தர்கள் அனைத்தையும் அளவுக்கு அதிகமாகக் கொண்டிருக்கும். பூகோளரீதியான அமைப்பில் ஒரு துண்டிப்பு ஏற்படும். சகலதும் மாறிவிட்டது."

அல்லது மார்க்ஸ் குறிப்பிட்டது போல் முதலாளித்துவ சமூக அமைப்பின் நெருக்கடியினுள் முன்னைய சகல சகாப்தங்களில் அர்த்தமற்றதாக அருந்த சமூகப் பிரச்சினைகள் மேலதிக உற்பத்தி போன்றவை தலைவிரித்தாடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஸ்டாலினிசக் கட்சிகள் காங்கிரஸ் கட்சிக்கு முண்டுகொடுக்கின்றன

இந்தியாவின் இரண்டு முக்கிய ஸ்டாலினிசக் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் (CPI) இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் (CP[M]) தங்களது சமீபத்திய கட்சி மாநாடுகளில் இந்திய முதலாளித்துவத்தின் பழைய தேசியவாதக் கட்சியான காங்கிரஸ் கட்சியை பலப்படுத்தும் அடிப்படையில் அதற்கு ஆதரவாகக் குரல்கொடுத்துள்ளன.

அக்டோபர் 5-11ம் திகதிகளில் கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 16வது கட்சி மகாநாடு காங்கிரஸ் கட்சியை ஆட்சிக்கு கொணர்வதையே அடிநாதமாகக் கொண்டிருந்தது. ஆனால் கட்சிப் பேச்சாளர் குறிப்பிட்டது போல் கடந்த மார்ச்சில் தெரிவு செய்யப்பட்ட பாரதீய ஜனதா கட்சிக் கூட்டரசாங்கத்தை கவிழ்ப்பதில் காங்கிரஸ் வெற்றிகாணுமானால் காங்கிரசை அடிப்படையாகக் கொண்ட கூட்டரசாங்கத்துக்கு ஸ்டாலினிஸ்டுகள் முழு ஒத்துழைப்பு வழங்குவர்.

1996ல் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சாண்டிகாரில் நடாத்திய கடைசி மகாநாட்டில் ஏதாவதொரு பிற்போக்குத் தீர்மானத்தை எடுக்க அனைத்து முதலாளித்துவ எதிர்க் கட்சிகளுக்கும் காங்கிரசுக்கும் பாரதீய ஜனதா கட்சிக்கும் அழைப்புவிடுப்பதை தனது நடவடிக்கையாகக் கொண்டிருந்தது. எவ்வாறெனினும் ஆரம்பத்தில் இருந்து ஐக்கிய முன்னணிக்கும் ஸ்டாலினிச இடதுசாரி முன்னணிக்கும் மற்றும் பல கட்சிகளுக்குமிடையேயான கூட்டானது முரண்பாடுகளுக்கு மத்தியில் தனது சக்தியை இழந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்கள் ஐக்கிய முன்னணி இந்தியாவில் அரசாங்கம் அமைப்பது என்பது காங்கிரஸ் கட்சி வழங்கிய பாராளுமன்ற ஆதரவின் புண்ணியத்தினால் சாத்தியமாகிய போதிலும் கடந்த தேர்தலில் அது அரைவாசி ஆசனங்களை இழந்துள்ளது. ஐக்கிய முன்னணியின் இந்த முக்கிய பின்னடைவுக்கான காரணம், ஸ்டாலினிஸ்டுகளின் "மக்கள் சார்பு" கூச்சல்களுக்கிடையேயும் அதன் முன்னோடியான காங்கிரஸ் கட்சி ஆட்சியாளர்களின் தாராண்மைமயமாக்கல் கொள்கைகளைக் கடைப்பிடித்ததோடு அரசாங்கத் துறை தொழில்களையும் சமூக செலவினங்களையும் வெட்டிச் சரித்தது.

### “மையப் பணி”

சீ.பீ.எம் ஸ்டாலினிஸ்டுகளின் 1998 மகாநாடு காங்கிரஸ் கட்சிக்கு புதிய வழியில் ஆதரவு வழங்குவதை நியாயப்படுத்திக் கொண்டுள்ளது. இனவாதச் சக்திகளுக்கு -இந்து சோவினிஸ்டுகளான பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். எதிராகப் போராடுவதை "மையப்பணியாகக்" கொண்டுள்ள கட்சி மகாநாட்டின் பிரேரணை அதற்கு காங்கிரஸ் கட்சியின் "மதச்சார்பற்ற" அடிப்படையையும் எட்டும் விதத்தில் "பரந்த அடிப்படையிலான அணிதிரட்டலையும்" வேண்டி நிற்கின்றது.

சீ.பி.எம்.மகாநாட்டின் ஆரம்பத்தில் கட்சிப் பேச்சாளர்கள் தாம் காங்கிரசில் இருந்து எட்ட நின்று கொண்டுள்ளதாகக் காட்டிக்கொள்ள முயன்றனர். பா.ஜ.க.கூட்டரசாங்கம் வீழ்ச்சி காணுமானால் காங்கிரஸ் தலைமையிலான ஒரு கூட்டரசாங்கத்துக்கு பாராளுமன்ற ரீதியிலான ஆதரவை வழங்கப் போவதாகக் கூறிக் கொண்டனர். ஆனால் அந்த வார இறுதியிலேயே ஸ்டாலினிஸ்டுகள் காங்கிரஸ் கட்சி பாரதீய ஜனதா கட்சி கூட்டரசாங்கத்தைக் பிளவுபடுத்தவும் ஆட்சிக்கான உடனடி முயற்சியில் இறங்குவதையும் தாமதப்படுத்தக் கூடாது எனவும் ஊக்குவித்தனர்.



இந்திய சீபீ(எம்) காங்கிரசில் கட்சி அரசியல் குழு உறுப்பினர் சீதாராம் சவுதரியும் மேற்கு வங்காள முதலமைச்சா ஜோதி பாசுவும்

காங்கிரஸ் கட்சிக்காரர்களின் வலதுசாரி சமூக, பொருளாதார வேலைத்திட்டம் பற்றி கருத்துத் தெரிவித்த சீ.பீ.எம்.அரசியல் குழு உறுப்பினரும் மேற்கு வங்காள பிரதமருமான ஜோதி பாசு அவற்றை அவர்கள் "நிஜமான மீளாய்வு" செய்ய வேண்டும் என்றுள்ளார்.

இதேசமயம் இரண்டு ஸ்டாலினிசக் கட்சிகளுள் சிறியதும் அதேசமயம் பாரம்பரியமாக பெரிதும் காங்கிரஸ் சார்பானதுமான சீ.பீ.ஐ.தனது 17வது கட்சி மகாநாட்டில் இத்தகைய ஒரு நிலைப்பாட்டையே எடுத்துள்ளது. செப்டம்பர் 14-18ம் திகதிகளில் சென்னையில் நடைபெற்ற இக்கட்சியின் மகாநாட்டில் சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சிக்கு "பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு" ஆதரவளிக்கத் தீர்மானம் செய்யப்பட்டது எதிர்ப்பு!.

இந்த ஸ்டாலினிசக் கட்சிகளின் தலைமைக்குள் காங்கிரஸ் சார்பு கொள்கைக்கு எதிராக ஏதேனும் எதிர்ப்பு இருக்குமானால் அது அவர்களின் மாகாணத் தேர்தல் நிலைப்பாடு தொடர்பாகவே இருந்து கொண்டுள்ளது. இடதுசாரி முன்னணி ஆட்சியில் இருந்து கொண்டுள்ள மூன்று மாநிலங்களில்—மேற்கு வங்காளம், கேரளா, திரிபுரா- காங்கிரஸ் கட்சியே ஸ்டாலினிஸ்டுகளின் முக்கிய தேர்தல் எதிரியாக இருந்து கொண்டுள்ளது.

ஆனால் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஸ்டாலினிஸ்டுகளின் இந்த ஆதரவு பற்றிக் காட்டிக் கொண்டுள்ள பிரதிபலிப்புக்கள் அவர்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தருவதாக உள்ளது. கடந்த அக்டோபர் 6ம் திகதி காங்கிரஸ் கட்சி பேச்சாளரான கிரிஜா வியாஸ் சீ.பீ.எம்.மின் முன்மாதிரி "ஒரு புதிய அபிவிருத்தி" எனக் கூறியுள்ளார்.ஆனால் சோனியா காந்தியின் ஆதரவாளர்களாக உள்ள ஏனைய சிரேஷ்ட காங்கிரஸ் தலைவர்கள் அத்தகைய ஸ்டாலினிஸ்டுகளின் தலைமையிலான "இடதுசாரி முன்னணியின்" ஆதரவுடன் புதுடில்லியில் ஒரு அரசாங்கத்தை அமைக்கும் சாத்தியத்தை நிராகரித்துள்ளனர். இடதுசாரி முன்னணி ஆட்சியை அமைக்கும் மிகவும் முக்கிய மாநிலங்களில் ஒன்றான மேற்கு வங்காளத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் சீ.பீ.எம்.உடன் தொடர்பு வைத்துக் கொள்வதை வாயளவில் மட்டுமே எதிர்த்துக் கொண்டுள்ளனர்.

காங்கிரஸ் செயற்குழுவின் அங்கத்தவரான இராஜேஸ் பைலட் பாரதீய ஜனதா கட்சியை உடனடியாக ஆட்சியில் இருந்து கவிழ்க்கும் எந்த ஒரு முயற்சியையும் அடியோடு நிராகரித்துள்ளார். அதிக அளவிலான இந்திய முதலாளித்துவத் தட்டினர் ஸ்டாலினிசத் தலைவர்களின் புதிய நடைமுறைக்கு நல்வரவு கூறுகின்றார்கள்.அக்டோபர் 9ம் திகதி ஹிந்து பத்திரிகையின் ஆசிரியர் குழு அறிக்கை 'சீ.பீ.ஐ.எம்.ன் புதிய நிலைப்பாடு பாரதீய ஜனதாக் கட்சிக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் எதிராக சமூகச் சக்திகளை அணிதிரட்டுவதற்கு காங்கிரஸ்(இ)கட்சியை துரிதப்படுத்தும் எனக்' குறிப்பிட்டிருந்தது.

### பீ.ஜே.பீ.யின் வளர்ச்சி

உலக முதலாளித்துவ நெருக்கடியின் மத்தியில், இந்திய சமூக , பொருளாதார நிலைமைகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் அரசியல் நெருக்கடியை சாதகமாக்கிக் கொண்டு, இந்து சோவினிசத்தை தூண்டிக்கொண்டு பீ.ஜே.பி.ஆட்சியை அமைத்தது. இந்திய ஸ்டாலினிசக் கட்சிகள் "அரை நூற்றாண்டு காலமான எமது போராட்டத்தில் ஒரு அரசியல் மாற்றம் அவசியம்" எனும் அடிப்படையில் பீ.ஜே.பீ.க்கு ஆதரவளித்தன.

இதே ஸ்டாலினிசக் கட்சிகள் பீ.ஜே.பீ.யின் இன்றைய நெருக்கடிகளை அடிப்படையாகக் கொண்டும் பீ.ஜே.பீ.யின் இந்து சோவினிசத்தை விமர்சித்துக் கொண்டும் இன்று காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவளிக்கின்றன. கடந்த காலத்தில் காங்கிரசின் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் அதன் தேசிய பொருளாதாரத் திட்டத்தையும் ஏற்றுக்கொண்ட ஸ்டாலினிஸ்டுகள் இன்று அதே காங்கிரசின் இந்திய பொருளாதாரத்தை ஏகாதிபத்திய ட்ரான்ஸநஷனல் கூட்டுத்தாபனங்களுக்குத் திறந்துவிடும் வேலைத்திட்டத்திற்கு முண்டு கொடுத்துக் கொண்டுள்ளன.

தமது புதிய விதிமுறைகள் மூலம் இந்தியத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை மூழ்கடிப்பது கஷ்டம் என்பதைப் புரிந்து கொண்டுள்ள இந்திய ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள், இந்த இரண்டு கட்சிகளதும் கடைசிக் காங்கிரசுகளில் அம்மக்கள் பகுதியினரை அடைத்து வைப்பதற்கான மற்றொரு புதிய வேலைத்திட்டத்தையும் முன்வைத்துள்ளனர். அது என்ன தெரியுமா? "இடது . மதச்சார்பற்ற, ஜனநாயக" கட்சிகளைக் கொண்ட "மூன்றாவது முன்னணியை" அமைப்பதுவே அதுவாகும்.இது வெறுத்து ஒதுக்கப்பட்ட பழைய ஐக்கிய முன்னணியை புதிய மோஸ்தரில் மூடிக் களத்தில் இறக்கும் முயற்சியாகும். காங்கிரஸ் கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு தரும் அதே வேளையில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களுக்கு கால்கட்டு போடும் வகையில் அத்தகைய முன்னணியைப் பயன்படுத்த முடியும் எனவும் இல்லையேல் பா.ஜ.க. கூட்டரசாங்கத்தை வெளியேற்றி ஒரு அரசாங்கத்தை அமைக்க காங்கிரசினால் முடியாது போகும் நிலையில் தமது முன்னணியை ஆட்சியில் இருத்த முடியும் எனவும் ஸ்டாலினிஸ்டுகள் கணக்குப்பார்ப்பதாக இருக்க வேண்டும்.

இந்த எந்த ஒரு நிலைமையின் கீழும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு தாக்குதல் நடாத்தி, ஏகாதிபத்திய பூகோளரீதியான ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும் வங்கிகளும் சிபார்சு செய்யும் பொருளாதார, சமூக வேலைத்திட்டங்களை இட்டுநிரப்புகையில் ஸ்டாலினிஸ்டுகள் முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றனர். அது மக்கள் மீது பேரழிவை சுமத்துவதாகவும் பா.ஜ.க.வையும் அதன் சகாக்களான பிற்போக்கு சோவினிஸ்டுகளையும் மேலும் பலப்படுத்துவதாகவும் விளங்கும்.

ஆதலால்ல தொழிலாளர் வர்க்கம் இந்த ஆபத்தை எதிர்த்து நின்று போராட மாற்று அரசியல் முன்னோக்கும், வேலைத்திட்டமும், தலைமையும் அவசியம். அது உலக சோசலிச புரட்சியின் பாகமாக இந்தியத் துணைக்கண்டத்தில் சோசலிச குடியரசு ஒன்றியத்தை அமைக்கப் போராடுவதேயாகும். இந்தியத் துணைக்கண்டத்தினுள் இப்போராட்டத்துக்கு இந்திய ட்ரொட்ஸ்கிச அமைப்பான சோசலிசத் தொழிலாளர் கழகமும் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியுமே தோள்கொடுக்கின்றன.

# பொலிசார் தொழிலாளி மீது துப்பாக்கி பிரயோகம் செய்து . . .

3ம் பக்கத் தொடர்ச்சி

தலைவர்களும் பல்வேறு முதலாளித்துவச் சார்பு அமைப்புக்களும் அந்த உண்மையை மூடிமறைக்க தோட்ட நிர்வாகி தனிப்பட்ட ஒரு கெட்ட பேர்வழி எனக் காட்ட முயற்சித்து வருகின்றனர்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் முதலாளித்துவ கம்பனிகளின் இந்த கொடிய திட்டங்களைப் பாதுகாக்க மேற்சொன்ன சம்பவத்தைப் பயன்படுத்தி பொலிசாரும் இராணுவமும் தோட்டத் துறையினுள் பாய்ந்து கொண்டுள்ளன. இ.தொ.கா. உட்பட்ட தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பேரில் இத்திட்டங்களுக்கு முண்டு கொடுத்து வருகின்றனர்.

மீதும்பிட்டி தோட்டத்தில் பொலிசாரும் இராணுவமும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதன் மூலம் இது ஊர்ஜிதம் ஆகின்றது.

### தொழிற்சங்கங்கள்

23 தோட்டத் தொழிலாளர்களை சிறையில் போடவும் துப்பாக்கிச் சூட்டினால் ஒரு தொழிலாளியை காயம் அடையவும் செய்ததற்கு எதிராக இந்த தோட்டத்தில் எந்த ஒரு தொழிற்சங்கம் தன்னும் எந்தவிதமான பிரச்சார இயக்கத்தையும் ஆரம்பிக்கவில்லை. இந்த நிலையில் ஐலன்ட் பத்திரிகைக்கு பொலிசார் வழங்கிய அறிக்கையில் "நிலைமையை வழமைக்குத் திரும்பச் செய்வதில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தொழிற்சங்கங்கள ஆதரவு வழங்கி வருவதாக" குறிப்பிட்டுள்ளனர்.இது முதலாளித்துவச் சார்பு தொழிற் சங்கங்களின் இன்றைய தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

தொழிலாளர் போராட்டம் வெடித்த வேளையில் இருந்து முதலாளித்துவக் கம்பனிகளுடன் சமரசம் செய்து கொள்ளும் தொழிற்சங்கத் தலைவர்களின் கலந்துரையாடல்கள் இந்தப் பிற்போக்கு அரசியலின் உச்சக்கட்டமாகும்.

சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் தொழிற்சங்கமான பெருந்தோட்டக்கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் தோட்டத் தொழிற்சங்கத் தலைமைகளின் முதலாளித்துவச் சார்பு விதிமுறையை எதிர்க்கின்றது. அது தனது பத்திரிகைகளான தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த ஊடாக தோட்டத் தொழிலாளர் போராட்டத்தை பாதுகாக்கவும் இடம்பெற்றுவரும் தொழிலாளர் வேட்டைக்கு எதிராகவும் பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளது. கைது செய்யப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களை விடுதலை செய்யவும் தொழிலாளர் வேட்டையைத் தோற்கடிக்கவும் எடுக்கவேண்டிய போராட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கைக் குழுக்களை அமைக்க வேண்டும். அந்த அமைப்பின் ஊடாக சட்டரீதியானதும் அரசியல் ரீதியானதுமான பிரச்சாரத்தை முன்னெடுக்க தொழிலாளர் வர்க்கத்தின் ஏனைய பிரிவினரின் ஆதரவையும் திரட்டிக் கொண்டு முன்செல்ல வேண்டும் என சோசலிச சமத்துவக் கட்சி சுட்டிக்காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சோ.ச.க.அங்கத்தவர் சாந்தகுமார் கைது*

# மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பு

சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவரான ஏ.சாந்தகுமாரை பொலிசார் கைது செய்தமையும் இரண்டு வருடகாலம் சிறையில் வைத்திருந்தமையும் சட்டவிரோதமானது எனவும் சிறீலங்கா அரசியலமைப்புச் சட்டத்தின் 13(2)ன் பிரிவின் கீழ் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் எனவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர்நீதிமன்றம் 1998 செப்டம்பர் 23ம் திகதி அளித்த தீர்ப்பில் இதன் படி அவருக்கு நஷ்டஈடாக ரூபா.25000 வழங்குமாறும் அதை அக்டோபர் 30ம் திகதி அல்லது அதற்கு முன்னதாக உயர்நீதிமன்றத்தில் வைப்புச் செய்யும் படியும் அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

எதுவித குற்றமும் செய்யாத தம்மைக் கைது செய்து சிறையில் வைத்திருந்தமை மனித உரிமைகளை மீறுவதாகும் என ஏ.சாந்தகுமார் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமைகள் மனு விசாரணையைத் தொடர்ந்தே உயர்நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

1994டிசம்பர் 10ம் திகதி அட்டனில் கைது செய்யப்பட்ட சாந்தகுமார் மறுதினம் உடபுஸ்ஸலாவை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு 1995 ஜூலை வரை அங்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து சாந்தகுமார் களுத்துறை, மகசின் சிறைகளில் காவலில் வைக்கப்பட்டு, 1996 ஆகஸ்ட் 24ம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

1994ல் ஆட்சிக்கு வந்த பொதுஜன முன்னணி அரசாங்கம் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்த அடக்குமுறை இயக்கத்தின் போதே சாந்தகுமார் கைது செய்யப்பட்டார். இந்த அடக்குமுறை இயக்கத்தின் போது மேலும் 14 தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு சுமார் இரண்டு வருடகாலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களாக பட்டைநாமம் தீட்டப்பட்டு கைது செய்யப்பட்ட சாந்தகுமார் உட்பட்ட இந்த இளைஞர்களை விடுதலை செய்யும்படி சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஒரு ஆண்டுக்கும் அதிகமான காலம் இலங்கையின் உள்ளும் அனைத்துலக ரீதியிலும் முன்னெடுத்த உக்கிரமான பிரச்சாரத்தின் பெறுபேறாக இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். தோட்டத் துறையின் எந்த ஒரு தொழிற்சங்கமோ அல்லது தொழிலாளர்களின் சார்பில் நின்றுவருவதாகக் கூறிக் கொள்ளும் எந்த ஒரு அரசியல் கட்சியும் சரி இந்த இளைஞர்களைக் காக்க முன்வந்தது கிடையாது. இந்தப் பணிக்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே முழுமனே அர்ப்பணித்துக் கொண்டது என்பது எவராலும் சவால் செய்ய முடியாத வரலாறு.

சாந்தகுமாரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதோடு தோட்டப்புறத் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக இடம்பெறும் இனவாத வேட்டைகள் மீண்டும் அம்பலமாகியுள்ளது.

சாந்தகுமார் கைது செய்யப்பட்டதுதான் தாமதம் முதலாளித்துவ பத்திரிகைகள் "மலைநாட்டு புலி தலைவர் கைது" என்ற தலைப்பில் பொய் திரிப்புக்களுடன் கூடிய செய்திகளை வெளியிட்டன. இந்தத் தகவல்கள் இரகசியப் பொலிஸ் அதிகாரியிடம் இருந்து கிடைத்ததாகக் தெரிவித்திருந்த இந்த இனவாதப் பத்திரிகைகள் டாக்டரான சாந்தகுமாரின் டிஸ்பென்சரியில் வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தன. இவை எல்லாம் அப்பட்டமான பொய்யாகும்.

சாந்தகுமார் உட்பட்ட தோட்டப்புற இளைஞர்கள் பலர் சிறையில் இருந்து விடுதலையானதைத் தொடர்ந்து சோசலிச சமத்துவக் கட்சியில் சேர்ந்து அதன் அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்னும் பலர் அதன் ஆதரவாளர்களாக தொழிற்படுகின்றனர்.

# உடப்புவில் இரு தமிழ் இளைஞர்களும் ஒரு பெண்ணும் பொலிசாரால் கைது


கனகலிங்கம்


உதயநாதன்

உடப்புவில் அக்டோபர் 8ம் திகதி கதிரேசன் கனகலிங்கம், இராமலிங்கம் உதயநாதன் என்ற இளைஞர்களும் அக்டோபர் 17ம் திகதி மனோரஞ்சனி என்ற பெண்ணும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மனோரஞ்சனி பற்றி எதுவிதமான தகவலும் இல்லாது இருந்த நிலையில் சோசலிச சமத்துவக் கட்சியின் தலையீட்டைத் தொடர்ந்து இம்மூவரும் பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது ஊர்சிதம் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு சோ.ச.க.இம்மூவரையும் விடுதலை செய்வதற்கான அரசியல், சட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

கதிரேசன் கனகலிங்கம் அக்டோபர் 8ம் திகதி அதிகாலை 2 மணிக்கு வீட்டில் சிவில் உடையில் வந்து பாய்ந்த பொலிஸ் கோஷ்டியினால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரைப் பிடித்து பேலியகொடை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்வதாயும் அவரைப் பற்றிய எதும் தகவல் அவசியமானால் அங்கு வரும்படியும் கனகலிங்கத்தின் தந்தைக்கு பொலிசார் கட்டளையிட்டதாகத் தெரிகின்றது. கனகலிங்கத்தின் தந்தையின் படி மகன் பொலிசாரினால் தாக்கப்பட்டுள்ளார். கைதான மகனைப் பார்க்க சென்ற தந்தைக்கு அவர் கொண்டு சென்ற உணவை வழங்க அனுமதி வழங்கப்பட்டதே தவிர மகனுடன் ஒரு வார்த்தை தன்னும் பேச இடம்கிடைக்கவில்லை என அவர் வருத்தத்துடன் தெரிவித்தார்.

கனகலிங்கத்தின் கைது இடம்பெற்ற நான்கு நாட்கள் கழித்து அவரின் வீட்டில் பாய்ந்த இரகசியப் பொலிசார் எனக் கூறிக் கொண்ட பொலிஸ் கோஷ்டி அவரின் சகோதரனையும் பொலிசில் ஒப்படைக்கும்படி மிரட்டியது. இல்லையேல் முழுக்குடும்பமும் கைதாகி பொலிசுக்கு போக நேரிடும் என எச்சரித்தது.

கனகலிங்கம் கைதான அதே நாளில் அதிகாலை 3.30மணிக்கு இராமலிங்கம் உதயநாதன் இறால் பக்டரியில் வேலை செய்து கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டார். அவரும் பேலியகொடை பொலிசில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவரின் தந்தை தொழிலாளர் பாதைக்கு தெரிவித்தார்.

அக்டோபர் 17ம் திகதி அதிகாலை 3 மணிக்கு மனோரஞ்சனி என்ற பெண்ணின் வீட்டுக்கு உதயநாதனைக் கொண்டு சென்ற பொலிசார் மனோரஞ்சனி இருக்கும் இடத்தைக் காட்டும்படி மிருகத்தனமாகத் தாக்கியுள்ளனர். அதே நாளில் மனோரஞ்சனி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்கள் யுத்தம் காரணமாக வடக்கு-கிழக்கில் இருந்து 10.15 ஆண்டுகளுக்கு முன்னரே இடம்பெயர்ந்து உடப்பு வந்தவர்கள். இவர்கள் பொலிசாரிடம் இருந்தும் கிராமசேவை உத்தியோகத்தரிடம் இருந்தும் அவசியமான அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டிருந்ததாக உடப்புவாசிகள் தெரிவித்தனர்.

1997 ஜனவரியில் கைது செய்யப்பட்ட ஐங்கரமூர்த்தியும் பெருமாள் ராஜூம் எந்த விதமான குற்றச்சாட்டும் இல்லாமல் தொடர்ந்தும் கொழும்பு மகசின் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

# பல்கலைக் கழக ஊழியர் பிரச்சாரம் இடைநிறுத்தம்

அனைத்து பல்கலைக் கழக தொழிற்சங்க ஒன்றியம் சம்பள உயர்வு உட்பட்ட 16 கோரிக்கைகளின் அடிப்படையில் கடந்த செப்டம்பர் 30ம் திகதி ஏற்பாடு செய்திருந்த மறியல் இயக்கத்தை திடீரெனக் கைவிட்டது.

இதற்கான காரணமாக கொழும்பு தொழிற்சங்கத் தலைவர்கள் அரசாங்கம் வடக்கு யுத்தத்தில் மாட்டிக் கொண்டுள்ளதாலும் மாங்குளம், கிளிநொச்சி மோதுதல்களில் பெரும் அளவிலான அரசாங்கப் படையாட்கள் இறந்ததாலும் இதைக் கைவிட முடிவு செய்ததாக கூறிக் கொண்டனர்.

இந்தத் தொழிற்சங்கம் பல்கலைக்கழக கல்வித்துறை சாராத ஊழியர்களின் ஒரு அமைப்பாகும். இப்போராட்டத்தில் கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகங்கள் மட்டுமன்றி கிழக்கு, தென்கிழக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்களும் கலந்து கொள்ள இருந்தனர்.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஊழியர் கூட்டத்தில் பேசிய அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்க அதிகார சபையின் தலைவர்: வடக்கு யுத்தத்தில் பெருமளவிலான சிங்களப் படையாட்கள் இறந்ததால் மறியலை நிறுத்தியதாக குறிப்பிட்டார். தாம் இன்னும் சொற்ப நேரத்தில் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்த இருப்பதாகக் கூறி கூட்டத்தில் இருந்து நழுவிக் கொண்டார். செயலாளருடன் கூட்ட நடவடிக்கைகளை சமாதானமான முறையில் தொடரும்படி கேட்டு அங்கிருந்து வெளியேறினார். தொழிற்சங்கத் தலைவரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான சமரவிக்கிரம பேசுகையில் நாட்டின் அவசரகால நிலைமையினுள் மறியல் செய்ய முடியாது என்றார். மொரட்டுவை பல்கலைக்கழக யூ.என்.பி.தொழிற்சங்கத் தலைவரான பீரிஸ் . மறியல் நிறுத்தப்பட்டது தவறு எனவும் அதைச் சரி செய்வதாகவும் கூறினார். அவர் தொழிலாளர் குறைந்த எண்ணிக்கையில் பங்கு கொண்டதையிட்டு அவர்களை குற்றம் சாட்டினார்.

இந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் இதுவரை செய்துள்ள ஒரே வேலை, கோரிக்கைகளை விரைவாக வழங்கும்படி கோரும் கடிதத்தை பல்கலைக் கழக உப-வேந்தரிடம் கையளித்ததேயாகும்.

இந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் யுத்தம் ஒரு முடிவுக்கு வரும் வரை சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைக்கக் கூடாது என்ற அரசாங்கக் கட்டளைக்கு தொழிலாளர்களைக் கீழ்ப்படுத்தத் துடிக்கின்றார்கள்.


*காணி, விவசாய அமைச்சு*

# அ.லி.சே.ச.கிளைத் தலைவருக்கு எதிரான பயமுறுத்தல்

காணி, விவசாய அமைச்சின் நிர்வாகக் கிளை லிகிதரும் அரசாங்க லிகிதர் சேவைச் சங்க கிளைத் தலைவருமான ஜவன் வீரசேகர செப்டம்பர் 11ம் திகதி, அந்த அமைச்சின் பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தரினால் மிரட்டப்பட்டதோடு கழுத்தில் பிடித்து பாதுகாப்பு அலுவலகத்துக்கு வெளியேயும் தள்ளப்பட்டுள்ளார். இந்த மிரட்டலுக்கு காரணம் அன்றைய தினம் அமைச்சின் சேவைக்கு வந்த ஐந்து ஊழியர்களிடம் அமைச்சினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை இல்லாதவர்களின் சார்பில் பேசியதேயாகும். ஊழியர்கள் அடையாள அட்டை வைத்திராதது அவர்களின் குற்றம் அல்ல எனவும் அவர்களுக்கு இன்னமும் அமைச்சு அடையாள அட்டை வழங்கவில்லை எனவும் ஜவன் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் தமக்கு நன்கு அறிமுகமான ஊழியர்களானதால் அவர்களை அமைச்சின் சேவைக்கு வர அனுமதிக்குமாறு ஜவன் கேட்டுக்கொண்டார். அச்சமயத்தில் பாதுகாப்பு அதிகாரி நீ யார் எனக்கு உத்தரவு போட எனக் கூறி கழுத்தில் பிடித்து ஜவன் வீரசேகரவை வெளியே தள்ளியுள்ளார். ஊழியர்களின் பிரச்சாரத்தைத் தொடர்ந்து இந்தச் சம்பந்தப்பட்ட பிரதம பாதுகாப்பு அதிகாரியை வேறு இடத்துக்கு மாற்ற அமைச்சு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாக தெரிய வருகின்றது. பெண் பாதுகாப்பு அலுவலர்களுக்கு எதிரான முறைகேடான நெருக்குவாரங்களையும் இந்தப் பிரதம பாதுகாப்பு அதிகாரி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூஷ்ய மார்க்சிச வரலாற்றாசிரியருக்கு அனைத்துலக அஞ்சலி: வடிம் றொகோவினுக்கு மாஸ்கோவில் இறுதி சடங்கு



வடிம் றொகோவின்

வடிம் றொகோவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு கடந்த செப்டம்பர் 21ம் திகதி அவரது உடல் அடக்கம் செய்யப்படவிருந்த மாஸ்கோ மயானத்துக்கு சுமார் ஐம்பது பேர் வருகைதந்திருந்தனர். மார்க்சிச ரூஷ்ய வரலாற்றாசிரியரும் சமூகவியல் ஆய்வாளருமான றொகோவின் சோவியத் யூனியனில் ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு எதிராக தோன்றிய ட்றொட்ஸ்கிச இடதுசாரி எதிர்க்கட்சி பற்றி ஆறு தொகுதிகளைக் கொண்ட ஆய்வு நூலின் ஆசிரியராவார். செப்டம்பர் 18ம் திகதி றொகோவின் புற்றுநோயினால் இறந்தபோது அவருக்கு வயது 61. இறுதி அஞ்சலி செலுத்த வருகை தந்திருந்தவர்களுள் றொகோவினின் மனைவி கலினா இவாநொவினா, அவரின் வயது முதிர்ந்த தாயார், இஸ்ரேலில் இருந்து வந்திருந்த றொகோவினின் முதல் துணைவியின் பெண் மக்கள் இருவரும் அடங்குவர்.

அமெரிக்கா, பிரான்சு, ஜேர்மனியில் இருந்து நண்பர்களும் அனைத்துலகக் குழுவின் அங்கத்தவர்களும் அவருக்கு இறுதி அஞ்சலிசெலுத்த வருகை தந்திருந்தமை அவர் அனைத்துலக ரீதியில் கொண்டிருந்த புகழை எடுத்துக்காட்டுவதாக விளங்கியது.

மாஸ்கோ விஞ்ஞான அக்கடமியுடன் இணைந்த சமூகவியல் நிறுவனத்தின் மெய்யியல் பேராசிரியரும் அவ்வாறே ஆராய்ச்சியாளருமாக விளங்கிய வடிம் சக்காரோவ் றொகோவின் சோவியத் யூனியனுள் பெரும் கௌரவத்துக்குள்ளான சமூக விஞ்ஞானியாவார். இருப்பினும் றொகோவினின் இந்த அக்கடமியின் அவரின் சகாக்களில் ஒரு சிலரை மட்டுமே மயானத்தில் காணக்கூடியதாக இருந்தது. பெரஸ்ரொய்கா காலப்பகுதியிலும் அதைத் தொடர்ந்து சோவியத் யூனியன் வீழ்ச்சிகண்டதன் பின்னரும் இருந்து வந்த பலருடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து றொகோவின் மார்க்சிசத்துக்கும் சோசலிசத்துக்கும் விசுவாசமானவராக விளங்கினார். புற்றுநோய் காரணமாகத் தொடர்ந்து தலையெடுத்த உடற்கஷ்டங்களுக்கிடையேயும் றொகோவின் தமது முழுப்பலத்தையும் வரலாற்றை ஆய்வு செய்யும் பணியில் ஈடுபடுத்தினார். இந்த ஆய்வின் மூலம் உத்தேச ஏழு தொகுதிகளைக் கொண்ட "சோவியத் யூனியனுள் ஸ்டாலினிசத்துக்கு எதிரான மார்க்சிச இடதுசாரி எதிர்க்கட்சியின் போராட்டம் 1923 1940" என்ற நூலுக்கு வழிவகுத்தார். றொகோவின் இறப்பதற்கு முன்னதாக அதில் ஆறு தொகுதிகளை எழுதி நிறைவுசெய்திருந்தார். அவரின் நூலின் உள்ளடக்கமாக அமைந்த காலப்பகுதியினுள்(1923-1940) உயிர்வாழ்ந்த, இடதுசாரி எதிர்க்கட்சி பற்றிய அனுபவங்களையும் தனிப்பட்ட அறிமுகங்களையும் கொண்ட பலருடனும் றொகோவின் கலந்துரையாடல் நடாத்தினார்.

இடதுசாரி எதிர்க்கட்சி அங்கத்தவர்களாக விளங்கியவர்களின் மகன்களும் மகள்கள் பலரும் இந்த இறுதிச் சடங்கில் கலந்து கொண்டதோடு அவர்கள் றொகோவினின் பணியை பாராட்டினர்.

றொகோவினின் இறுதி ஆண்டுகள் பலவும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக விளங்கியது. பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்து கொண்ட அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி ஆகிய இடங்களில் இடம்பெற்ற அவரின் விரிவுரைகளில் அவர் தமது ஆய்வுகளின் தகவல்களையும் இறுதி முடிவுகளையும் முன்வைத்தார்.

அனைத்துலகக் குழுவின் சார்பில் ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சியின் தேசியச் செயலாளர் உல்ரிச் றிப்பர்ட் வடிம் றொகோவினின் வாழ்க்கையையும் பணிகளையும் மதிப்பீடு செய்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"வடிம் றொகோவின் வரலாற்று உண்மையைத் தேடிக்கண்டு பிடிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டார். அதன் பேரில் முழு வாழ்க்கைக் காலத்தையும் அர்ப்பணித்தார். அதன் மூலம் அவரின் நினைவு அனைத்துலகக் குழுவினுள் என்றும் நிலைத்திருக்கும்."

சமூக விஞ்ஞான அக்கடமியுடன் இணைந்த சமூக விஞ்ஞான நிலையத்தின் பணிப்பாளர் விளாடிமீர் யாதேவ் தனியாளாகவும் விஞ்ஞானியாகவும் இட்டுநிரப்பிய பணிகளை மதிப்பீடு செய்தார். "றொகோவின் எந்த ஒரு காலத்திலும் ஸ்டாலினிசத்துக்கு அடிபணிந்து போகாததோடு (மிகவும் மோசமானதும் தீர்க்கமானதுமான நிலைமைகளின் கீழும் கூட) அந்தக் காரணத்தினால் அனைத்துலகப் பாராட்டுக்கும் வரவேற்புக்கும் உள்ளானார்."என்றார்.

## அனுதாபச் செய்திகள்

இறுதிச் சடங்கின் பின்னர் இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உலகின் நாலாபுறத்தில் இருந்தும் அனுப்பப்பட்ட அனுதாபச் செய்திகள் வாசிக்கப்பட்டன. அவற்றிடையே பேர்ளினில் வாழும் பேராசிரியர். நாதன் ஸ்டேயின்பேர்க்கினால் அனுப்பப்பட்ட கடிதமும் அடங்கும். அவரும் ஸ்டாலினிச இடர்ப்பாடுகளுக்கு உள்ளானதோடு சைபீரியாவில் 25 ஆண்டுகள் நாடுகடத்தப்பட்டு வாழ்ந்தவர். கிழக்கு ஜேர்மனியின் வீழ்ச்சியின் பின்னர் விஞ்ஞான கருத்தரங்குகள் பலவற்றில் றொகோவினும் ஸ்டெயின்பேர்கும் சந்தித்துக்கொண்டனர். றொகோவின் ஸ்டெயின்பேர்க்கின் பெரும் மதிப்புக்குரிய ஒருவராக விளங்கினார். றொகோவினின் மறைவு ரூஷ்ய புரட்சிகர இயக்கத்தில் இட்டுநிரப்ப முடியாத ஒரு இடைவெளியை உருவாக்கி இருப்பதாக அவரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, அவர் பின்வருமாறும் தெரிவித்து இருந்தார்:

"எவ்வாறெனினும் றொகோவின் எமக்குச் சேர்த்து வைத்த அவரின் நூல்கள் சிறப்பாக ஸ்டாலினிசம் பற்றிய விமர்சனங்கள் நிச்சயமாக எதிர்காலத்தில் பெரும் வரவேற்பைப் பெறும் என்பதை நாம் சகலரும் அறிவோம். அவரின் ஆழமான விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மூலம் ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆட்சி அமைப்பு, அக்டோபர் புரட்சியின் தர்க்கரீதியான தொடர்ச்சியின் தவிர்க்க முடியாத பெறுபேறு என்ற பொய்யைத் தவிடுபொடியாக்கியுள்ளது. எதிர்வரும் காலத்தில் தோன்றும் சோசலிச இயக்கத்தின் நடவடிக்கைகள் றொகோவினின் நூல்களை அடிப்படையாகக் கொள்ளும்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"எனது நன்றியை அன்புள்ள கலினா இவாநொவினாவுக்கும் றொகோவினின் அன்புக்குரிய ஏனைய சகலருக்கும் தெரிவிக்கும் அதே வேளையில் அவர்களின் எஞ்சிய பணிகள் வெற்றி பெறட்டும் என வாழ்த்துகின்றேன்." என ஸ்டெயின்பேர்க்கின் கடிதம் நிறைவு பெறுகின்றது.

அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியின் தேசியச் செயலாளர் நிக் பீம்ஸ் அனுப்பிவைத்துள்ள தந்திச் செய்தியில் வடிம் றொகோவினை அறியக் கிடைத்ததையும் அவரின் ஆய்வுகளின் பெறுபேறுகளை பரந்த அனைத்துலக கேட்போரை எட்ட வைக்க முடிந்தமையையும் தாமும் தமது கட்சியின் சகல அங்கத்தவர்களும் பெரும் பாக்கியமாகக் கொள்வதாக குறிப்பிட்ட அவரின் செய்தி கூறுவதாவது:

"வடிம் எம்மைப் பிரிந்து சென்றுள்ளார். அவரின் பிரிவினால் நாம் பெரிதும் அதிர்ச்சி கண்டுள்ளோம். ஆனால் அவரிடமிருந்து கற்கும் . அறிவு உலகத்தை எட்டுகின்றதும் சோசலிசத்துக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றதுமான அவர் எதிர்பார்த்த சமூக சமத்துவத்தின் பேரில் போராடுகின்றதுமான புதிய தலைமுறையினரிடையே அவரின் கருத்துக்கள் உயிர்வாழும் என்பதில் நாம் தைரியம் பெறுவோம்."

அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சியின் தேசியச் செயலாளர் டேவிட் நோர்த்துக்கும் வடிம் றொகோவினுக்கும் இடையே நிலவிய நெருங்கிய உறவினதும் நெருக்கமான புத்திஜீவி பரிமாற்றத்தினதும் மகிமையின் மூலம் அவர்கள் இருவரும் மிகவும் இறுக்கமான முறையில் உறவு கொண்டிருந்தனர் என உல்றிச் றிப்பேர்ட் குறிப்பிட்டார். டேவிட் நோர்த்தினால் வடிம் றொகோவினின் விதவையான கலினா இவாநொவினாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் இருந்து வாசிக்கையில் உல்ரிச் றிப்பேர்ட் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"1993 பெப்பிரவரி மாதத்தில் ரூஷ்யாவின் கியூ நகரத்தில் வடிமும் நானும் முதல்தடவையாகச் சந்தித்த அன்றே எம்மிடையே நட்பு வேரூன்றியது. அதன்பின்னர் மாஸ்கோ, அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா முதலிய பல்வேறு இடங்களில் அவரை நான் அடிக்கடி சந்தித்தேன். அந்தச் சகல தருணங்களும் பற்றிய நினைவுகள் எனது நினைவில் படிந்து போயுள்ளன. எம் இருவரது கூட்டினது பல்றே கடந்தகால நிகழ்வுகள் ஆழ்ந்த உத்வேகத்துடன் எனது நினைவுக்கு வருகின்றது.

"1994 ஜூனில் இருந்து எமது சகல நடவடிக்கைகளும் வடிமின் கடும் சுகவீனத்தின் இருண்ட நிழலின் கீழேயே வளர்ச்சிகண்டது. எனினும் அவரது வாழ்க்கையின் பெரிதும் பயனுள்ளதும் முக்கியமானதும் மகிழ்ச்சிமிக்கதும் இந்த இறுதி ஆண்டுகள் சிலவேயாகும்.

"என் அன்புக்குரிய கலியா, இந்த விடயத்தைக் கவனிக்கையில் பெரிதும் முக்கியமானவர் நீங்களே. உங்களது மிகவும் பெறுமதி வாய்ந்த ஒத்துழைப்பும் நட்பும் இல்லாது போயிருந்தால் வடிமினது இந்த மாபெரும் இலக்குகள் ஒன்று தன்னையும் எட்டியிருக்க முடியாது என்பது நிச்சயம். அவரது படைப்புக்களை வெற்றிகரமாக இட்டுச் செல்ல நீங்கள் உருவாக்கிக் கொடுத்த சூழ்நிலையின் பேரில் வடிம் உங்களுக்கு பெரிதும் கடமைப்பட்டவர்."

## அஞ்சலி உரை

பேராசிரியர். றொகோவினின் அஞ்சலி உரை நிகழ்த்துவதில் ரூஷ்ய போல்ஷிவிக் கட்சியின் தலைவர்களாக விளங்கி ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினால் கொலையுண்ட மார்க்சிஸ்டுகளின் வாரிசுகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். அவர்களுள் பின்வருவோர் அடங்குவர்:

* வலரி பொரிசோவ் புரொன்ஸ்டீன்(பிறப்பு 1924) (இவர் லியொன் ட்ரொட்ஸ்கியின் மருகரின் மகன். இவரின் தந்தை அரசியல் ரீதியில் செயற்திறன் கொண்டவர். 1937ல் ஸ்டாலினின் ஆட்சியினால் கொலைசெய்யப்பட்ட இவர் பின்னர் குருஷேவினால் புனருத்தாரணம் செய்யப்பட்டு, கட்சி அங்கத்தவராகவும் இருத்தப்பட்டார்.)

* யூரி விட்டாலிவியு பிரிமாகோவ் (பிறப்பு1927) (இவர் ரூஷ்ய ஜெனரால் விட்டாலி மார்கோவ் பிரிமாகோவின்(1897-1937) புதல்வர். ஜெனரால் விட்டாலி போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்தது அக்டோபர் புரட்சிக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர். இவர் ஸார் ஆட்சியின் கீழ் சைபீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டார். இதன் பின்னர் 1934ல் ஸ்டாலினால் சிறைக்குள் தள்ளப்பட்ட இவர் 1937ல் மரணதண்டனை விதிக்கப்பட்டார்)

*யூரி விளாடிரோவ் ஸ்மிர்னோவ்( இவர் 1907ல் போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்த விளாடிமீர் மிகைலோவ் ஸ்மிக்நோவின் (1887 1937) மகன். விளாடிமீர் அக்டோபர் புரட்சியின் பின்னர் பின்லாந்தில் கொமிசாராகவும் மாஸ்கோவில் புரட்சிக் கமிட்டியின் அங்கத்தவராகவும் பணிபுரிந்தார். 1921ல் கொஸ்பிளான் என்ற அரச திட்டமிடல் கமிட்டியின் அங்கத்தவராக விளங்கியவர். 1926ல் ஐக்கிய இடதுசாரி எதிர்க்கட்சியில் சேர்ந்த இவர் கட்சியின் 15வது மகாநாட்டில் கட்சியில் இருந்து விலக்கப்பட்டு, 1937ல் கொலைசெய்யப்பட்டார்.)

* டட்டியானா இவாரொவ்னா ஸ்மில்கா(பிறப்பு 1919)

(இவர் டென்டிசோவ் ஸ்மில்காவின்(1892-1938) புதல்வி. இவர் 1917ல் போல்ஷிவிக் கட்சியின் மத்திய குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டார். இவர் புரட்சிகர யுத்த சபையினும் இடம்பெற்றிருந்தார். பின்னர் இடதுசாரி எதிர்ப்பின் தலைவர்களில் ஒருவராக விளங்கிய ஸ்மில்கா ஸ்டாலினின் மாஸ்கோ பொய் வழக்கு விசாரணைகளின் எதிரில் சாட்சியமளிக்கையில் "நான் உனது எதிரி" எனப் பதிலளித்ததை றொகோவின் தமது நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.)

*சோயா செரபிரியாகோவா(பிறப்பு 1923)

(சோயா, லியொனி பெட்ரோவ் செரபிரியாகோவின் மகள். 1917 புரட்சியில் மாஸ்கோ தலைவராக விளங்கிய இவர் உள்நாட்டு யுத்த காலத்தில் செஞ்சேனையின் அரசியல் நிர்வாக கமிட்டியின் தலைவராக விளங்கினார். 1923ல் இடதுசாரி எதிர்க்கட்சியின் ஆரம்பத்தில் அதன் தலைமையில் இருந்தவர். செரபிரியாகோவுக்கு பின்னர் ஸ்டாலினால் மரணதண்டனை வழங்கப்பட்டது.)

ரூஷ்யாவில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முக்கிய அங்கத்தவரான விளாடிமீர் வொல்கோவும் ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சியின் தேசியச் செயலாளரான உல்ரிச் றிப்பேர்டும் அனைத்துலகக் குழுவின் சார்பில் றொகோவினின் மரணச்சடங்கில் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

பாகம்—15

இனவாத யுத்தத்துக்கு வேண்டிய பொதுஜன அபிப்பராயத்தை தூண்டிவிடும் பொய்ப் பிரச்சாரங்களை நடாத்துவதில் முதலாளித்துவ அரச இயந்திரமே முன்னணியில் நின்றது. அதனுடன் ஒத்தூதும் வேலைகளில் முதலாளித்துவ பத்திரிகை படங்குகள் ஈடுபட்டன. திரித்துக் கொண்டிருந்த அரச இயந்திரத்தின் பொய் திரிகைக்கு வள்ளுவன் இராஜலிங்கம் என்ற பல்கலைக்கழக மாணவனைக் கைது செய்வதன் மூலம் 'கிறீஸ்' வழங்கப்பட்டது. அவர் சென்னையில் இருந்து திரும்பும் போது தலைமன்னாரில் வைத்து கைது செய்யப்பட்டார்.

வள்ளுவன் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவரான அ.அமிர்தலிங்கத்தின் இரண்டாவது மகன் பகீரதனை திருமணம் செய்யவிருந்த தனது சகோதரியை மணமகன் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய சென்னை சென்றிருந்தார். கைது செய்யப்பட்ட வள்ளுவன் வசம் இருந்த நான்கு கடிதங்கள் மன்னார்த் துறையில் காவலில் இருந்த படையாட்களால் "தேடிப்" பிடிக்கப்பட்டது.


"முக்கியமானது" என இரகசியப் பொலிசார் கருதிய அந்தக் கடிதங்களை ரூபாவாஹினியில் தோன்றி வாசிக்கும் பொருட்டு பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வள்ளுவனைக் கொழும்புக்கு கொணரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கடிதத்தை எழுதியவர் அமிர்தலிங்கத்தின் மூத்த புதல்வரான காண்டீபன் . கடிதம் தமிழர் விடுதலைக் கூட்டணி இளைஞர் பேரவை தலைவரான மாவை சேனாதிராஜாவுக்கு எழுதப்பட்டு இருந்தது.

உரிய தருணம் வரும்போது இலங்கை இராணுவத்தை எதிர்த்து போராடும் பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழம் தேசிய இராணுவத்தை ஒழுங்கு செய்கின்றது என்பதே கடிதத்தில் அடங்கியிருந்த முக்கிய விடயமாகும். இந்தத் தேசிய இராணுவத்துக்கு திரட்டிப் பயிற்சியளிக்கும் படைகளின் எண்ணிக்கை 50க்கும் 100க்கும் இடைப்பட்டதாகும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. பயிற்சி முகாமாக ஒதுக்கப்பட்ட இடம் இரண்டு பிரிவாக ஒதுக்கப்பட்ட 15 ஏக்கர் நிலம் எனவும் கூறப்பட்டது. அதற்கான நிதி லண்டனில் திரட்டப்படுவதாகவும் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்த அமிர்தலிங்கம் லிபிய தொடர்பை அவரிடம் ஒப்படைத்ததாக மேலும் அறிவிப்பது அடங்கியிருந்தது.

இத்தகைய "அரச விரோத சதிகார" தகவல்கள் அந்தளவு அப்பட்டமான விபரங்களோடு சகலரும் வாசித்து விளங்கிக் கொள்ளும் ஒரு கடிதத்தில் இடம்பெறுவது உண்மையில் ஆச்சரியத்துக்கு உரியதாகும். ஆனால் இவற்றையும் விழுங்கிக் கொள்ள வாயைப் பிளந்தோர் இருக்கின்றனர் எனக் கருதி — பொது அறிவையும் கூட இழிவுபடுத்தும் பொய்ப் பிரச்சாரங்களில் ஆளும் வர்க்கம் ஈடுபட்டமை அந்தளவுக்கு அது கையறு நிலைக்குத் தள்ளப்பட்டதை வரலாறு காட்டுகின்றது.

அச்சமயத்தில் அமிர்தலிங்கம் ஈடுபட்டிருந்த அமெரிக்க, பிரித்தானிய சுற்றுலாவில் நிகழ்த்திய பேச்சுக்களையும் பயன்படுத்தி நாற்றத்தின் எல்லையையும் தாண்டி இனவாத நிகழ்ச்சி நிரல் தயார் செய்யப்பட்டது.

சேறு கலக்கிகளாக இந்தச் சேற்றில் சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ



இனவாதிகளால் தீக்கிரையாக்கப்பட்ட கட்டிடங்கள்

தலைவர்கள் இறங்கியிருந்தனர். இவர்களை ஆளுக்காள் பலிகொள்ள ஜனாதிபதி ஜயவர்தன மட்டப்பலகையாக "சர்வகட்சி வட்டமேசை மகாநாட்டை" தயார் செய்தார்.

## அரசியல் நெருக்கடி

1983 ஆகஸ்ட் செப்டம்பர் அளவில் யூ.என்.பி.அரசாங்கம் முகம் கொடுத்திருந்த அரசியல் நெருக்கடி வேகமாக உக்கிரம் கண்டது.

கறுப்பு ஜூலையில் இடம்பெற்ற தமிழர் எதிர்ப்பு தீவைப்புக்களின் சூடு இந்தியா பூராவும் பொதுமக்களை வீதியில் இறக்கும் நிலைமையை உருவாக்கியது. அது தமிழ்நாடு மாநிலத்தில் பெரிதும் உக்கிரமான முறையில் வெளிப்பாடாகியது. சிறப்பாக பல்கலைக்கழக, பாடசாலை மாணவர் உட்பட இளைஞர் பகுதியினர் ஆயிரம் ஆயிரமாக வீதியில் இறங்கி கொழும்பு அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இந்திரா காந்தியின் மத்திய அரசாங்கத்தினதும் எம்.ஜீ.இராமச்சந்திரனது மாநில அரசாங்கத்தினதும் நடைமுறை தொடர்பாக பெரிதும் வெறுப்படைந்திருந்த தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் வீதியில் இறங்கி தமது ஆத்திரத்தை வெளிக்காட்டும் பொருட்டு இலங்கை தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இரத்தக் களரிகளையும் படுகொலைகளையும் சந்தர்ப்பமாக்கினர்.

தமிழ்நாட்டில் கருணாநிதியின் தி.மு.க.இந்த மக்கள் எதிர்ப்பின் உச்சியில் பாய்ந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. அவர் தமிழ்நாடு மாநில சட்டசபையின் எதிர்க் கட்சித் தலைவர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்து தொழிற்படத் தொடங்கினார். இராமச்சந்திரனின் கட்சியினுள் போராட்ட அலையின் தாக்கம் சட்டசபையினுள் அண்ணா தி.மு.க.கட்சியின் பிரதம அமைப்பாளரான ஜனார்த்தனனின் பதவி இராஜினாமாவாக வெளிப்பட்டது. இந்த நெருக்கடி நிலைமையை தம்மால் கட்டுப்பாட்டுக்குள் கொணர முடியாது என்ற பீதியின் காரணமாக இராமச்சந்திரனின் மாநில அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நல்லாதரவு தெரிவித்து இலங்கை அரசாங்கத்தை நெருக்கும்படி காங்கிரஸ் அரசாங்கத்தை நெருக்கியது.

யூ.என்.பி.அரசாங்கத்தின் இனவாத காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிரான பொதுஜன அபிப்பராயம் இந்திய எல்லையையும் தாண்டி வளர்ச்சி காணத் தொடங்கியது. சிறப்பாக 6வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்த தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பீ.க்களின் பாராளுமன்ற ஆசனங்கள் 1983 அக்டோபர் 20ம் திகதி இரத்துச் செய்யப்பட்டதோடு பாராளுமன்ற எதிர்க்கட்சி ஒன்று இல்லாது போகும் அளவுக்கு யூ.என்.பி.யின் சர்வாதிகார வெறி பொதுமக்களின் கண்களின் எதிரில் அம்பலமாகியது.

மறுபுறத்தில் ஏகாதிபத்திய வங்கியாளர்கள் சிபார்சு செய்த வேலைத்திட்டங்களை அணுவும் பிசகாமல் நடைமுறைக்கிடுவது தொடர்பாக யூ.என்.பி.அரசாங்கம் காட்டிய ஈடாட்டம் அதன் எஜமானர்களின் கசப்புக்கு இலக்காகியது. உதாரணமாக இலவசக் கல்வியை ஒழித்துக் கட்டும் பொருட்டு கொணர்ந்த கல்வி வெள்ளை அறிக்கையை ஒரேயடியாக நடைமுறைக்கிடுவதை பொதுமக்களின் எதிர்ப்பின் மத்தியில் சுருட்டிக் கொள்ள நேரிட்டமை குறிப்பிடத்தக்கது. 1980 ஜூலை வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்ட ஒரு இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களின் தொழில் உரிமை நிராகரிக்கப்பட்டு இருந்த போதிலும் இன்னமும் "நஷ்டமான பொருளாதாரத் துறைகளின் பராமரிப்புக்காக நிதி ஒதுக்கீடு செய்வதை நிறுத்த முடியாது போய்விட்டது. இதற்குத் தொழிலாளர்களிடம் இருந்து கிளர்ந்து வந்த எதிர்ப்பே காரணம். இனவாதத்தை பயன்படுத்தி குழப்ப நிலையை சிருஷ்டித்து 1984 வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க செலவுகளை நூற்றுக்கு 20வீதத்தினால் வெட்டித் தள்ள அரசாங்கம் தீர்மானம் செய்தது. எனினும் அதை நடைமுறைக்கிடும் அளவுக்கு யூ.என்.பி.க்கு சக்தி உள்ளதா என்பதையிட்டு வங்கியாளர்கள் சந்தேகம் தெரிவித்தனர். அதில் இருந்து தலையெடுக்கும் பொருட்டு சர்வாதிகாரத் திட்டங்களை விரைவுபடுத்த நேரிட்டது. ஆனால் வடக்கில் தோன்றி இருந்த கிளர்ச்சிகர நிலைமைகளின் எதிரில் இராணுவத்தைத் திட்டவட்டமாக அடிப்படையாகக் கொண்ட ஒரு சர்வாதிகாரத்துக்கு இருந்து வந்த வாய்ப்பு வரையறுக்கப்பட்டது. கறுப்பு ஜூலையின் அனர்த்தங்களின் பெறுபேறாக வடக்கில் கிளர்ச்சிகர இயக்கங்களின் கை பலப்படுத்தப்பட்டு இருந்ததையும் ஏகாதிபத்தியவாதிகள் கணக்கெடுத்துக் கொண்டனர். இதனால் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அரசியல் ரீதியில் மேலும் குழப்பியடித்து மலடுகளாக்கும் பொருட்டு சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகளின் துரோகத்தை பயன்படுத்த நேரிட்டது.

இங்கு முதலாளித்துவச் சார்பு கையாட்களை அணிதிரட்டுவதற்கான துரும்பாக சர்வ கட்சி வட்டமேசை மகாநாடு பயன்பட்டது.

யூ.என்.பி.அரசாங்க அமைச்சர்களினாலேயே ஒழுங்கு செய்து கட்டவிழ்த்து விடப்பட்ட கறுப்பு ஜூலையின் இனவாத இரத்தக் களரிக்கான ஒரு முன்னோடி நடவடிக்கையாக இதற்கு சில தினங்களுக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முன்னர் நடாத்தத் திட்டமிட்டிருந்த சர்வகட்சி வட்டமேசை மகாநாடு எனப்படுவது அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான புள்ளிகள் மட்டும் கலந்து கொள்வதாக விளங்கியது. 1983 ஜூலை 20ம் திகதி கூட்டப்பட்டிருந்த அந்த மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு யூ.என்.பி.க்கு மேலாக சி.ல.சு.க., சமசமாஜ கட்சி, இ.தொ.கா., நவசமசமாஜ கட்சி, தமிழ் காங்கிரஸ் முதலான கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது. ஆனால் அதில் யூ.என்.பி.யும் அதன் முண்டுகோலான இ.தொ.கா.வும் மட்டுமே கலந்து கொண்டன. கறுப்பு ஜூலையின் ஊத்தை வடுக்கள் ஏனைய சகல கட்சிகளதும் அகோர முகங்களில் ஒட்டப்படுவது இதன் மூலம் தவிர்க்கப்பட்டது. கறுப்பு ஜூலைக்கான பொறுப்பை சுமத்தும் பொருட்டு பின்னர் மூன்று கட்சிகள் தடைசெய்யப்பட்ட போதிலும் அது புதையுண்டு போன ஒரு பொய் முயற்சியாகியது.

இப்போது அந்த சர்வகட்சி மோசடியை மீண்டும் தோற்றுவிக்காது இருக்க முடியாது போய்விட்டது. யூ.என்.பி.அரசாங்கம் முகம் கொடுத்த அரசியல் நெருக்கடியே அதற்கான காரணமாகும். யூ.என்.பி.அரசாங்கத்தின் நெருக்கடியை முதலாளித்துவ ஆட்சியினது நெருக்கடியாக புரிந்து கொண்ட வர்க்க அடிமைகள் இப்போது அதற்குத் தோள் கொடுக்க ஆயத்தமாகி வந்தனர்.

அவர்களின் வர்க்கத் துரோகத் ஆயத்தங்களைப் பற்றி ஏதும் சந்தேகம் இருந்திருக்குமானால் அந்தக் குறைபாடுகளைப் பூசிமெழுகும் நடவடிக்கையில் முதலாளித்துவ பத்திரிகைப் படங்குகள் இறங்கின. முன்கூட்டியே யூ.என்.பி.ஆட்சிக்கு முண்டு கொடுக்க அந்தக் கட்சிகள் காட்டும் தயாரிப்பை பத்திரிகைக்காரர்கள் பிரச்சாரம் செய்தனர்.

ஆகஸ்ட் 23ம் திகதி ஞாயிறு ரிவிரச பத்திரிகை எதிர்க் கட்சியின் பிரபல அரசியல் கட்சிகள் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முடிவு செய்திருப்பதாக அறிவித்தது. அதையிட்டு அது பின்வருமாறு குறிப்பிட்டது: "பயங்கரவாத இயக்கத்தினால் தமது கட்சிகளின் அமைப்பு நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் ஏற்பட்டு இருப்பதாகவும் அந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்காது போனால் எதிர்காலத்தில் அது தமக்கும் தலையிடியாகும் என அக்கட்சிகளின் தலைவர்கள் உள்வாரி கலந்துரையாடல்களில் குறிப்பிட்டு உள்ளதாகவும் தமது கட்சிகளின் எதிரில் தெளிவுபடுத்தப்பட்டுள்ள விடயங்களின் படி இந்தப் பிரச்சினைகளை தீர்க்க தீர்வு தேட ஒன்றிணையுமாறு அரசாங்கம் அழைப்பு விடுக்குமானால் அதை ஏற்றுக்கொள்ள விரும்புவதாக அந்தக் கலந்துரையாடல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் விஷயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன."

"விஷயம் அறிந்த" வட்டாரங்கள் எதுவாக இருப்பினும் "கட்சிகளும்" அவற்றின் உள்வாரிக் கலந்துரையாடல்களும் எது எனக் குறிப்பிடாத இந்த அறிக்கைகள் . முடிவுகளை வலுக்கட்டாயமாகப் பெறுவதை இலக்காகக் கொண்டு எழுதப்பட்டவை என்பதை புரிந்து கொள்வது கஷ்டமானது அல்ல. ஆனால் அந்த இலக்குக்கு அடிபணிந்து போவது ஆளும் வர்க்கத்தின் முடிவுகளை திணிக்க வாயைப் பிளந்து கொண்டுள்ள முதலாளித்துவச் சார்பு கட்சிகள் மட்டுமே என்பதை தெரிந்து கொள்வது கஷ்டம் அல்ல. சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் ஜனாதிபதி ஜயவர்தன கூட்டியதுதான் தாமதம் வட்டமேசை மகாநாட்டில் வயிறளப்பதன் மூலம் அப்பரீட்சையில் உயர் சித்தி அடைந்தன. முதலாளித்துவ ஆட்சியாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளில் அத்தருணத்தில் தடைசெய்யப்பட்டு இருந்த நவசமசமாஜக் கட்சிக்கும் ஜே.வீ.பி.க்கும் வட்டமேசை மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி அழைப்பு கிடைக்கவில்லை.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் துரோகிகளையும் சேர்த்துக் கொண்டு இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் முதல் சுற்று: பாராளுமன்றத்தில் இருந்து வெளியே தள்ளப்பட்டு இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியை வட்டமேசைக்கு இழுப்பதாக விளங்கியது. இரண்டாவது சுற்று, சகல முதலாளித்துவக் கட்சிகளதும் ஆதரவுடன் வடக்கில் கிளர்ந்து எழுந்த மக்களுக்கும் வர்க்கப் போராட்டப் பாதையில் காலடி வைக்கும் சகல தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக அரச வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுவதை இலக்காகக் கொண்டிருந்தது.



தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் அன்றைய இந்திய பிரதமர் இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தையில்

இரண்டாவது இலக்கை நோக்கி செல்கையில் அவசியமான ஏகாதிபத்தியவாதிகளதும் இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்களதும் ஆதரவைத் திரட்டிக் கொள்ளும் பொருட்டு ஜயவர்தன ஆட்சியைப் போலவே தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஆளுக்காள் போட்டியிட்டுக் கொண்டிருந்தன.

இந்திய வெகுஜனங்கள் காங்கிரஸ் கட்சியின் பிடிக்குள் அகப்பட்டுக் கிடந்த ஒரு நிலைமையின் கீழ் இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பாக முதலைக் கண்ணீர் வடிப்பதன் மூலம் அதைச் சீர்செய்ய இந்திரா காந்தி யோசித்தார். பல்வேறு சிறுபான்மை மக்கள் குழுக்களின் ஜனநாயக உரிமைகளை துவம்சம் செய்வதில் பேர்போன வரலாற்றை-சிறப்பாக 1980பதுகளில் பஞ்சாபில் சீக்கிய மதத்தினருக்கு எதிரான இராணுவ ஒடுக்குமுறைகளை உக்கிரமாக்கியதை உரித்தாக்கிக் கொண்டிருந்த காங்கிரஸ் ஆட்சியாளர்கள் இலங்கைத் தமிழ் மக்கள் மீது "அனுதாபம் காட்டுவதன்" பின்னணியில் பிற்போக்கு அரசியல் அவசியங்கள் பதுங்கிக் கொண்டிருந்தன.

தமிழ் மக்கள் படுகொலைகள், இரத்தக் களரிகள் சம்பந்தமாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பாராளுமன்றத்தில் இருந்து வெளியே தள்ளியது தொடர்பாகவும் இந்திரா காந்தி இந்திய பாராளுமன்றத்திலும் பத்திரிகையாளர் மகாநாட்டிலும் வெளியிட்ட அறிக்கைகளின் அரசியல் நெருக்குவாரங்களில் இருந்து தலையெடுக்க ஜனாதிபதி ஜயவர்தன உடன் நடவடிக்கை எடுத்தார்.

அவர் ஆசியாவின் சகல பிற்போக்கு ஆட்சியாளர்களதும் ஏகாதிபத்திய சக்திகளது பக்கமும் திரும்பினார்.

## ஏகாதிபத்தியவாதிகள் பக்கம்

தமது சிறப்பு பிரதிநிதியாக செயற்பட்டுவந்த வழக்கறிஞர் எச்.டபிள்யூ. ஜயவர்தனாவை இந்தோனேஷியா, தென்கொரியா, யப்பான், ஹொங்கொங், சீனா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்தின் தலைநகரங்களுக்கு ஜயவர்தனா அனுப்பி வைத்தார். தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டதையிட்டு ஒரு வார்த்தை தன்னும் கூறாத இந்த நாடுகளின் ஆட்சியாளர்களைக் கொண்டு கோரிக்கைக்கு எதிரான அறிக்கைகள் பெற்றுக் கொள்வதில் அவர் வெற்றி கண்டார். ஆனால் சீனாவைத் தவிர ஏனைய சகல நாடுகளும் இந்தியாவின் தலையீட்டைக் கண்டனம் செய்வதை நிராகரித்தன.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இராணுவ உதவி உள்ளடங்கலான உதவிகளை வென்றெடுக்க ஜனாதிபதி ஜயவர்தன வெளிநாட்டு அமைச்சர் ஹமீட்டை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தார். இந்தியாவில் ஏகாதிபத்திய சார்பு இந்திரா காந்தி ஆட்சி முகம் கொடுத்த நெருக்கடியையும் இலங்கையின் பேரிலான அங்குள்ள பிரதிபலிப்புக்களையும் பற்றி உணர்ச்சி கண்டிருந்த றீகன் அரசாங்கம் இலங்கைக்கு நேரடியாக இராணுவ உதவி வழங்க இணங்கவில்லை. அதற்குப் பதிலாக பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா அரசாங்கங்களின் ஊடாக உதவி வழங்க இணக்கம் தெரிவித்தது. இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு றீகன் அரசாங்கத்தின் உயர் அதிகாரியான வேர்ணன் வோல்டரைக் கொழும்புக்கு அனுப்பி வைக்கவும் தீர்மானம் செய்யப்பட்டது. இந்தியாவைக் கணக்கெடுக்காது தாம் செயற்படவில்லை எனக் காட்டிக் கொள்ளும் விதத்தில் வோல்டரின் பயணத்தைப் பற்றி இந்திரா காந்தி அரசாங்கத்துக்கு முன்கூட்டியே அறிவிக்கவும் அமெரிக்கா மறந்துவிடவில்லை.

ஜனாதிபதி ஜயவர்தனவின் யூ.என்.பி.ஆட்சியின் சார்பில் இந்தியாவுக்கு எதிராக பந்தயம் பிடிக்க ஏகாதிபத்தியச் சக்திகளும் அவர்களது கைக்கூலி பிற்போக்கு ஆட்சியாளர்களும் ஈடாடுவதைக் கண்ட யூ.என்.பி. அரசாங்கம் இயலாக் கையாக இஸ்ரேல் பக்கம் திரும்பியது. ஜனாதிபதி ஜயவர்தனவின் "யங்கி டிக்கி" நிலைப்பாட்டையும் வெளிநாட்டு அமைச்சர் ஹமீட்டின் இஸ்லாம் மதத்தையும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்திக் கொண்டு ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்தும் மத்திய கிழக்கு எண்ணெய் பணத்தினாலும் பிழைக்க போட்ட திட்டத்தை பின்தள்ளி, ஜயவர்தன தனது மகன் ரவி ஜயவர்தனவை இஸ்ரேலுக்கு அனுப்பிவைத்தார்.

அரச எதிர்ப்பு சதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி "லிபியன் தொடர்பு" வைத்திருந்ததாக முன்கூட்டியே பிரச்சாரம் செய்து வந்த பொய்யின் இலாபத்தையும் பெற்றுக் கொண்டு இஸ்ரேலில் இருந்து இராணுவ பயிற்சியாளர்களை தருவிக்க ஒப்பந்தம் செய்து கொள்வதில் ஜயவர்தன வெற்றி பெற்றார்.இஸ்ரேலுக்கான கப்பமாக அந்நாட்டுடன் மீண்டும் தூதரக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள யூ.என்.பி. உடன்பட்டது. அந்த இஸ்ரேல் தொழிற்பாடுகளை அமெரிக்க தூதரகத்தின் ஒரு பாகமாக ஸ்தாபிதம் செய்யவும் தீர்மானம் செய்யப்பட்டதையும் கவனத்தில் கொண்டாக வேண்டும்.

முதலாளித்துவ தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கமும் அமெரிக்க, பிரித்தானிய ஆட்சியாளர்களைச் சந்தித்து முறைப்பட்ட போதிலும் நிவாரணம் கிடைக்கவில்லை. ஆதலால் அவர் தமது சகாக்களுடன் தமிழ்நாட்டில் வேரூன்றி. இராமச்சந்திரன்-கருணாநிதி கோஷ்டிகளதும் இந்திரா காந்தி அரசாங்கத்தினதும் ஆதரவின் மீது வாழ்க்கையை ஓட்ட முடிவு செய்தார். இனவாத சிங்கள முதலாளித்துவ அரசாங்கத்தினது ஒடுக்குமுறை . நசுக்குதல் எதிரில் கிளர்ந்து கொண்டிருந்த வடக்கு கிழக்கு தமிழ் மக்களிடையே தமது சகவாழ்வு அடிப்படை வேகமாகத் தகர்ந்து கொண்டு வந்த ஒரு நிலைமையில் வசிப்பிடத்தைக் கூட இந்தியாவுக்கு மாற்றிக் கொள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் தீர்மானித்தனர். இதன் மூலம் அவர்கள் முதலாளித்துவ பாராளுமன்ற தமிழ் தேசியவாதத்தின் படுவங்குரோத்தை வெளிக்காட்டிக் கொண்டனர். முதலாளித்துவ தமிழ் தேசியவாதத்தின் ஆயுதப் போராட்டப் பாதையின் வங்குரோத்தும் பிற்போக்கும் வெளிப்பாடாக இன்னமும் சிறிது காலம் கழிய வேண்டி இருந்தது. தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத ஐக்கியத்தை அடிப்படையாகக் கொள்ளாத அத்தகைய முதலாளித்துவ . குட்டி முதலாளித்துவ வேலைத் திட்டங்களின் மூலம் ஏகாதிபத்தியச் சார்பு சிங்கள இனவாத பிற்போக்காளர்களதும் அவர்களின் ஆட்சியினதும் கிழண்டிப்போன இரு கால்களுக்கு பலம் சேர்ப்பதைத் தவிர வேறு எதுவும் இடம்பெறாது.

**தொடரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்ததை

1ம் பக்கத் தொடர்ச்சி

திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றோம்."

இனவாத யுத்தத்தின் மூலம் சிங்கள-தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பேரழிவினை விபரித்த ரத்னாயக்க, யுத்தத்துக்கு எதிராக சோ.ச.க.வும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் நடாத்திய புகழ்பெற்ற போராட்ட வரலாற்றை விபரித்தார்.

விடுதலைப் புலிகள் சிங்கள-தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் சோசலிச ஐக்கியத்துக்காக சோ.ச.க.முன்னெடுக்கும் போராட்டத்தை ஒரு தடையாகக் கொள்கின்றது.சோ.ச.க.வுக்கும் பு.க.க.வுக்கும் சிங்கள, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் கட்டிக் காக்கும் நீண்ட வரலாறு உண்டு. பு.க.க 1968ல் அமைக்கப்பட்டதில் இருந்து ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான சகல தாக்குதல்களுக்கும் எதிராக போராடியுள்ளது...விடுதலைப் புலிகள் அந்த வரலாற்றை நன்கு அறியும்."

தமிழ் முதலாளித்துவ பிரிவினைவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் செயற்படும் விடுதலைப் புலிகள் ஏகாதிபத்தியவாதச் சக்திகளின் ஆளுமையின் கீழ் திணிக்கப்படும் ஒரு சமரசத்தை வேண்டி நிற்பதை சுட்டிக்காட்டிய ரத்னாயக்க, தென் ஆபிரிக்க ஜனாதிபதியும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) தலைவருமான நெல்சன் மண்டேலாவுக்கு கடிதம் அனுப்புவதன் மூலம் அத்தகைய ஒரு சமரசத்தை உருவாக்க தலையிடுமாறு விடுதலைப் புலிகள் வேண்டிக் கொண்டுள்ளதை நினைவுபடுத்தினார்.

விடுதலைப் புலிகள் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் உதவியை வேண்டிக் கொண்டுள்ளமை மிகவும் பாரதூரமான விளைவுகளைக் கொண்டது. அவர்கள் தென் ஆபிரிக்காவில் திணிக்கப்பட்ட பாணியிலான ஒரு தீர்வினை கொணர உதவும்படி வேண்டிக் கொண்டுள்ளனர். அத்தகைய ஒரு தீர்வின் மூலம் வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காக்க முடியுமா? இல்லை. அவர்களின் ஜனநாயக உரிமைகளைக் காக்க முடியாது போவது மட்டுமல்ல. அத்தகைய ஒரு தீர்வின் மூலம் அம்மக்களை ஒரு ஏகாதிபத்தியவாத சுரண்டலுக்கு அடிமைப்படுத்துவதும் ஆகும். எனவேதான் நாம் விடுதலைப் புலிகளின் வேலைத்திட்டம், வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக செல்லும் ஒன்றாகும் எனக் கூறுகின்றோம்."

அவ்வாறே விடுதலைப் புலிகளின் முதலாளித்துவ பிரிவினைவாத வேலைத்திட்டமும் அந்த அடிப்படையில் சிங்கள முதலாளிகளுடன் அது முன்னெடுக்கும் இரத்தம் தோய்ந்த கொடுக்கல் வாங்கல்களும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தினை பலப்படுத்தவும் தமிழ் மக்களை முட்டுச் சுவருக்கு இட்டுச் செல்லவும் துணைபோகின்றது எனவும் ரத்னாயக்க மேலும் குறிப்பிட்டார்.

சிங்கள முதலாளித்துவ இனவாத யுத்த வேலைத்திட்டங்களுக்கும் தமிழ் முதலாளித்துவ பிரிவினைவாத வேலைத்திட்டங்களுக்கும் எதிராக சிங்கள, தமிழ் மக்களை ஐக்கியப் படுத்துவதை சிதறடிக்க சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் அவர் விபரித்தார்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் பொதியை நடைமுறைக்கிட யூ.என்.பி.யும் பொதுஜன முன்னணியும் ஒன்றுபட வேண்டும் என சமசமாஜக் கட்சி பிரச்சாரம் செய்கின்றது. இந்தப் பிரச்சாரம், ஏகாதிபத்திய வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிடுவதை இலக்காகக் கொண்டுள்ளது. அவர்களது இந்தக் கோரிக்கை முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் படுகோரமான சர்வாதிகார ஆட்சிக்கான நிலைமையைச் சிருஷ்டிக்கும்படி கோருகின்றது."

## முக்கிய காரணம்

1964ல் லங்கா சமசமாஜக் கட்சி முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசாங்கத்தில் சேர்ந்து கொண்டதன் மூலம் இழைத்த மாபெரும் காட்டிக்கொடுப்பு சிங்கள, தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் ஐக்கியத்தை நிர்மூலமாக்கிய இன்றைய நாசகரமான நிலைமைக்கு முக்கிய காரணம் ஆகும் என ரத்னாயக்க சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களின் நண்பர்களாக நின்று கொள்ளப் பார்க்கும் நவசமசமாஜக் கட்சியின் நிஜ வரலாற்றையும் அவர் எடுத்துக் காட்டினார். 1964 சமசமாஜ மாபெரும் காட்டிக் கொடுப்பு, 1972 சிங்கள-பௌத்த இனவாத அரசியலமைப்புச் சட்டம்,1983 கறுப்பு ஜூலையின் மக்கள் படுகொலைகளை மக்கள் கிளர்ச்சியாகக் காட்டியமை, 1985 86ல் யூ.என்.பி.கூட்டிய வட்டமேசை மகாநாட்டில் கலந்து கொண்டமை, 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கையையும் அதன்படி இடம்பெற்ற இந்திய இராணுவ ஆக்கிரமிப்பையும் ஒரு முற்போக்கு நடவடிக்கையாகக் காட்டி அதற்கு ஆதரவளித்தமை, 1990 இனவாத யுத்த வரவுசெலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை, 1994ல் பொதுஜன முன்னணி ஆட்சிப்பீடம் ஏற நடவடிக்கை எடுத்தமை என்ற வகையில் ந.ச.ச.க. துரோக வரலாற்றை எடுத்துக்காட்டிய அவர் இன்று ந.ச.ச.க.தெற்கில் தமிழர் எதிர்ப்பு இனவாத பாசிச ஜே.வீ.பி.க்கும் வடக்கில் முதலாளித்துவ பிரிவினைவாத விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவளிப்பதாகவும் கூறினார்.

கிளிநொச்சியில் சோ.ச.க.அங்கத்தவர்களான நகுலேஸ்வரனும் திருஞானசம்பந்தனும் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டது, அவர்கள் பொதுஜன முன்னணியின் அரசியல் பொதி தீர்வுக்கு எதிரான சுவரொட்டிகளை ஒட்டும்போதாகும். விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கு எதிராக தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் சார்பில் செயற்படுகின்றது. அவர்கள் தமிழ் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை நசுக்கும் சர்வாதிகார ஆட்சியைத் திணிக்கச் செயற்படுகின்றார்கள்."



வெள்ளவத்தை சந்தைக்கு முன்னால் நடைபெற்ற சோ.ச.க. பிரச்சார கூட்டப் பேச்சுக்களை கேட்போரில் ஒரு பகுதியினர்

புளொட், ஈ.பீ.ஆர்.எல்.எப்., ஈ.பீ.டி.பி. போன்ற ஏனைய தமிழ் அமைப்புக்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத் தாக்குதலுடன் இணைந்து கொண்டுள்ள முறையை விபரித்த எம். அரவிந்தன், சிங்கள முதலாளிகளுக்கும் தமிழ் முதலாளிகளுக்கும் எதிராக முதலாளித்துவ வர்க்க ஆட்சியைத் தூக்கி வீசும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சிங்கள, தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை ஒன்றிணைக்க சோ.ச.க.முன்னெடுக்கும் போராட்டத்தை எடுத்துக் கூறினார்.

1987ல் இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கும் அதற்கு அமைய இடம்பெற்ற இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கும் விடுதலைப் புலிகள் உட்பட்ட சகல தமிழ் அமைப்புக்களும் ஒத்துழைப்பு வழங்கிய சமயத்தில் யாழ்ப்பாணத்தில் பகிரங்கக் கூட்டங்களை நடாத்தி, இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு எதிராக தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்துக்காக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்னெடுத்த போராட்டத்தை அவர் நினைவுபடுத்தினார். அதில் பு.க.க.சிங்கள-தமிழ் முதலாளிகளுக்கு எதிராக சிறீலங்கா ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தைக் கட்டியெழுப்பும் முன்நோக்கின் அடிப்படையில் சிங்கள தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட போராடிய விதத்தை அரவிந்தன் கூட்டத்தினருக்கு நினைவூட்டினார்.

## கைது செய்தலின் படிப்பினைகள்

கூட்டத்தில் பேசிய சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயஸ் வன்னி மாவட்ட சோ.ச.க.அங்கத்தவர்கள் விடுதலைப் புலிகளின் கைதியாக இருந்த போது எதிர்கொண்ட அனுபவங்களை விபரித்தார்.

ஜூலை 26ம் திகதி நகுலேஸ்வரனும் சம்பந்தனும் கிளிநொச்சியைச் சேர்ந்த விசுவமடு சந்தியில் சோ.ச.க.சுவரொட்டியை ஒட்டிவிட்டு தர்மபுரத்தில் சுவரொட்டி ஒட்டச் சென்றனர். அங்கு வைத்துக் கைது செய்யப்பட்ட அவர்கள் முதலில் தர்மபுரம் விடுதலைப் புலிகளின் முகாமிலும் பின்னர் விசுவமடு முகாமிலும் பின்னர் முல்லைத்தீவு விடுதலைப் புலிகளின் முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர். விடுதலைப் புலிகளின் உளவுப் பொலிசின் பிராந்தியத் தலைவர் தீபனாலும் அந்த உளவுப் பொலிசின் தலைவரான ரவி மாஸ்டராலும் இவர்களும் இவர்களின் பின்னர் கைது செய்யப்பட்ட சுதர்சனும் விசாரணை செய்யப்பட்டனர்.

இவர்கள் 6 அடி நீளமும் 6 அகலமும் 7 அடி உயரமுமான கூடுகளுக்குள் தனித்தனியாகத் தள்ளப்பட்டனர். இந்தக்கூடுகள் மரங்களின் அடிகளில் இருந்தன.இவர்களின் கால்கள் வயர்களினால் இறுக்கிக் கட்டப்பட்டன. இந்த வயர் வரிச்சல்களின் வேதனை தாங்க முடியாத நிலையில் அவற்றைத் தளர்த்திவிடும்படி அவர்கள் கேட்டார்கள். அதற்கு விடுதலைப் புலிகள் கொடுத்த பதில்: "உங்களுக்கு சோசலிசம் தானே வேண்டும். இதுதான் சோசலிசம்" என்றனர். சிங்கள-தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் ஐக்கியத்திற்காகப் போராடும் ஒரு இயக்கத்தை இந்த இலட்சணத்திலேயே விடுதலைப் புலிகள் கணிக்கின்றது.

எமது நான்கு தோழர்களை விடுதலைப் புலிகளின் கைதில் இருந்து விடுதலை செய்ய முடிந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியிடைகின்றோம். நாம் இந்த விடுதலையை அவர்கள் அனுப்பிவைத்த கடிதங்கள் மூலமே அறிந்துகொண்டோம். விடுதலைப் புலிகள் இவர்களைக் கைது செய்ததையோ அல்லது விடுதலை செய்ததையோ இன்னமும் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளவில்லை.

எமது தோழர்களை விடுதலை செய்து கொள்ள முடிந்ததன் மூலம் , சோ.ச.க.வும் அனைத்துலகக் குழுவும் அடிப்படையாகக் கொண்டுள்ள அரசியல் வேலைத்திட்டத்தின் செல்லுபடியான தன்மையும் சக்தியும் நிரூபிக்கப்பட்டுள்ளது. எமது தோழர்கள் கைது செய்யப்பட்ட செய்தியை நாம் அறிந்த ஆகஸ்ட் 4ம் திகதியில் இருந்து இன்றுவரை அவர்களை விடுதலை செய்யும் பொருட்டு நாம் நடாத்திய போராட்டம் இல்லாமல் எந்த ஒரு நிமிடமும் கழிந்திராது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உலக சோசலிச வெப் நிலையம் இந்தக் கைது செய்தல் பற்றி உலக பொதுஜன அபிப்பராயத்தை விழிப்படைய வைத்தது. அவர்களை விடுதலை செய்ய உலக பொது[illegible] அபிப்பராயத்தை அணிதிரட்டும் பொருட்டு 24 மணித்தியாலங்களும் செயற்பட்டது.

எமது அந்தப் பிரச்சாரத்துக்கு ஆதரவு தெரிவித்து இலங்கையிலும் அவ்வாறே யப்பான், அவுஸ்திரேலியா, ஐரோப்பா, அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா, இந்தியா, ரூஷ்யா என்ற விதத்தில் உலகம் பூராவும் தொழிலாளர் அமைப்புக்களும் மனித உரிமை இயக்கங்களும் தொழிலாளர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள் உட்பட ஜனநாயக உரிமைகளை மதிக்கும் தனிநபர்கள், அமைப்புக்கள் நூற்றுக்கணக்கில் எமது தோழர்களை விடுதலை செய்யும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கினர். இந்தப் பிரச்சாரத்தின் பெறுபேறாகவே எமது தோழர்களை விடுதலை செய்வது சாத்தியமாகியது.

## முக்கிய படிப்பினை

இந்த விதத்தில் உலகளாவிய [illegible]ில் உலக ஆதரவை அணிதிரட்ட இலங்கையில் வேறு எந்த இயக்கத்தினால் முடியும் ? சிங்கள-தமிழ் தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் அந்தப் படிப்பினையை பெற்றுக் கொள்ள வேண்டும். பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளைக் கட்டிக்காப்பாது, துப்பாக்கி, கைக்குண்டு முதலான ஆயுதங்களைக் கொண்டுள்ள அமைப்பினால் அல்ல. உலகளாவிய ரீதியில் பொதுஜன அபிப்பராயத்தை விழிப்படையச் செய்து, அணிதிரட்ட அர்ப்பணித்துக் கொண்டுள்ள இயக்கத்தினாலேயே அது சாத்தியமாகும்.

எமது தோழர்களை விடுதலை செய்விக்க முடிந்ததையிட்டு நாம் மகிழ்ச்சி அடைந்தாலும் நாம் விடுதலைப் புலிகளுடன் தீர்த்துக் கொள்ள வேண்டிய இன்னும் சில விடயங்கள் இருந்து கொண்டுள்ளன. இவர்களை விடுதலை செய்ததைப் பற்றி விடுதலைப் புலிகள் இன்னமும் பகிரங்க அறிக்கை எதையும் விடுக்கவில்லை. அந்நிலைமையினுள் அவர்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்படுகின்றது; உயிர் ஆபத்து தொடர்கின்றது. ஆதலால் நாம் விடுதலைப் புலிகளை வேண்டுவது இதுதான்: எமது அங்கத்தவர்களை விடுதலை செய்ததைப் பற்றி விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வ[illegible] அறிக்கையை வெளியிட வேண்டும்.

அவ்வாறே எமக்கும் எமது வன்னி பிராந்திய அங்கத்தவர்களுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதற்கு எதிராக இருந்துவரும் தடைகளை உடைத்து எறிய வேண்டும். அது என்ன? இனவாத யுத்தமும் முன்னர் யூ.என்.பி.அரசாங்கத்திலும் இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கத்திலும் அவ்வாறே விடுதலைப் புலிகளதும் நடவடிக்கைகளால் சிருஷ்டிக்கப்பட்ட நிலைமையாகும். வன்னியில் உள்ள எமது அங்கத்தவர்கள் கொழும்புக்கு வந்து எம்மை சந்திப்பதற்கான பயணப் பாஸ்களை விடுதலைப் புலிகள் வழங்க வேண்டும் என நாம் கோருகின்றோம். அவ்வாறே சோ.ச.க.தலைவர்கள் கிளிநொச்சி சென்று அங்கு எமது தோழர்களை சந்திப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும்.


வன்னியின் எமது அங்கத்தவர்[illegible] கொழும்புக்கு வருகை தருகையில் அவர்களை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிராந்தியங்களில் இருந்து இங்கு கொணர்வது இனவாத யுத்தம் நடாத்தும் காட்டுமிராண்டி பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் போராடித் தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினையாகும். சோ.ச.க.வுக்கும் பு.க.க.வுக்கும் அத்தகைய ஜனநாயக உரிமைகளின் பேரில் போராடிய நீண்டதும் பலம் வாய்ந்ததுமான அனுபவம் உள்ளது. யூ.என்.பி.யைப் போலவே பொதுஜன முன்னணி அரசாங்கமும் யுத்தத்துக்கு எதிரான எமது போராட்டம் காரணமாக எம்மை அடக்குமுறைக்குள்ளாக்கிய தருணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ஒன்ற நூலகம்.



# ... விடுதலைப் புலிகள் ஊர்ஜிதம் செய்ய வேண்டும்!



வெள்ளவத்தை கூட்டத்தில் சோ.ச.க. பொதுச் செயலாளர் விஜே டயஸ் உரைநிகழ்த்துகின்றார்

பல. அந்தச் சகல தாக்குதல்களுக்கும் எதிராக சற்றும் சளைக்காது போராடியே நாம் இந்தக் கூட்டம் நடாத்துவது உட்பட்ட எமது ஜனநாயக உரிமைகளைக் காத்துக் கொண்டுள்ளோம்.

நாம் சிங்கள-தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் சகலரதும் ஜனநாயக உரிமைகளைக் காக்கப் போராடுகின்றோம். எமக்கு சிங்கள சிறீலங்காவோ அல்லது தமிழ் ஈழமோ வேண்டியதில்லை. நாம் அந்த இரண்டுக்கும் எதிரானவர்கள். நாம் சிங்கள-தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பேணக் கூடிய சிறீலங்கா ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை கட்டியெழுப்பவே போராடுகின்றோம்.

## யுத்தத்தின் போழிவுகள்

எமது அந்தப் போராட்டத்துக்கு இனவாத யுத்தத்தினால் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. இந்த யுத்தம் எமது யுத்தம் அல்ல. இந்த யுத்தத்தின் பிரமாண்டமான பேரழிவுகள் சிங்கள தமிழ் பொதுமக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் வெளியான புள்ளிவிபரங்களின்படி பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து இன்றுவரை யுத்தத்தினால் 11500 படையாட்கள் இறந்துள்ளனர். அவ்வாறே 15000தமிழ் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். 20000 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். செம்மணி போன்ற இடங்களில் அங்ஙனம் கொலை செய்யப்பட்ட தமிழர்கள் நூற்றுக்கணக்கில் கொலை செய்யப்பட்டு படுகுழிகளில் புதைக்கப்பட்டுள்ளனர். மில்லியன் கணக்கான தமிழ், சிங்கள மக்கள் யுத்தத்தினால் இருப்பிடங்களை இழந்து அகதிகளாகியுள்ளனர். இன்னும் பல இலட்சக் கணக்கான இளைஞர்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு ஓட்டம் எடுத்துள்ளனர்.

அவ்வாறே இந்த யுத்தச் செலவின் முழுச் சுமையும் சிங்கள தமிழ் பொதுமக்கள் மீதே சுமத்தப்பட்டு உள்ளது. தொழிலாளர்களின் வாழ்க்கையை ஓட்டுவதற்கு போதுமான சம்பளம் வழங்கும் படி கேட்கும் போது, யுத்தத்துக்கு செலவிட வேண்டியுள்ளதால் சம்பள உயர்வு வழங்க முடியாது என அரசாங்கம் கூறுகின்றது. இந்த ஆண்டில் இதுகாறும் யுத்தத்துக்காக 5700கோடி ரூபாக்கள் செலவிடப்பட்டுள்ளது. மக்களின் பாடசாலை, ஆஸ்பத்திரி, உண்வு போன்ற அத்தியாவசிய அவசியங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய பணமே இந்த விதத்தில் யுத்தத்துக்காக அள்ளி வீசப்படுகின்றது. அரசாங்கம் அத்துடன் நின்றுவிடுவதாய் இல்லை. இப்போது தொழிலாளர்களின் மாதச் சம்பளத்தில் 1/4 பங்கை யுத்தத்துக்காக பிடுங்கிக் கொள்ளத் தயாராகி வருகின்றது.

இந்த யுத்தம் எமது யுத்தம் என யாராலும் கூற முடியுமா? இந்த யுத்தம் சிங்கள-தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான முதலாளிகளின் யுத்தம். இந்த முதலாளி வர்க்கம் அதன் பிறப்பில் இருந்தே சிங்கள-தமிழ் மக்களை இனவாதக் கோட்டின் ஊடாக பிளவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டது. சிங்கள-தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் ஐக்கியப்படுவது தமக்கு ஆபத்தானது என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர். ஆதலால் சிங்கள-தமிழ் மக்களைப் பிளவுபடுத்தும் வேலைகளில் அவர்கள் இறங்கினர்.

1915ல் தமிழ் தேசிய இனத்தவர்களான முஸ்லீம் மதத்தவர்களுக்கு எதிரான இனக் கலவரத்தை கட்டவிழ்த்து விட்டனர். 1919ல் முதலாளித்துவ தேசிய சங்கத்தை இனவாதத்தின் அடிப்படையில் பிளவுபடுத்தினர். 1936ல் தனிச்சிங்கள அமைச்சரவையை அமைத்தனர். 1947ல் தமிழ்பேசும் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை ஒழிக்கும் மசோதாவை கொணர்ந்தனர். 1956ல் தனிச்சிங்கள அரச மொழிச் சட்டம் என்ற வகையில் சிங்கள முதலாளித்துவ ஆட்சியாளர்களினால் கொணரப்பட்ட தமிழர் எதிர்ப்பு இனவாத நடவடிக்கைகளை தெளிவுபடுத்துகையில் விஜே டயஸ் பின்வரும் கேள்வியை எழுப்பினார்.

இவை எல்லாம் இடம் பெற்று இருக்கையில் நளின் டி சில்வா, குணதாச அமரசேகர போன்ற இனவாதப் புள்ளிகள் "தமிழ் மக்களுக்கு இடம்பெற்றுள்ள அநீதிகள் தான் என்ன?" என்று கேட்கிறார்கள். "தமிழ் மக்களுக்கு நீதியும் நியாயமும் இட்டுவைக்கப்பட்டது எப்போது?" என நாம் கேட்கின்றோம்.

இலங்கையில் முதலாளிகளின் இனவாத வேலைத்திட்டத்துக்கு எதிரான அரசியல் இயக்கம் இருந்து வந்தது. அது சமசமாஜக் கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட தொழிலாளர் வர்க்க இயக்கமாகும். முதலாளிகள் அன்று பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுடன் சேர்ந்து சமசமாஜக் கட்சியை நசுக்குவதன் மூலம் அந்த இயக்கத்தை ஒழித்துக் கட்ட முயன்றனர். அதற்கு பிரெஸ்கேர்டில் சம்பவம் ஒரு நல்ல உதாரணம். இலங்கைக்கு வந்த அவுஸ்திரேலிய நாட்டவரான பிரெஸ்கேர்டில் சமசமாஜக் கட்சியில் சேர்ந்து அதன் அரசியல் போராட்டத்தில் இணைந்து கொண்டார். அவர் நாவலப்பிட்டியில் தோட்டத் தொழிலாளர்களின் கூட்டத்தில் உரை நிகழ்த்தியதோடு பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் அவரை நாட்டில் இருந்து வெளியேற்றும் உத்தரவை பிறப்பித்தனர். அந்த அடக்குமுறைக்கு எதிராக தொழிலாளர் வர்க்கம், ஒடுக்கப்படும் மக்கள் உட்பட்ட பொதுமக்களை அணிதிரட்டிப் போராடியதன் மூலம் அந்தக் கட்டளையை தோற்கடிப்பதில் அன்று சமசமாஜக் கட்சி வெற்றிபெற்றது."

அவ்வாறே 1947-49ல் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை ஒழித்துக் கட்டும் மசோதாவை எதிர்த்தும் 1956ல் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்தும் சமசமாஜக் கட்சி முன்னெடுத்த போராட்டத்தை விபரித்த விஜே டயஸ் பின்னர் அக்கட்சி மாபெரும் காட்டிக் கொடுப்புக்கு சென்ற விதத்தை விபரிக்கையில் கூறியதாவது:

அந்தப் போராட்டங்களின் தாக்கம் காரணமாக சமசமாஜத் தலைவர் பேர்னாட் சொய்சா இந்த வெள்ளவத்தை பிராந்தியத்தையும் உள்ளடக்கிய கொழும்பு தெற்கு தொகுதியின் எம்.பி.யாக போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் சமசமாஜத் தலைமை 1960பதுகளில் இந்தச் சகல கொள்கைகளையும் காட்டிக் கொடுக்கும் திசையில் பயணம் செய்தது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் பொதித் தீர்வினை நடைமுறைக்கிட பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யும் ஒன்றுபட வேண்டும் எனக் கோரும் ஒரு அறிக்கை சமசமாஜப் பொதுச் செயலாளர் பற்றி வீரக்கோனின் கையொப்பத்துடன் வெளியாகியுள்ளது. தெற்கின் அரசியல் கட்சிகளினால் தாம் காட்டிக் கொடுக்கப்பட்டு விட்டதாக தமிழ் மக்கள் கருதுவதை வீரக்கோன் மூடிமறைக்க முயன்றாலும் 1964ல் சமசமாஜக் கட்சி முதலாளித்துவ சி.ல.சு.க.வுடன் கூட்டரசாங்கம் அமைக்கச் சென்றதன் மூலம் இழைத்த மாபெரும் காட்டிக் கொடுப்பு இதன் மூலம் அம்பலமாகின்றது.

## நவசமசமாஜக் கட்சியின் செயற்பாடு

இந்தக் காட்டிக் கொடுப்பின் பின்னர் சமசமாஜக் கட்சியின் கடந்தகாலப் பாரம்பரியங்களை தாமே முன்னெடுப்பதாகக் கூறிக் கொண்டு சமசமாஜக் கட்சி தனது கடந்தகால போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களிடையே கொண்டிருந்த ஆளுமையை சுரண்டிக் கொள்ள நவசமசமாஜக் கட்சி முயற்சிக்கின்றது. நவசமசமாஜத் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன கொழும்பு மாநகரசபை அங்கத்தவராக வலம் வருவது சிறப்பாக இந்த வெள்ளவத்தை பகுதி தமிழ் மக்கள் உட்பட்ட மக்களை ஏமாற்றி, அவர்களின் வாக்குக்களை சூறையாடிக் கொண்டதன் மூலமேயாகும். சோ.ச.க.மிகவும் விசுவாசமான விதத்தில் தமிழ் மக்களை தொடர்ந்தும் நவசமசமாஜக் கட்சியின் அத்தகைய மோசடிகளுக்கு ஏமாந்து போய்விட வேண்டாம் என எச்சரிக்கின்றது. சமசமாஜக் கட்சியின் இனவாத எதிர்ப்பு உட்பட்ட கொள்கைப்பிடிப்பான பழைய மரபுகளை முன்னெடுத்துச் செல்வது சோ.ச.க.வேயாகும்.

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காப்பது தொடர்பாக சோ.ச.க.வுக்கும் அதன் முன்னோடியான பு.க.க.வுக்கும் இருந்து கொண்டுள்ள நீண்ட வரலாறு சம்பந்தமாக பல உதாரணங்களைக் குறிப்பிடுகையில் விஜே டயஸ் கூறியதாவது:

1972ல் கூட்டரசாங்க அரசியலமைப்புச் சட்ட அமைச்சர் சமசமாஜத் தலைவர் கொல்வின் ஆர் டி சில்வா வரைந்த சிங்கள-பௌத்த சோவினிச அரசியலமைப்புக்கு எதிரான போராட்டத்தில் பு.க.க.வே முன்னணியில் நின்றது. அந்த அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராக குரல் கொடுத்த முதலாவது வெகுஜன தொழிலாளர் வர்க்க அமைப்பு அன்று பு.க.க.வின் தலைமையில் இருந்த அரசாங்க அச்சக ஊழியர் சங்கமேயாகும். அந்த எதிர்ப்புக்கு சமசமாஜக் கட்சி காட்டிய பிரதிபலிப்பு என்ன தெரியுமா? சமசமாஜக் கட்சியின் தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைந்திருந்த அரசாங்க அச்சக ஊழியர் சங்கத்தை வெளியேற்றியதேயாகும். அரசாங்க அச்சக ஊழியர் சங்கத்தை மீண்டும் சமசமாஜ தொழிற்சங்க சம்மேளனத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என பு.க.க.முன்னெடுத்த போராட்டத்தின் மூலம் இனவாத அரசியலமைப்புக்கு எதிரான தனது போராட்டத்தை பரந்த தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே முன்னெடுத்தது.

1974ல் பல்கலைக்கழக அனுமதியின் பேரில் கொணர்ந்த தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் உரிமைகளை பிடுங்கிக் கொள்ளக் கூட்டரசாங்கம் நடவடிக்கை எடுத்த வேளையில் அந்த இனவாத நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டத்திலும் முன்னணியில் நின்றது பு.க.க.வே. 1977ல் யூ.என்.பி.ஆட்சிக்கு வந்ததும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதக் காடையர் தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது தமிழ் மக்களைக் காக்கும் பிரச்சாரத்தில் பு.க.க.முன்னணியில் நின்றது. அச்சமயத்தில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் யூ.என்.பி.யின் வெற்றியுடன் அடியோடு அடிபணிந்து போனதோடு தமது கட்சிப் பத்திரிகைகளையும் நிறுத்திக் கொண்டுவிட்டன. பு.க.க. கம்கறு மாவத்த, தொழிலாளர் பாதை பத்திரிகைகளைத் தொடர்ந்து வெளியிட்டதோடு தமிழ் மக்களைக் காக்கும் பிரச்சாரத்தை அப்பத்திரிகைகள் மூலம தொழிலாளர் வர்க்கம், ஒடுக்கப்படும் மக்களிடையே முன்னெடுத்தது.

1978ல் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான யூ.என்.பி. அரச காடையர்களின் தாக்குதல்களுக்கும் 1983 கறுப்பு ஜூலையின் தமிழர் எதிர்ப்பு மக்கள் படுகொலைகள், சொத்து அழிப்புக்களுக்கும் எதிராக பு.க.க. முன்னெடுத்த பிரச்சாரத்தை விஜே டயஸ் இந்த வெள்ளவத்தை கூட்டத்தில் நினைவுகூர்ந்தார்.

1983 ஜூலையில் இனவாதிகளின் இலக்காக விளங்கியதும் அன்று வெள்ளவத்தையில் இருந்ததுமான பு.க.க.தலைமையத்தையும் அச்சகத்தையும் அப்பிரதேச மக்கள் காடையர்களிடமிருந்து பாதுகாத்தது எப்படி என்பதை விஜே டயஸ் விளக்கினார். ஆனால் கம்கறு மாவத்த, தொழிலாளர் பாதை பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தோழர்.கே.ரத்னாயக்கவின் வீடும் பெறுமதிவாய்ந்த நூலகமும் குண்டர்களால் தீக்கிரையாக்கப்பட்ட விதத்தை விஜே டயஸ் தெளிவுபடுத்தினார்.

தமிழ் மக்களின் ஜனநாய உரிமைகளைக் காக்கும் போராட்டத்தில் முன்நின்றதன் காரணமாக பு.க.க.வும் சோ.ச.க.வும் அந்த விதத்தில் நஷ்டஈடு செலுத்த நேரிட்டது. 1983 ஜூலை தமிழர் எதிர்ப்பு மக்கள் படுகொலைகளுடன் யூ.என்.பி.அரசாங்கம் தனிநாடு கோரிக்கையைச் சட்டவிரோதமாக்கும் 6வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை கொணர்ந்தது. அன்று அதைச் சவால் செய்தது பு.க.க.மட்டுமே. அந்தப் பிரச்சாரத்தின் காரணமாக 1984ல் கம்கறுமாவத்த, தொழிலாளர் பாதை பத்திரிகைகளின் பதிப்பாளராக விளங்கிய ஆனந்த வக்கும்புரவைக் கைது செய்து வழக்குத் தாக்கல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அந்த அடக்குமுறைக்கு எதிராக பு.க.க.முன்னெடுத்த அரசியல், சட்ட நடவடிக்கைகளினால் வக்கும்புரவுக்கு எதிரான வழக்கை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றுக் கொள்ள நேரிட்டது.

1987ல் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் இடம்பெற்ற இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் எதிரில் விடுதலைப் புலிகளும் பிரபாகரனும் அடிபணிந்து போய்க் கிடந்த நிலையில் பு.க.க.மட்டுமே இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கும் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கும் எதிராக தொழிலாளர் வர்க்க கொள்கையின் அடிப்படையில் போராடியது. அன்று ஜே.வீ.பி.தமிழர் எதிர்ப்பு இனவாத அடிப்படையில் ஒப்பந்தத்தை எதிர்க்கும் போது நவசமசமாஜக் கட்சியினர் அந்த ஒப்பந்தத்துக்கு ஆதரவு வழங்கினர்.

இந்த பிற்போக்காளர்களை அரசியல் அரங்கில் இருந்து ஒழித்துக் கட்ட வேண்டும். ஒரு கொள்கைப்பிடிப்பான கட்சி என்ற வகையில் சோ.ச.க.வினால் மட்டுமே அதன் 30 வருட கால வரலாற்றையிட்டுப் பெருமைப்பட முடியும்.

விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட எமது தோழர்கள் அஞ்சா நெஞ்சத்துடன் தீபன், ரவி மாஸ்டர் போன்ற விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் தாம் சோ.ச.க.வினதும் அனைத்துலகக் குழுவினதும் அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் காலூன்றி நிற்பவர்கள் என்பதை உறுதியுடன் வலியுறுத்தினர். உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தின் கீழ் தேசியவாத வேலைத்திட்டங்கள் பிற்போக்காகி வங்குரோத்தடைந்துள்ளதை அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

பல்லாண்டுகளாக சோசலிச அனைத்துலகவாத வேலைத் திட்டத்துக்காக முன்னெடுக்கும் உறுதியான போராட்டம் இல்லாமல் அத்தகைய ஒரு உறுதியான காரியாளர்களை உருவாக்க முடியாது. நாம் அத்தகைய காரியாளர்களை சிருஷ்டித்துள்ளோம். மனித இனத்தின் எதிர்காலம் அத்தகைய காரியாளர் மீதே தங்கியுள்ளது. அந்த சோசலிச அனைத்துலகவாத முன்னோக்கை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே முன்னெடுக்கும் ஒரு போராட்டத்தின் பாகமாகவே நாம் நான்கு தோழர்களையும் விடுதலைப் புலிகளின் கைதில் இருந்து விடுதலை செய்யும் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

இந்தக் கூட்டத்தை கட்டியெழுப்ப இப்பிரதேச மக்களிடையே சோ.ச.க. முன்னெடுத்த பிரச்சாரத்தினுள் தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளை விலைக்கு வாங்கியும், பிரச்சார நிதிக்கு உதவியும், சோ.ச.க. பெட்டிசத்தில் ஒப்பமிட்டும் ஆதரவு வழங்கிய பிரதேச மக்களுக்கும் நன்றி தெரிவித்த விஜே டயஸ், சோ.ச.க.வுடன் சேர்ந்து சோசலிச அனைத்துலகவாத முன்னோக்கையும் வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்கும் போராட்டத்தின் பங்காளிகளாகும்படி கூட்டத்திற்கு வருகை தந்திருந்தவர்களை வேண்டிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலைப் புலிகளின் கைதில் இருந்து விடுதலை செய்யும் அனைத்துலகப் பிரச்சாரம்

## சோ.ச.க.பிரச்சாரத்துக்கு எதிராக முதலாளித்துவ தொடர்பு சாதனங்கள் பொய்ப் பிரச்சாரம்

தமிழீழ விடுதலைப் புலிகள் சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களை கைது செய்ததை எதிர்த்து அக்டோபர் 4ம் திகதி பதுளை நகரில் சோ.ச.க. ஏற்பாடு செய்திருந்த மறியல் போராட்டத்தை சீர்குலைப்பதில் இனவாதிகள் ஈடுபட்டனர். இவர்களுக்கு பொலிசாரின் ஆதரவும் கிடைத்தது. இச்சம்பவத்தின் பின்னர் இதை அடிதலையாக மாற்றவும் அதற்குச் சேறடிக்கவும் சிங்கள இனவாதக் குண்டர்களும் பொலிசாரும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இறங்கின.

அக்டோபர் 6ம் திகதிய திவயின பத்திரிகையில் "புலிகளுக்கு ஆதரவு வழங்கப் போய் வாங்கிக் கட்டாது நூலிழையில் தப்பினர்" என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

முதல் பக்கத்தில் வெளியான இச்செய்தியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக மறியல் நடாத்த ஆயத்தமான சோ.ச.க.அங்கத்தவர்கள் நகரவாசிகளின் எதிர்ப்பு வெளிக்கிளம்பிய நிலையில் ஓட்டம் எடுத்ததாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது. அக்டோபர் 5ம் திகதி ரூபவாஹினியின் சிங்கள, ஆங்கில செய்தி அறிக்கைகளும் ரீ.என்.எல். செய்தி அறிக்கைகளும் அக்டோபர் 4ம் திகதி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான குழு பதுளை நகரில் நடாத்திய மறியல் பிரச்சாரத்துக்கு பொதுமக்களின் எதிர்ப்பு கிளம்பியதாக குறிப்பிட்டன.

இந்தச் செய்திகள் உண்மையை தலைகீழாக புதைப்பதாக இருந்தன. சோ.ச.க.அன்றைய தினம் பதுளையில் மறியல் மட்டுமன்றி வை.எம்.பீ.ஏ. மண்டபத்தில் பகிரங்கக் கூட்டமும் நடாத்த ஏற்பாடு செய்து இருந்தது.

சோ.ச.க.அங்கத்தவர்களை விடுதலைப் புலிகள் கைது செய்ததற்கு எதிராக இடம்பெறும் பிரச்சார இயக்கத்தின் ஒரு பாகமாக "சோ.ச.க.அங்கத்தவர்களை விடுதலை செய்ததை விடுதலைப் புலிகள் ஊர்ஜிதம் செய்ய வேண்டும்." "சோ.ச.க. ஜனநாயக உரிமைகளைக் காப்பாற்று!" என்ற இரண்டு முக்கிய சுலோகங்களின் அடிப்படையில் இந்த மறியலும் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இந்தக் கூட்டம், மறியல் சம்பந்தமான பிரச்சார சுவரொட்டிகள் பதுளை நகரத்திலும் சுற்றுப்புறங்களிலும் சோ.ச.க.வினால் முன்கூட்டியே ஒட்டப்பட்டு இருந்தது. அத்தோடு சோ.ச.க. அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் வீட்டுக்கு வீடு சென்று பிரச்சாரமும் செய்திருந்தனர்.

சோ.ச.க.மறியல் பிரச்சாரம் இடம்பெற்று வருகையில் அதனுள் பாய்ந்து விழுந்த இனவாதக் குண்டர்கள், மறியல் செய்தால் தாக்குவதாக பயமுறுத்தினர். இதன்மூலம் மறியலை நிறுத்த முயற்சித்தனர். இவர்கள் இதன் ஒரு பாகமாக அங்கு பொலிசாரையும் தருவித்தனர். சோ.ச.க.கிளிநொச்சி அங்கத்தவர்கள் நால்வர் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டது பற்றியும் அவர்களை விடுதலை செய்ய இடம்பெறும் பிரச்சாரம் பற்றியும் அதைக் குழப்ப குண்டர்கள் எடுக்கும் முயற்சி பற்றியும் சோ.ச.க.அமைப்பாளர்கள் பொலிசாருக்கு முறைப்பாடு செய்தனர். ஆனால் சிங்கள இனவாதக் குண்டர்களுக்கு ஆதராவாக நின்று கொண்ட பொலிசார், மறியல் பிரச்சாரத்தை நிறுத்தி, கலைந்து செல்லும்படி வேண்டினர். இல்லாது போனால் கைது செய்யவேண்டி நேரிடும் எனவும் பொலிசார் பயமுறுத்தினர்.

மறியலைத் தொடர்ந்து இடம்பெற இருந்த பகிரங்கக் கூட்டத்துக்கு செல்ல வேண்டி இருந்ததால் சோ.ச.க.அங்கத்தவர்கள் மறியல் பிரச்சாரத்தை நிறைவு செய்து, தமக்கு எதிரான பயமுறுத்தலில் இறங்கிய இனவாதக் குண்டர்களை பற்றி பொலிசில் முறைப்பாடு செய்தனர்.

ஆனால் சோ.ச.க. திட்டமிட்டபடி அன்று மாலை பதுளை வை.எம்.பீ.ஏ. மண்டபத்தில் நடாத்த இருந்த கூட்டத்தை தடை இல்லாது நடாத்துவதில் வெற்றி கண்டது. நிலைமை இப்படி இருக்கையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக மறியல் செய்த சோ.ச.க.அங்கத்தவர்கள் பொதுமக்களின் எதிர்ப்பின் மத்தியில் ஓட்டம் பிடித்ததாக முதலாளித்துவ வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் குறிப்பிட்டன.

எமது அங்கத்தவர்களை விடுதலைப் புலிகள் கைது செய்ததற்கு எதிராக முன்னெடுத்த பிரச்சாரத்துக்கு இலங்கையினுள்ளும் அனைத்துலக ரீதியிலும் தொழிலாளர், மனித உரிமை அமைப்புக்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள், ஜனநாயக உரிமைகளைக் கௌரவிப்போர் வழங்கிய பேராதரவு சிங்கள இனவாத பிற்போக்காளர்களின் ஆத்திரத்தைக் கிண்டி விட்டுள்ளது.

பதுளையில் இனவாத குண்டர்களின் ஆத்திரமூட்டல்களுக்கும் பொலிசாரின் தொழிற்பாடுகளுக்கும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் திரிப்புக்களுக்கும் இடையே நெருங்கிய உறவு இருந்து கொண்டுள்ளது.

'தினக்குரல்' பத்திரிகை இந்த பொய் திரிப்புக்களை பற்றிய உண்மை நிலையை கண்டறிய சோ.ச.க. பொதுச் செயலாளருடன் தொடர்பு கொண்டதோடு அதன் உண்மைநிலையை அக்டோபர் 6ம் திகதி வெளியிட்ட அறிக்கையில் தெளிவுபடுத்தி இருந்தது..அவ்வாறே 'மிட்வீக் மிரர்' பத்திரிகையும் பொதுச் செயலாளரின் அறிக்கை உள்ளடங்கிய அறிக்கையை அக்டோபர் 07ம் திகதி வெளியிட்டு இருந்தது.

## பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவு தந்தவர்களுக்கு அமெரிக்க சோ.ச.க.நன்றி கூறுகின்றது

இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து விடுவிக்க இடம்பெற்ற அனைத்துலக பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவளித்த அமைப்புக்களுக்கும் தனிநபர்களுக்கும் நன்றி கூறி அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சி கீழ்க்காணும் கடிதத்தை வெளியிட்டுள்ளது:

1998 10 06

அன்பின் ஐயா/ அம்மணி

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் கைது செய்யப்பட்டிருந்த சோ.ச.க.அங்கத்தவர்கள் சகலரையும் விடுதலை செய்துள்ளதாக கிடைத்த அறிக்கையை ஊர்ஜிதம் செய்வதில் இலங்கை சோ.ச.க.வெற்றி கண்டுள்ளது. திருஞானசம்பந்தன், காசிநாதன் நகுலேஸ்வரன், இராஜேந்திரம் சுதர்சனும் சுமார் 50 நாட்கள் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டதன் பின்னர் செப்டம்பர் 13ம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். இராஜரத்தினம் இராஜவேல் 17 நாட்கள் தடுத்துவைக்கப்பட்டதன் பின்னர் செப்டம்பர் 16ம் திகதி விடுதலையானார்.

நான்கு சோ.ச.க.அங்கத்தவர்களும் சுகத்துடன் இருப்பதாகத் தெரிகின்றது விடுதலைப் புலிகளால் அவர்கள் விசாரணை செய்யப்பட்ட காலப்பகுதியினுள் அவர்களில் எவரும் சித்திரவதைகளுக்கோ அல்லது துன்புறுத்தல்களுக்கோ இலக்காகவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு தெற்கில் உள்ளதும் இந்த பிரிவினைவாத கெரில்லா இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதுமான கிளிநொச்சிப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டவர்கள் நான்கு அங்கத்தவர்கள் மட்டுமேயென்றும் முன்னர் நினைத்ததுபோல் ஐவர் அல்ல எனவும் ஊர்ஜிதம் செய்வதில் சோ.ச.க.வெற்றி கண்டுள்ளது.

இக்கடிதத்தின் நோக்கம் எமது தோழர்களின் விடுதலையை வெற்றி கொள்வதில் கிடைத்த உங்களின் ஒத்துழைப்புக்கு நன்றி கூறுவதேயாகும்.தமது சோசலிச அரசியல் எதிர்ப்பாளர்களை ஒடுக்கும் விடுதலைப் புலிகளின் முயற்சி, உலகம் பூராவும் உள்ள தமிழ் மக்களினதும் தமிழ் மக்களது போராட்டத்தின் ஆதரவாளர்களதும் கண்களின் எதிரில் அவமானத்துக்கு உள்ளாக மட்டுமே உதவும் என்பதை விடுதலை புலிகளுக்கு புரியவைப்பதில் மனித உரிமைகள், தொழிலாளர், தமிழ் அமைப்புக்களினதும் அக்கறை கொண்டவர்களதும் இலங்கையிலும் உலகம் பூராவும் வேண்டுகோள்கள் தீர்க்கமான பாத்திரத்தை இட்டுநிரப்பியுள்ளது என்பதில் சர்ச்சைக்கு இடம் இல்லை.

சோ.ச.க.அங்கத்தவர்களை விடுதலை செய்யும்படி விடுதலைப் புலிகளை வேண்டும் அறிக்கைகள் உலகின் நாலாபுறத்தில் இருந்தும் அவுஸ்திரேலியா, இந்தியா, யப்பான், மலேசியா, ரூஷ்யா, கிழக்கு ஐரோப்பா, தென் அமெரிக்கா-பெருக்கெடுத்து வந்தன. விடுதலைப் புலிகள் தடுத்து வைத்திருந்த தமிழ் சோசலிஸ்டுகளின் சார்பில் பெட்டிசங்களில் கையொப்பம் இட்ட, அறிக்கை வெளியிட்டவர்களிடையே மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள் (Human Rights Watch) பிரித்தானிய தொழிற்சங்க காங்கிரசின் 200க்கும் அதிகமான பேராளர்கள், பிரித்தானிய, அவுஸ்திரேலிய தொழிற்கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்கள், அவுஸ்திரேலிய நியூசவுத்வேல்ஸ் ஆசிரியர் காங்கிரசின் விக்டோரியா மாநில கிளைத் தலைவர், இந்திய மேற்கு வங்காள சணல் தொழிலாளர் அமைப்பு என்பன அடங்கும். அம்னாஸ்டி இன்டர்நஷனல் அவசர செயற்பாட்டுக்கான அமைப்பு மூலம் இதற்கு அழைப்பு விடுத்தது.

சிங்கள இனவாதத்துக்கும் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசு நடாத்தும் யுத்தத்துக்கும் எதிரான சோ.ச.க.வரலாறு பிரசித்தமான இலங்கையினுள் தொழிலாளர் வர்க்க அமைப்புக்கள் பலவும் சோ.ச.க.வுக்கு எதிரான ஒடுக்குமுறை நடவடிக்கைகளை நிறுத்தும்படி விடுதலைப் புலிகளை வேண்டும் அறிக்கைகளை வெளியிட்டன. அவற்றுள் இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், வர்த்தக, கைத்தொழில் ஊழியர் சங்கம், சோசலிஸ்டுகள் எனக் கூறிக்கொள்ளும் கட்சிகளுள் இலங்கையின் பழையதும் பெரியதுமான அரசியல் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியும் அடங்கும்.

விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டிருந்த சோ.ச.க. அங்கத்தவர்கள் தாம் விடுதலையானது பற்றித் தெரியப்படுத்த சோ.ச.க. தலைமைக்கு எழுதிய கடிதங்களில் தமது பாதுகாப்பை காக்க முன்வந்த சகலருக்கும் சிறப்பாக வெளிநாட்டவர்களுக்கு தமது நன்றியைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்ட தமிழ் சோசலிஸ்டுகள் விடுதலை செய்யப்பட்டதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைவதோடு சோ.ச.க.வின் ஜனநாயக உரிமைகளையும் அதன் அங்கத்தவர்களதும் ஆதரவாளர்களினதும் சிவில் உரிமைகளையிட்டு தொடர்ந்து விழிப்புடன் இருப்பது அவசியம். தமது சோசலிச அனைத்துலகவாத வேலைத்திட்டத்தை தமிழ் மக்களுக்கு முன்வைக்கையில் சோ.ச.க.வுக்கு உள்ள ஜனநாயக உரிமைகளை இனிமேல் மீற மாட்டோம் என உத்தரவாதம் செய்ய வேண்டும் என்ற சோ.ச.க.வின் கோரிக்கையையிட்டு வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமையோ அல்லது வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் அதிகாரிகளோ அக்கறைப்படவில்லை.

அதுமட்டுமன்றி நான்கு சோ.ச.க. அங்கத்தவர்களையும் சட்டவிரோதமாகக் கைது செய்து தடுத்து வைத்ததற்கு எந்தவிதமான காரணமும் காட்டாதது மட்டுமன்றி, அவர்களைத் தடுத்து வைத்திருந்ததைத் தன்னும் இதுகாறும் ஒப்புக்கொண்டில்லை.

சோ.ச.க.வுக்கும் அதன் முன்னோடியான பு.க.க.வுக்கும் சிங்கள சோவினிசத்துக்கு எதிராகவும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பது சம்பந்தமாகவும் போராடிய நீண்டதும் பெருமைமிக்கதுமான வரலாறு உண்டு. சோ.ச.க. வடக்கு கிழக்கு மக்களுக்கு எதிராக இலங்கை அரசு நடாத்திவரும் யுத்தத்தினை உறுதியாக எதர்த்து வந்துள்ளது. அத்தோடு தமிழ் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட பகுதிகளில் இருந்து அரசாங்கப் படைகளை அடியோடு வாபஸ்பெற வேண்டும் எனவும் அது கோருகின்றது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சி சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்துக்கான போராட்டத்தினுள் சிங்கள தமிழ் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஒன்றிணைக்கப் போராடுகின்றது.

தமிழ் சோசலிஸ்டுகளின் விடுதலையை வெற்றி கொள்ளும் அனைத்துலகப் பிரச்சாரம், சோ.ச.க.அரசியல் வரலாறு, தமிழ் மக்களின் போராட்டம் இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார நிலை பற்றிய மேலாய தகவல்களை உலக சோசலிச வெப் நிலையத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.(WSWS)

நான் மீண்டும் உங்களின் ஆதரவுக்கு நன்றி கூறுகின்றேன்.

இங்ஙனம்,

உங்கள் அன்புள்ள,

லரி றொபேட்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா.வின் இரண்டு அறிக்கைகள்

# வறுமையினதும் சுகாதார நிலைமையின் சீரழிவையும் அம்பலமாக்குகின்றது

உலக சுகாதார நிறுவனத்தின்(    ) அறிக்கை கடந்த 50 வருட காலப்பகுதிக்குள் உலக சனத்தொகையின் சுகாதார, நலன்புரிச் சேவைகளையும் அவ்வாறே அடுத்துவரும் 25 ஆண்டுகளுக்கான எதிர்வு கூறல்களையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. சுகாதாரக் காப்பீடுகள் தொடர்பான பிரச்சினை முன்னேறிய கைத்தொழில் நாடுகளில் ஆழமாகியுள்ள பொருளாதார நெருக்கடியின் பெறுபேறுகள் எனக் காட்டும் பல அடையாளங்கள் அறிக்கையில் உள்ளன. கடந்த ஆண்டில் ஐரோப்பாவில் வாழ்க்கை எதிர்பார்ப்புக்கள் சரிந்து போனமை பல தசாப்தங்களுக்கு பின்னர் முதல் தடவையாக இடம்பெற்ற ஒன்றாக உலக சுகாதார நிறுவனம் அறிக்கை செய்கின்றது. பழைய ஸ்டாலினிச ஆட்சிகள் நிலவிய நாடுகளில் வேகமான வறுமை வளர்ச்சி கண்டமையும் தொற்று நோய்களின் பரம்பலும் காரணமாக வாழ்க்கை எதிர்பார்ப்புக்கள் உலகளாவிய ரீதியில் வீழ்ச்சி கண்டுள்ளது. இந்தப் பின்னடைவுகள் தொடர்ந்து 20 ஆண்டுகள் வாழ்க்கை தரம் உயர்ந்து கொண்டு வந்த நாடுகளிலேயே இடம்பெற்றுள்ளது.

பூகோள ரீதியில் முழு சுகாதார தரம் கடந்த பல ஆண்டுகளாக சீக்கிரம் வளர்ச்சி கண்டுள்ள போதிலும் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையேயான சுகாதார இடைவெளி அரை நூற்றாண்டுக்கு முன்னர் இருந்ததைக் காட்டிலும் பெரிதும் அகன்று போய் உள்ளது. முன்னேறிய நாடுகளில் தொற்று நோய்களைக் காட்டிலும் பெரிதும் காணப்படுவது இருதய நோய், புற்று நோய், சலரோகம், உளநோய் போன்றவையாகும்.

பூகோள ரீதியில் வாழ்க்கை எதிர்பார்ப்புக்கள் அதிகரித்ததாக இந்த அறிக்கை குறிப்பிட்டாலும் இன்று ஏழை நாடுகளின் சனத்தொகையில் 3/4 பங்கினர் 50 வயதை அடைவதற்கு முன்னர் இறந்து போய்விடுகின்றனர். இது அரை நூற்றாண்டுக்கு முன்னர் இருந்த உயிர் வாழ்க்கை காலத்துக்கு சமமானதாகும்.

இந்த ஆண்டில் உலகளாவிய ரீதியில் 21 மில்லியன் மக்கள் இறந்துள்ளனர். இதில் 2/5 பங்கினர் தமது முதலாவது பிறந்த தினத்தையும் காண முடியாது போன 10 மில்லியன் குழந்தைகள் உட்பட்ட- 50 வயதுக்கு முன்னரே இறந்தவர்கள். 300 மில்லியன் மக்கள் வாழும் 16 நாடுகளில் உயிர் வாழ்க்கை காலம் 1975-1995க்கும் இடைப்பட்ட காலத்தில் பெரிதும் குறைந்துள்ளது.

1997ல் உலக மரண எண்ணிக்கை 52.2மில்லியன்களாகும். இதில் 17.3 மில்லியன் மக்கள் தொற்று நோய்களாலும் ஒட்டுண்ணி நோய்களாலும் இறந்துள்ளனர். 15.3 மில்லியன் மக்கள் தொற்று நோயினாலும் 6.2 மில்லியன் மக்கள் புற்று நோயினாலும் 2.9 மில்லியன் காசநோயினாலும் 2.3மில்லியன் எயிட்ஸ் நோயினாலும் 1.5-1.7 மில்லியனுக்கும் இடைப்பட்டோர் மலேரியாவினாலும் இறக்கின்றனர்.

5வயதுக்கு குறைவான சிறுவர்களில் நூற்றுக்கு 50 வீதத்தினர் போஷாக்கின்மை சம்பந்தமான நோய்களால் இறக்கின்றனர். இந்த வயதிலான சிறுவர்களின் மரணத்தில் 2 மில்லியன்களை தடுப்பு ஊசி ஏற்றுவதன் மூலம் தவிர்த்துக் கொள்ள முடியும்.

20-64 வயதுக்கும் இடைப்பட்ட வயது வந்தவர்களில் 15 மில்லியன் பேருக்கும் அதிகமானோர் ஆண்டு தோறும் இறந்து போகின்றார்கள். இந்த மரணங்களில் பெரும்பாலானவை தடுக்கக் கூடியவையாகும். அகால மரணங்களில் சுமார் 585000 மரணங்கள் கர்ப்பிணிப் பெண்களிடையே இடம்பெற்றுள்ளது. இந்த அகால மரணங்கள் (கர்ப்பிணி) ஐரோப்பாவில் 1400க்கு ஒன்றாக உள்ளது. ஆசியாவில் 65 கர்ப்பிணிகளுக்கு ஒருவர் இறக்கும்போது ஆபிரிக்காவில் இந்த வீதாசாரம் 16 கர்ப்பிணிகளுக்கு ஒன்றாக உள்ளது.

இன்று குழந்தைகள் முகம் கொடுக்கும் புதிய சீரழிவுகளுக்கு நோயாளிகளாகும் நிலைமைகள் துரித நகரமயமாக்கத்தைப் புறக்கணித்தல், முறைகேடான பயன்பெறுதல், வன்முறைகள் உட்பட்ட சமூக, பொருளாதார பாகுபாடுகளுடன் பிணைந்துள்ளது. சிறப்பாக இதற்குப் பெருமளவில் முகம் கொடுப்போர் சேரிக் குழந்தைகளாவர். எதிர்வரும் 21ம் நூற்றாண்டில் சிறுவர்கள் பலியாகும் கொடிய கெடுதிகளில் ஒன்றாக விரைந்து பரவிவரும் எயிட்ஸ் நோய் விளங்கும். 1997ல் 15 வயதுக்குக் குறைவான 590000 சிறுவர்கள் எச்.ஐ.டி.கிருமிக்கு இலக்காகியுள்ளனர். கடந்த 50 வருடங்களாக சிறுவர் நலனை உத்தரவாதம் செய்வதில் பெரும் முன்னேற்றம் கண்ட சிலவற்றை இந்நோய் பின்வாங்க செய்யும்.

எதிர்வரும் சில வருடங்களில் சிறுவர் வயதில் இருந்து வளர்ந்தோர் வயதுக்கு இடைமருவுவதானது கடமைகளைத் தட்டிக்கழித்தல் போதைப் பொருட்கள், மதுவகைகள், மோட்டார் வாகன விபத்து, பாலுறவு தொந்தரவுகளைக் குறிக்கும். சிறப்பாக வறுமையால் பீடிக்கப்பட்ட நகர்ப்புற மாகாணங்களில் வளர்பவர்களில் இளம் வயதினர் வாழ்க்கையின் பெரிதும் ஆபத்தான ஆண்டுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

65 வயதைத் தாண்டிய வயது வந்தவர்களின் சனத்தொகை 1997ல் 390 மில்லியன்களில் இருந்து 2025ம் ஆண்டளவில் 800 மில்லியன்களாக-அதாவது, முழுச் சனத்தொகையில் 6.6 வீதத்தில் இருந்து 20 வீதமாக அதிகரிக்கும். அரச நலன்புரிச் சேவைகளை ஒழித்துக் கட்டுவதன் மூலம் எதிர்வரும் காலப்பகுதியில் வயது முதிர்ந்த மக்களுக்கு அவசியமான வைத்திய சமூக நலன்புரி வசதிகள் பெருமளவில் குறைக்கப்படும். இதனால் அவர்கள் பேரழிவுக்குள் தள்ளப்படுவர்.

பூகோளமயத்தின் வளர்ச்சியினதும் துரித நகர்மயமாக்கத்தின் மோதலுடனும் மக்களின் வாழ்க்கையில் உலகளாவிய ரீதியிலான தடுமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1995ல் 2800கோடியாக இருந்த உலக ஜனத்தொகை இன்று 5800 கோடிகளாகியுள்ளது. 1955ல் கிராமப்புறங்களில் ஜனத்தொகையில் நூற்றுக்கு 68 வீதமானோர் வாழ்ந்தனர். நகர்ப்புறத்தில் நூற்றுக்கு 32 வீதமானோர் வசித்தனர். 1995ல் இந்த வீதாசாரம் கிராமப்புறத்தில் நூற்றுக்கு 55வீதமாகவும் நகர்ப்புறத்தில் நூற்றுக்கு 45வீதமாகவும் மாறியது. 2025ம் ஆண்டளவில் கிராமப்புற ஜனத்தொகை நூற்றுக்கு 41வீதமாகவும் நகர்ப்புற ஜனத்தொகை நூற்றுக்கு 59 வீதமாகவும் மாறும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்தப் புள்ளிவிபரங்கள் மூலம் காட்டப்பட்ட பிரச்சினைகளை இலாப அமைப்பினுள் தீர்த்துவைக்க முடியும் என்ற மகிழ்ச்சியுடன் உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை நிறைவு பெறுகின்றது. அங்கு "மாபெரும் பொருளாதார நெருக்கடி" இல்லாது இருப்பதோடு பொருளாதார விரிவாக்கத்தின் மூலம் 2025ம் ஆண்டளவில் நாம் இப்போது முகம் கொடுக்கும் பல சமூகப் பிரச்சினைகளை வெற்றி கொள்ள முடியும் என இந்த அறிக்கை எதிர்வு கூறுகின்றது.

### ஐ.நா.வின் மனித அபிவிருத்தி அறிக்கை

பின்தங்கிய நாடுகளுக்கும் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையேயும் அவ்வாறே செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையேயும் பாரிய அளவிலான துருவப்படுத்தல் இருந்து கொண்டுள்ள விதத்தை ஐக்கிய நாடுகளின் மனித அபிவிருத்தி அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

உலக நுகர்வு 20ம் நூற்றாண்டில் முன்னர் ஒருபோதும் இல்லாத விதத்தில் விரிவடைந்து 1998ல் தனியார் பொதுஜன நுகர்வுச் செலவு 24 ட்ரில்லியன் டாலர்களை எட்டியுள்ளது. இது 1975ம் ஆண்டினைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகரிப்பாகும். 1950ஐக் காட்டிலும் ஆறு மடங்கு அதிகரிப்பாகும்.



கோடானு கோடி இந்திய சேரி வாசிகளில் ஒரு குடும்பம்

கைத்தொழில நாடுகளில் தனிநபர் நுகர்வுச் செலவு எதிர்வுகள் வேகமாக அதிகரித்துள்ளது. (கடந்த 25 ஆண்டுகளில் வருடாந்தம் 2.3 சதவீதத்தில் அதிகரித்துள்ளது.) இதற்கு முரண்பட்ட விதத்தில் உலக ஜனத்தொகையின் வறுமை உலக நுகர்வு மட்டத்தில் நூற்றுக்கு 20 வீதத்தை நாசமாக்கியுள்ளது. உதாரணமாக ஆபிரிக்காவில் நுகர்வு 25 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததைவிட நூற்றுக்கு 20 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.

சனத்தொகையில் 100கோடிக்கும் அதிகமானவர்களுக்கு அடிப்படை நுகர்வுக்கு அவசியமானவை இல்லாது போயுள்ளது. பின்தங்கிய நாடுகளில் 4.4 பில்லியன் சனத்தொகையில் சுமார் 3/5 பங்கினர் அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாது உள்ளனர். சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினருக்கு சுத்தமான நீர் இல்லாது உள்ளது. 1/ 4 பங்கினருக்கு போதுமான வீட்டு வசதிகள் கிடையாது. சனத்தொகையில் 1/5 பங்கினருக்கு போஷாக்கு நிறைந்த உணவு கிடையாது உள்ளதோடு நவீன சுகாதார சேவைகளுக்கான வாய்ப்பும் இல்லாது போயுள்ளது. சிறுவர்களில் 1/5 பங்கினர் பாடசாலை கல்வியில் உரிய வயதில் ஈடுபடுவதில்லை.கைத்தொழில் நாடுகளின் 55மில்லியன் மக்கள் உட்பட உலகளாவிய ரீதியில் 2.2 பில்லியன் மக்கள் இரத்தச் சோகையினால் பீடிக்கப்பட்டுள்ளனர். பின்தங்கிய நாடுகளில் மோட்டார் வாகன போக்குவரத்து, தொலைத் தொடர்பு, நவீன எலெக்ரொனிக் வசதிகளைப் பெறுவோர் -வசதி வாய்ப்புக்கள் படைத்த ஒரு சிறு தொகையினரே.

உலக ஜனத்தொகையில் நூற்றுக்கு 20 வீதத்தினரைக் கொண்டுள்ள உயர்ந்த வருமானம் பெறும் நாடுகளில் மொத்த தனிநபர் நுகர்வு செலவு வீதாசாரம் நூற்றுக்கு 86 வீதமாகும். வறிய 20வீதத்தினர் 1.3 வீதத்தினையே நுகர்கின்றனர். சிறப்பாக உலக ஜனத்தொகையில் செல்வந்தரான ஐந்தில் ஒரு பகுதியினர் முழு இறைச்சி, மீனில் 45வீதத்தினை நுகர்கின்றனர். வறிய ஐந்தில் ஒரு பங்கினருக்கு கிடைப்பது 5வீதமே. உலக சனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினரான செல்வந்தர்கள் முழு மின்சாரத்தில் 58 வீதத்தினை நுகர்கின்றனர். வறியவர்களான ஐந்தில் ஒரு பங்கினர் 4வீதத்துக்கும் குறைவானதையே நுகர்கின்றனர். உலக ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினரான உலக செல்வந்தர்கள் உலக தொலைபேசித் தொடர்புகளில் நூற்றுக்கு 74வீதத்தினைக் கொண்டுள்ளனர். வறிய ஐந்தில் ஒரு பங்கினர் நூற்றுக்கு 1.5வீதத்தினையே கொண்டுள்ளனர். உலக ஜனத்தொகையில் செல்வந்தர்களான ஐந்தில் ஒரு பங்கினர் முழுக் கடதாசியில் நூற்றுக்கு 8வீதத்தினை நுகர்கின்றனர். வறிய ஐந்தில் ஒரு பங்கினர் நூற்றுக்கு 1.1வீதத்தினையே நுகர்கின்றனர். உலக ஜனத்தொகையில் செல்வந்தர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் உலக மொத்த வாகனத் தொகுதியில் நூற்றுக்கு 87வீதத்தினைச் சொந்தமாக்கிக் கொண்டுள்ளனர்.வறிய ஐந்தில் ஒரு பங்கினர் 1வீதத்துக்கும் குறைவானதையே உடமையாக்கிக் கொண்டுள்ளனர்.

சகல கைத்தொழில் நாடுகளிலும் உயர்ந்த நுகர்வு என்னவாக இருந்த போதிலும் வறுமையும் சமூக கெடுதிகளும் வளர்ச்சி கண்டு வருகின்றது. இந்த அறிக்கை காட்டுவது போல் கைத்தொழில் நாடுகளின் ஜனத்தொகையில் 7க்கும் 17க்கும் இடைப்பட்ட வீதத்தினர் வறியவர்களாக உள்ளனர். அழிவின் இந்த மட்டம் சிறிதாக இருப்பதற்குக் காரணம் , கைத்தொழில் நாடுகளின் வருமானத்தில் சராசரியானதுடன் இதனை ஒப்பிடுவதன் காரணத்தினாலாகும். வறுமை சிறிதாக இருப்பது (7வீதம்) சுவீடனிலாகும். உயர்ந்த வருமானத்தில் சராசரி இடத்தில் இருந்து கொண்டுள்ள அது 13ம் இடத்தில் இருந்து கொண்டுள்ளது. நாடுகளின் தரத்தில் உயர்ந்த வருமான சராசரியுடன் அமெரிக்க ஜனத்தொகையின் கூடுதலான பகுதியினர் வறுமையை அனுபவிக்கின்றனர்.குறை நுகர்ச்சியும் வறுமையும் அபிவிருத்தியடையும் உலகுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல என்பதை அறிக்கை முடிவாகக் காட்டுகின்றது. முன்னேறிய நாடுகளில் 10மில்லியன்களுக்கும் அதிகமான மக்கள் அத்தகைய தலைவிதிகளுக்கு உள்ளாகியுள்ளனர். 100மில்லியன் மக்கள் வீடற்றவர்களாக உள்ளனர். குறைந்த பட்சம் 37 மில்லியன் மக்கள் வேலையற்றவர்களாக உள்ளனர்.

ஐ.நா.மனித அபிவிருத்தி அறிக்கையானது செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையே வளர்ச்சிகாணும் இடைவெளியை கோடிட்டுக் காட்டுகின்றது. உலகில் உள்ள 225 செல்வந்தர்கள் 1 ரில்லியன் டாலர்களை திரட்டிக் கொண்டுள்ளனர். இது உலகின் மொத்த சனத்தொகையின் வறிய 47வீதத்தினரின் -2.5பில்லியன் மக்கள் - வருட வருமானத்துக்கு சமமானதாகும். உலகின் மூன்று செல்வந்தர்களின் சொத்துக்கள்—மைக்ரோசொப்ட் பில் கேட்ஸ், வோல்மாட்ஸ் ஸ்டோர்ஸ், வாரன் புபே—குறைவிருத்தி நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 48வீதத்தினைத் தாண்டிச் செல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும்

## மார்க்சிசத்தின் குட்டி முதலாளித்துவ எதிரிகளுக்கு ஒரு பதில்

**நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை**

*அமெரிக்க ஸ்பார்ட்டசிஸ்ட் லீக்கின் ஒரு தொடர் கட்டுரைகளுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் தயார் செய்யப்பட்ட பதில் மே இதழில் இருந்து தொழிலாளர் பாதையில் பிரசுரமாகின்றது.*

### அனைத்துலக நிதி எதிர் முதலாளித்துவ அரசு

ஸ்பார்ட்டசிஸ்டுகள் நிதி மூலதனப் பிரச்சினைக்கு திரும்பும் போது தேசிய அரசின் இராணுவ இயந்திரத்துடன் இணைந்து கொள்ளும் குட்டி முதலாளித்துவ பாசிசமயமான அதே அகநிலை நோக்கு வெளிப்பாடாகின்றது. அவர்கள் டேவிட் நோர்த்தின் ஒரு பேச்சை உதாரணமாகக் காட்டுவதுடன் ஆரம்பிக்கின்றனர். அதில் அவர் நிதி மூலதனத்தின அதிகரித்த சக்தியை பின்வருமாறு குறிப்பிட்டார்: பிரித்தானிய முடியரசு அதன் மகத்துவத்தின் உச்சக் கட்டத்தில் கூட உலக ஏகாதிபத்தியத்தின் நவீன நிறுவனங்கள்-உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், கட்(GATT) ஐரோப்பிய சமூகம் போன்றவை கொண்டிருந்த அதிகாரத்துவத்தின் ஒரு துளியைத் தன்னும் லத்தீன் அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு முதலான சுதந்திர அரசுகள் எனப்படுபவை மீது அதனது காலனித்துவ பிரஜைகள் மீது கொண்டிருக்கவில்லை." (டேவிட் நோர்த் - மூலதனமும், உழைப்பும் தேசிய அரசும் - பக்கம் 21)

பொருளாதார வாழ்க்கையின் மறுக்கமுடியாத உண்மை ஒரு தொகை புள்ளிவிபரங்களின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டமை ஸ்பார்ட்டசிஸ்டுகளின் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டுள்ளது.

"பிரித்தானிய காலனித்துவ இராணுவமும் பொலிசும் இந்தியத் தொழிலாளர்கள், விவசாயிகள் மீது கையாண்டதை விடக் கூடுதலான அதிகாரத்தை உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் பிரயோகிக்கின்றன என்ற கருத்து ஒரு அஹிம்சை ரீதியான அர்த்தமற்றதாகும்."( வேர்க்கர்ஸ் வன்கார்ட் 1997பெப்பிரவரி 21)

இங்கு ஸ்பார்ட்டசிஸ்டுகள் அனைத்து வரலாற்றுப் போக்குக்களையும் இராணுவப் பலப்பிரயோகத்துக்கு தரம் குறைக்கின்றனர். இந்தியாவின் செல்வங்கள் சூறையாடப் பட்டமை முக்கியமாக இராணுவத்தின் ஊடாக அல்லாது பொருளாதார வழிகளிலேயே இடம்பெற்றது. இந்தியப் பொருளாதாரத்தினை நாசமாக்கியதனதும் பிரித்தானிய முடியாட்சிக்கு கீழ்ப்படுத்தியதனதும் முக்கிய கருவி துப்பாக்கிகள் அல்ல ; ஆனால் மலிவான பருத்தி ஆடைக் கைத்தொழிலும் புகையிரதப் பாதைகளுமே.

முதலாளித்துவ உற்பத்தி நடவடிக்கையின் இரத்த நாளமாக விளங்கியது இராணுவ பலம் அல்ல. ஆனால் அனைத்துலக மூலதனமாகும். நிதி முதலீடுகளுக்கான சாதனங்களை கைப்பற்றிக் கொள்ளவும் அடிப்படையை அமைக்கவும் அடிப்படை வசதிகளை இயங்க வைக்கவும் அரைக் -காலனித்துவ நாடுகளின் அரசாங்கங்கள் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் "அடிப்படை சீர்ப்படுத்தல்" எனப்பட்டவற்றை அமுல் செய்ய வேண்டி இருந்தது. மெக்சிக்கன் கடன் நெருக்கடியை தொடர்ந்து 1980பதுகளின் நடுப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த வேலைத்திட்டங்கள் பூகோளத்தின் முழுப் பிராந்தியத்தில் இருந்தும் உயிர் இரத்தத்தை உறிஞ்சி எடுக்கும் மிகவும் சக்திவாய்ந்த விதி முறையாகவும் நிதிச் சந்தைகளின் தன்னியக்க தொழிற்பாடுகள் ஊடாக பரந்த அளவிலான செல்வத்தை பெரும் வங்கிகளதும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் களஞ்சியங்களுக்கு மாற்றுவதாகவும் விளங்கியது.

இந்த நிதி மாற்றங்களின் பரிமாணத்தை தனி ஒரு ஆண்டுக்கான கீழ்வரும் புள்ளிவிபரத்தின் மூலம் கண்டு கொள்ள முடியும்: "1992ல் வறிய நாடுகளிடம் இருந்து வங்கிகளுக்கும் அனைத்துலக கடன் வழங்கும் அமைப்புக்களுக்கும் கிடைக்க வேண்டி இருந்த வட்டி 125 பில்லியன் டாலர்களாகும். அதேசமயம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுததாபனங்களின் முதலீடுகளின் மீதான மதிப்பிடப்பட்ட வருமானம் (420 பில்லியன் டாலர் நிதிக் கையிருப்புக்கள் மீதான 15 வீத வட்டி) 64 பில்லியன் டாலர்களாக விளங்கியது. இது மொத்த வட்டியை 189 பில்லியன் டாலர்களாக்கியது. உதவிகள் என்ற பெயரில் வழங்கப்பட்ட 59 பில்லியன் டாலர்களை கழித்ததன் பின்னர் மொத்தமாக மாற்றப்பட்ட தொகை 130 பில்லியன் டாலர்களாகும். இந்தத் தள்ளாடும் தொகை கூட முழுச் சித்திரத்தையும் தருவதாக இல்லை.இத்துடன் வீழ்ச்சி கண்டு செல்லும் மூலப் பொருள் விலைகளின் தாக்கங்கள் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் காப்புறுதிகளின் மாற்றத்தின் விலைத் தாக்கம், தொழில் நுட்பத்தையும் "புத்திஜீவி ஆக்க உரிமை" யையும் பயன்படுத்துவதற்கான கட்டணங்களின் தாக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது.

சமீபகால நிகழ்வுகள் நிதி மூலதனமும் அதன் நிறுவனங்களும் தமது விருப்பை காலனிகள் மீது மட்டும் அல்லாது பேரளவில் சுதந்திரமான அரசுகள் மீது திணிக்கும் சக்தி தொடர்பான ஸ்பார்ட்டசிஸ்டுகளின் ஆழ்ந்த அறிவின் மீது தமது சொந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளன. தாய்லாந்து தொடக்கம் தென்கொரியா அத்தோடு ஜப்பான் வரையிலான ஜனாதிபதிகளும் பிரதமர்களும் கடந்த பல மாதங்களாக சர்வதேச நாணய நிதியமும் தேசிய அரசுகளும் சார்பு ரீதியான அதிகாரம் தொடர்பாக புறநிலை படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டனர். இந்தோனேஷிய சர்வாதிகாரியான சுகார்ட்டோ ச.நா.நி.யின் முகாமைப் பணிப்பாளர் கம்டெசஸ் பார்த்துக் கொண்டிருக்க ச.நா.நி.உடன்படிக்கையில் கையொப்பம் இடும் படங்கள் ஜகார்த்தா தொடக்கம் வாஷிங்டன் வரையிலான பத்திரிகைகளில் பிரசுரமாகின. இது ஒரு சித்திரம் ஆயிரம் வார்த்தைகளை விட மேலானது என்பதைக் காட்டியது.

தேசிய அரசினை மகத்தானதாக்கிக் காட்டும் ஸ்பார்ட்டசிஸ்டுகளின் மனோபாவம் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அனைத்துலக ஏஜன்சிகளின் பாத்திரம் தொடர்பான போக்கில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

அவர்கள் எழுதுவதாவது: "ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள்" தேசிய அரச அமைப்பை தாண்டிச் செல்கின்றது என்ற நோக்கானது உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற சில அனைத்துலக பொருளாதார ஏஜன்சிகள் இப்போது ஒரு வகையான உலக முதலாளித்துவ அரசாங்கமாகிவிட்டது என்ற கருத்துக்கு இட்டுச் செல்கின்றது."

அவர்கள் கூறுவதன்படி "அதைக் காட்டிலும் ஒன்றும் குறையாத வினோதமான கருத்து என்னவெனில்" இந்த நிறுவனங்கள் சுயசக்தி கொண்டவை. ஏகாதிபத்திய தேசியஅரசுகளில் இருந்து சுதந்திரமானவை என்பதாகும். இந்த அனைத்துலக ஏஜன்சிகள் முக்கிய ஏகாதிபத்திய சக்திகளின் கட்டுப்பாடுகளுக்கும் அவசியங்களுக்கும் அமையவே அல்லாது அவற்றில் இருந்து சுயாதீனமாகவோ அல்லது உண்மையில் அவற்றுக்கு மேலாகவோ செயற்படுபவை அல்ல. (வேர்க்கர்ஸ் வன்கார்ட் மார்ச் 21 1997)

ஸ்பார்ட்டசிஸ்டுகளைப் பொறுத்த வரையில் தேசிய சந்தைக்கும் தேசிய முதலாளித்துவ அரசுக்கும் மேலானதான யதார்த்தம் கிடையாது. பூகோள ரீதியான நிதி அமைப்பு, அனைத்துலக நிதி நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் அவை ஒரு தொகை தேசிய சந்தைகளின் கூட்டு மொத்தமாகவோ அல்லது தேசிய அரசுகளின் ஆதிக்கத்தின் ஆயுதமாகவோ கணிக்கப்படுகின்றன. தனது சகல ஆழமற்ற தீவிரவாதத்துக்கும் தேசிய அரசினை அடிப்படையாகக் கொண்டு நிற்பதற்கும் மார்க்சிசத்துக்கும் இடையே எந்தவிதமான பொதுமையும் கிடையாது. அது ட்ரொட்ஸ்கி விளக்கியது போன்று அது அதனது விடுகைப் புள்ளியை உலகப் பொருளாதாரத்தில் இருந்து தேசியப் பகுதிகளின் கூட்டுத் தொகையாக அன்றி அனைத்துலக உழைப்புப் பகுப்பினால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பலம் வாய்ந்ததும் சுயாதீனமானதுமான யதார்த்தமாகவே பெறுகின்றது."(ட்ரொட்ஸ்கி நிரந்தரப் புரட்சி- பக்கம் 23)

ஸ்பார்ட்டசிஸ்டுகள் அனைத்துலகக் குழுவின் மீதான தமது தாக்குதலின் போது லெனினையும் அவரின் ஏகாதிபத்தியம் பற்றிய ஆக்கங்களையும் தொடர்ந்து இழுக்கின்றது. ஆனால் லெனினின்



இந்தோனேஷிய மாஜி. சர்வாதிகாரி சுகார்ட்டோ சர்வதேச நாணய நிதிய முகாமைப் பணிப்பாளர் கம்டெசசின் நேரடி பார்வையில் 'உதவி' உடன்படிக்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கங்களை தேசிய அரசின் கம்பீரமான பாத்திரத்தை பேணக் கையாள முடியாது. அதற்கு முரண்பட்ட விதத்தில் அவர் ஏகாதிபத்திய சகாப்தத்தில் நிதி மூலதனத்தின் தலையாயதும் பூகோள ரீதியானதுமான பாத்திரத்தை விளக்குகின்றார். தேசிய அரசு ஒரு தலையாய பாத்திரத்தை வகிப்பதற்கு அப்பால் அதற்கு நேர் எதிரான பாத்திரத்தை வகித்ததாக லெனின் வாதிட்டார். "நிதி மூலதனம் அந்தளவுக்கு பாரியதும் அந்தளவுக்கு தீர்க்கமானதும் சகல பொருளாதார, சகல அனைத்துலக உறவுகளிலும் ஒரு தீர்க்கமான சக்தி என நீங்கள் குறிப்பிடலாம். அது அடிமைப்படுத்த இலாயக்கானதோடு உண்மையில் அடிமைப்படுத்தவும் செய்கின்றது. அரசுகள் கூட முழு அரசியல் சுதந்திரத்தை அனுபவிக்கின்றது." "(லெனின் திரட்டிய தொகுதிகள் பாகம் 22 பக்கம் 359)

இந்தப் போக்கின் ஆரம்பத்தில் லெனின் உலக முதலாளித்துவத்தைப் பற்றி ஆய்வு செய்ததோடு அவர் இனங்காட்டிய போக்கானது அதில் இருந்து பிரமாண்டமான அளவில் அபிவிருத்தி காணவும் செய்தது.

தேசிய அரசும் வங்கிகளும் இவை இரண்டும் முதலாளி வர்க்கத்தின் சிருஷ்டிகள். இவற்றின் வரலாறு பெருமளவுக்கு பிணைந்து கொண்டுள்ளது. எவ்வாறெனினும் வங்கிகளின் சக்தியானது தேசிய அரசில் இருந்து பெறப்பட்டது அல்ல. ஆனால் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் உயிர் இரத்தமான கடனதும் நிதியினதும் கட்டுப்பாட்டிலாகும். ஸ்பார்ட்டசிஸ்டுகள் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு வழிப்பாதை உறவுக்கு பெரிதும் அப்பாற்பட்ட விதத்தில் வங்கிகளை தேசிய அரசின் கீழ்ப்படிவான கருவிகளாக நிஜ உறவானது பெரிதும் புயல் நிறைந்ததாகும். யுத்தத்துக்கு பின்னைய காலப்பகுதியில் வங்கி, நிதி அமைப்பின் வரலாறானது வங்கிகள் தம்மை தேசிய அரசின் கட்டுப்பாட்டில் இருந்து விடுதலை செய்ய நடாத்திய ஒரு தொடர்ச்சியான போராட்ட வரலாறாக விளங்கியது எனலாம். அத்தோடு அனைத்துலக நிதி மூலதனத்தினதும் பூகோளரீதியான நிதிச் சந்தைகளதும் எழுச்சிகள் அரசுக்கு நேர் எதிரான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளன.

யுத்தத்துக்கு பிந்திய காலப்பகுதியில் அனைத்துலக நிதி அமைப்பின் அபிவிருத்தியானது 1944ல் பிரெட்டன்வூட்ஸ் ஸ்தாபிதம் செய்யப்பட்ட அனைத்துலக நாணய அமைப்பின் வரலாற்றுடன் பிரிக்க முடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய அரசுகள் யுத்தத்தில் சேர்ந்து கொண்ட நாளில் இருந்து ரூஷ்வெல்ட் ஆட்சியின் முன்னணி அதிகாரிகள் யுத்தத்துக்கு பின்னைய ஒரு நின்றுபிடிக்கக் கூடிய நிதி அமைப்பின் அபிவிருத்தியைப் பற்றியே அக்கறை காட்டினர். ஒரு விரிந்து செல்லும் உலக சந்தைக்கான நிலைமைகள் ஸ்தாபிதம் செய்யப்பட்டு, சுங்க வரியும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் தகர்க்கப்பட்டு ஒரு உறுதியான அனைத்துலகக் கொடுப்பனவு முறை ஸ்தாபிதம் செய்யப்படாது போனால் உலகப் பொருளாதாரம் சோசலிசப் புரட்சி ஆபத்துக்களின் எழுச்சிக்கு இடமளித்து வேகமாக மீண்டும் பொருளாதார மந்தத்தினுள் தலைமூழ்கிப் போகும் நிலையை முந்திய இரண்டு தசாப்த கால அனுபவங்கள் எடுத்துக்காட்டியது.

## பிரெட்டன்வூட்ஸ் அமைப்பின் எழுச்சியும் வீழ்ச்சியும்

பிரெட்டன்வூட்ஸ் மகாநாடு ஒரு பெரிதும் ஒழுங்கமைக்கப்பட்ட நாணய அமைப்பினை ஸ்தாபிதம் செய்தது. அமெரிக்க டாலர் அனைத்துலக நாணயமாக ஸ்தாபிதம் செய்யப்பட்டது. ஒரு அவுன்ஸ் தங்கம் 35 டாலர் எனக் கொள்ளப்பட்டது. பெரும் நாணயங்களுக்கு இடையே ஒரு நிலையான நாணய வீதத்தை ஸ்தாபிதம் செய்வது இந்த அமைப்பின் அடிக்கல்லாக விளங்கியது. 1930பதுகளில் அந்தளவு பேரழிவுகளுக்கு காரணமாக இருந்த போட்டி நாணய மதிப்பிறக்கங்களையும் அழிவுக்கிடமான நாணய மிதப்புக்களையும் தடுக்க சர்வதேச நாணய நிதியம் (IMF) ஸ்தாபிக்கப்பட்டது. சென்மதி நிலுவை கொடுப்பனவுக் கஷ்டங்களுக்கு உள்ளாகும் நாடுகளுக்கு நிதி வழங்க இது ஸ்தாபிதம் செய்யப்பட்டது. மறுநிர்மாணத்துக்கும் அபிவிருத்திக்குமான அனைத்துலக வங்கி(உலக வங்கி) மேற்கு ஐரோப்பாவின் பொருளாதாரங்களை மீள நிர்மாணிக்க நீண்ட காலக் கடன் கொடுப்பனவுக்கான நிதி வழங்க அமைக்கப்பட்டது.



1944ல் பிரெட்டன்வூட்ஸ் மகாநாடு

ஒரு நிலையான நாணய மாற்று வீத அமைப்பினை ஸ்தாபிதம் செய்வதானது நிச்சயமாக தேசிய அரசின் மத்திய வங்கிகளுக்கும் அரசியல் அதிகாரங்களுக்கும் அனைத்துலக மூலதன இயக்கத்தினை ஒழுங்கு செய்வதினை முன் அனுமானித்தது. யுத்தத்தின் பின்னைய நாணய அமைப்பின் மரணத்தின் வரலாறானது கூடவே ஒரு நிதி மூலதனத்தின் மீதான இந்தத் தேசியக் கட்டுப்பாட்டின் வீழ்ச்சியினதும் ஒரு அனைத்துலக நிதி அமைப்பின் எழுச்சியினதும் வரலாறும் ஆகும்.

பிரெட்டன்வூட்ஸ் அமைப்பு தொழிற்படுவதற்கு அமெரிக்க ஐக்கிய அரசுகள் உலகின் ஏனைய பாகத்திற்கு அமெரிக்க கூட்டுத்தாபனங்கள் அரசாங்கக் கடன்கள், உதவிகள் மூலம் தனியார் மூலதன முதலீட்டை நிதியீட்டம் செய்ய டாலர் திரவத்தன்மையை வழங்க வேண்டியிருந்தது. இந்த டாலர்கள் பதிலாக அமெரிக்காவின் வர்த்தக உபரி மீதிகள் உலகின் ஏனைய நாடுகளுடன் நிதியீட்டம் செய்யப் பயன்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாடுகளில் ஒரு அடிப்படை முரண்பாடு உள்ளடங்கிக் கொண்டு இருந்தது. இது அமெரிக்கா அதன் போட்டி முதலாளித்துவ வல்லரசுகள் மீது கொண்டிருந்த பொருளாதார மேலாதிக்கத்தை அடிப்டையாகக் கொண்டிருந்தது. ஒரு புறத்தில் இதன் தொழிற்பாடுகள் ஏனைய முன்னேறிய முதலாளித்துவ நாடுகளைப் பலப்படுத்தியது. அத்தோடு சார்பு ரீதியில் அமெரிக்க அரசுகளின் அந்தஸ்தைப் பலவீனமாக்கியது.

இந்த முரண்பாடுகள் முதலில் 1960பதுகளின் கடைப்பகுதியில் ஒரு தங்க நெருக்கடி உருவில் தலையெடுத்தது. முழு அமைப்பையும் ஆதரிக்க டாலர்கள் போட் நொக்சில்(Fort Knox) உள்ள தங்க இருப்பைக் கொண்டு ஒரு அவுன்ஸ் 35 டாலர் வீதத்தில் மீட்டெடுக்கப்படும் என அமெரிக்கா வழங்கிய உத்தரவாதம் விளங்கியது. 1950பதுகளின் ஆரம்ப வருடங்களில் போட் நொக்சில் இருந்து வெளியேறும் தங்கம் புறக்கணிக்கத்தக்கதாக விளங்கியது. அமெரிக்க ஏற்றுமதிகளை வாங்க பெருமளவு டாலர் எப்போதும் தேவைப்பட்டதே இதற்கான காரணமாகும். ஆனால் ஐரோப்பிய, யப்பானிய கைத்தொழில்கள் புத்துயிர் பெறத்தொடங்கியதாலும் வளர்ச்சி கண்டதாலும் அமெரிக்க ஏற்றுமதிகளுக்கான தேவை குறையத் தொடங்கியதோடு அமெரிக்காவுக்கு வெளியிலான டாலர் கையிருப்பு அவற்றை ஆதரித்த தங்கத்துக்கு சார்பு ரீதியில் அதிகரிக்கத் தொடங்கியது. முதல்தடவையாக 1958ல் வெளிநாட்டவர்கள் வைத்திருந்த டாலர்கள் அமெரிக்க தங்கக் கையிருப்பைத் தாண்டியது.

1960பதுகளின் தசாப்தம் பிரெட்டன்வூட்ஸ் அமைப்பின் ஆழமான நெருக்கடியை குறித்து நின்றது. 1960பதுகளில் 18 பில்லியன் டாலர்களாக விளங்கிய அமெரிக்க தங்கக் கையிருப்பு ஆண்டு தோறும் 0.5 பில்லியன் டாலருக்கும் 1 பில்லியன் டாலருக்கும் இடைப்பட்ட விதத்தில் வீழ்ச்சி காணத் தொடங்கியது. ஆனால் 1964-65ல் தங்கக் கையிருப்பு பிரான்சில் டீகோல் ஆட்சி அமெரிக்க டாலருக்கு எதிரான ஒரு யுத்தத்தை ஆரம்பித்ததால் 1.5பில்லியன் டாலர்களால் வீழ்ச்சி கண்டது. 1968ல் தங்கக் கையிருப்பு பிரெட்டன்வூட்ஸ் அமைப்பு தொழிற்படுவதற்கு குறைந்த பட்சத் தேவையாகக் கொள்ளப்பட்ட 10பில்லியன் டாலர்களுக்கு நெருக்கமான முறையில் 1.5 பில்லியன்களால் படுமோசமான விதத்தில் வீழ்ச்சி கண்டது. அமெரிக்க தங்கக் கையிருப்பு இப்போது 1950ல் அவர்கள் கொண்டிருந்ததற்கு சரி அரைவாசியாக வீழ்ச்சி கண்டது.

அதிகரித்துவரும் தங்க நெருக்கடிக்கான பதிலாக ஜனாதிபதி ஜோன்சன் 1968ல் அமெரிக்க மூலதனத்தின் வெளியேற்றத்தைத் தடுக்க ஒரு தொகை கட்டுப்பாடுகளை விதிக்க முயற்சித்தார். ஆனால் இந்த நடவடிக்கைகள் திணிக்கப்பட்டமையானது அமெரிக்க வங்கிகளை வெளிநாட்டு நாணயமாற்று கட்டுப்பாடுகளை தவிர்ப்பதற்கான வழிகளை கண்டுபிடிக்கத் தூண்டியது. அவர்களின் நடவடிக்கைகள் ஒரு தேசிய அரசினது அல்லது மத்திய வங்கிகளின் குழுக்களது கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு நின்று இயங்கும் ஒரு அனைத்துலக நிதி அமைப்புக்கான அடிக்கல்லை நாட்டியது.

இந்தப் புதிய அமைப்பின் தோற்றமானது 1950பதுகளில் ஈரோ டொலர் சந்தை எனப்பட்டதை தோற்றுவித்தது. ஆரம்பத்தில் இது ஐரோப்பிய வங்கிகளிலும் அமெரிக்க வங்கிகளின் ஐரோப்பியக் கிளைகளிலும் இருந்த சிறிய அளவிலான டாலர்களையே கொண்டிருந்தது. பிரெட்டன்வூட்ஸ் அமைப்பு சார்பு ரீதியில் அமுல் செய்யப்பட்டு தொழிற்பட்டு வரும் வரையில் இந்த டாலர்களில் பெரும் பகுதி அமெரிக்காவில் இருந்து ஏற்றுமதிகளைக் கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் 1950பதுகளின் இறுதிப் பகுதியில் அமெரிக்க ஏற்றுமதிகளுக்கான கேள்வி வீழ்ச்சி காணத் தொடங்கியதால் ஈரோ டொலர் தடாகம் (Pool of Euro dollars) வளர்ச்சி கண்டது.

இந்த அபிவிருத்தியானது ஒரு ஈரோ டொலர் கடன் வழங்கும் சந்தையைத் தோற்றுவித்தது. அமெரிக்காவுக்கு வெளியே கொண்டிருந்த டாலர்களை அடிப்படையாகக் கொண்டு இந்த கடன்கள் வழங்கப்பட்டது. அமெரிக்க ஆட்சியாளர்கள் அமெரிக்காவில் இருந்து டாலர்கள் வெளியேறுவதைத் தடுக்க முயன்றதால் 1960பதுகளின் கடைப்பகுதியில் ஈரோ டாலர் சந்தை வேகமாக வளர்ச்சி கண்டது. பன்னாட்டுக் கம்பனிகள் ஐரோப்பாவில் முதலீடு செய்ய நிதியை திரட்டிக் கொள்வதில் ஆர்வம் காட்டியதாலும் வங்கிகள் தமது கேள்வியை திருப்தி செய்ய அவ்வாறே முயன்றதாலும் இந்தக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபடுவதற்கான வழிவகைகளைத் தேடின.

1971-73 காலப்பகுதியில் பிரெட்டன்வூட்ஸ் அமைப்பின் இறுதி வீழ்ச்சியோடு இந்த ஈரோ டாலர் சந்தைகள் எனப்பட்டவை நாணயங்களை வெளியிட்ட தேசிய அரசுக்கு வெளியே நாணயங்களை கையாண்ட ஒரு உலக நிதிச் சந்தையை உள்ளடக்கிக் கொண்டது. அமெரிக்க பன்னாட்டுக் கம்பனிகளும் வங்கிகளும் இதை நடைமுறைக்கு கொணரும் மாபெரும் தனிச் சக்தியாக விளங்கியது. இவை மிகவும் பலம் வாய்ந்த ஏகாதிபத்திய அரசின் கட்டுப்பாட்டு முயற்சிகளை நசுக்கும் வழிகளைத் தேடின.

அனைத்துலக நிதிச் சந்தைகளால் கொணரப்பட்ட அழுத்தங்களுக்கு தேசிய அரசுகள் எப்படி அடிபணிந்து போயின என்பதற்கு சமீப வரலாற்றில் பல உதாரணங்கள் உள. 1975-76ல் கலகான் அரசாங்கம், 1982-83 மிட்டரண்ட் அரசாங்கம், 1980பதுகளில் பிரேசில், மெக்சிக்கோ. பிரித்தானியா ஐரோப்பிய நாணய ஒழுங்கமைப்பில் இருந்து 1992ல் விலகிக் கொண்டமை மிகச் சமீபகால அனுபவமாகும். இதில் பிரித்தானிய வங்கிகள், பவுண் (ஸ்டேர்லிங்) நாணயத்தை விற்றுத் தள்ளுவதில் ஒரு முக்கிய பாத்திரம் வகித்தன.

அனைத்துலக நிதி நிறுவனங்கள் வெறும் ஏகாதிபத்திய அரசுகளின் ஏஜன்சி மட்டுமே என ஸ்பார்ட்டசிஸ்டுகள் வலியுறுத்துவதானது முதலாளித்துவ பொருளாதாரத்தின் ஒரு அடிப்படை பண்புக்கு எதிராக நின்று கொண்டுள்ளது: இலாபத் திரட்சியின் புவியியலின் வரையறையற்ற தன்மைக்கும் தேசிய அரசுகளின் வரையறுக்கப்பட்ட அரசியல் புவியியலுக்கும் இடையேயான அடிப்படை முரண்பாடு.

"சகல அதிகாரங்களும் துப்பாக்கி முனையில் இருந்து பிறக்கின்றது" என்ற மாஓவின் சுலோகத்தினால் ஈர்க்கப்பட்ட மத்தியதர வர்க்க தீவிரவாத தோழர்களைப் போலவே ஸ்பார்ட்டசிஸ்டுகளும் சர்வதேச நாணய நிதியமும் மற்றும் நிதி நிறுவனங்களும் கையாளும் அதிகாரத்தை அவற்றிடம் ஆயுதங்களும் படைகளும் இல்லாததால் புறக்கணிக்கின்றார்கள்.

**தொடரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழிகள் தோண்டப்படுவதை தாமதிப்பதை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

கே. ரத்னாயக்க

அக்டோபர் 16ம் திகதி நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் யாழ்ப்பாணச் செயலகத்துக்கு ஊர்வலத்தில் சென்று செம்மணி மனிதப் புதைகுழிகளை தோண்டுவதை மேலும் தாமதிக்காது விசாரணைகளை நடாத்தும்படி ஜனாதிபதியைக் கோரும் மகஜர் ஒன்றை யாழ்.அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். கடந்த சில தினங்களாக இத்தகைய பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால் யாழ்ப்பாணக் குடா நாடு மூழ்கிப் போயுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் அமைப்பாளர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் மனிதப் புதைகளின் அடையாளங்களை ஒழித்துக்கட்டிவிடுவதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவருவதாக குறிப்பிட்டுள்ளனர். இந்த மனிதப் புதைகுழிகள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் பிராந்தியத்துக்கு மேலாக பெரும் புகைமண்டலங்களைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் இது இராணுவத்தினர் சடலங்களை எரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவிட்டனரோ என்ற அச்சத்தை தூண்டுவதாகவும் அவர்கள் முறைப்பட்டுக் கொண்டுள்ளனர்.

அக்டோபர் 16ல் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கைதானோர் காணாமல்போனோர் சங்கம், அன்னையர் முன்னணி, நீதிக்கும் சமாதானத்துக்குமான மக்கள் குழு, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், இந்து இளைஞர் பேரவை, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம், பேக்கரி ஊழியர் சங்கம், கடற்றொழிலாளர் சங்கம், யாழ் வணிகர் சங்கம், வர்த்தக ஊழியர் சங்கம் ஆதியன கலந்து கொண்டன.

செப்டம்பர் 27ம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் 350 மக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தின் எதிரில் இந்த பெரும் மனிதப் புதைகுழிகளைப் பற்றிய விசாரணையை உடன் ஆரம்பிக்கும்படி கோரி நான்கு மணித்தியாலங்கள் மறியல் செய்தனர். உடனடி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தவறும்பட்சத்தில் தாம் சாகும்வரை உண்ணாவிரதத்தில் இறங்கப் போவதாக சில மனித உரிமைகள் அமைப்புக்கள் எச்சரித்தும் இருந்தன.

யாழ்ப்பாணத்தில் பெரும் மனிதப் புதைகுழிகள் இருப்பது பற்றிய குற்றச்சாட்டு முதன்முதலாக ஒரு இராணுவப் படையாளினால் கொழும்பு நீதிமன்ற வழக்கு விசாரணையின் போது ஜூலை 5ம் திகதி தெரிவிக்கப்பட்டது. அந்த வழக்கில் சோமரத்ன இராஜபக்ச என்ற அந்தப் படையாளுக்கும் இராணுவத்தைச் சேர்ந்த வேறு ஐவருக்கும் பொலிசைச் சேர்ந்த ஒருவருக்கும் எதிராக கிருஷாந்தி குமாரசுவாமி என்ற பாடசாலை மாணவியையும் அவரின் தாயாரையும் சகோதரனையும் உறவினரையும் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு இருந்தது. நீதிமன்றம் சகலரையும் குற்றவாளிகளாகக் கண்டதைத் தொடர்ந்து இந்தப் படையாள் செம்மணியில் இராணுவத்தால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட 400ஆட்களின் புதைகுழிகள் இருப்பதைத் தான் அறிவதாக தெரிவித்தார். ஏனைய சகல குற்றவாளிகளும் இதை அங்கீகரித்தனர். கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களைப் புதைக்க இணங்காது போயிருந்தால் தாம் உயரதிகாரிகளின் தண்டனைக்கு உள்ளாக நேரிட்டு இருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தைத் தொடர்ந்து 1996ல் யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கை இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டதன் பின்னர் சுமார் 700 இளைஞர்களும் சில வயது வந்தவர்களும் காணாமல் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டது. இதில் சுமார் 300 பேர் மட்டுமே ஒன்றில் கொல்லப்பட்டு அல்லது சிறைகளில் தள்ளப்பட்டு இருந்ததை காணாமல் போனவர்களின் அன்னையர் முன்னணியாலும் மற்றும் அமைப்புக்களாலும் தேடிக் கண்டுகொள்ள முடிந்தது.

கடந்த டிசம்பர் 29ல் தமிழ் அமைப்புக்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்தபோது இந்தக் காணாமல் போனவர்கள் பற்றி ஆராய ஒரு ஆணைக்குழுவை அமைப்பதாக அவர் வாக்குறுதி அளித்தார். இந்த மாபெரும் மனிதப் புதைகுழிகள் பற்றிய தகவல்கள் வெளிவந்து நான்கு மாதங்கள் கடந்துவிட்டபோதிலும் இந்த ஆணைக்குழு அமைக்கப்படுவதாக இல்லை. இந்தக் குற்றச்சாட்டு அனைத்துலக ரீதியில் பிரசித்தி கண்டு தமிழ் அமைப்புக்கள் ஒரு விசாரணையைக் கோரிய போதிலும் அரசாங்கம் பெரிதும் தயக்கத்துடன் தான் நடவடிக்கை எடுப்பதாகக் கூறிக்கொண்ட போதிலும் இதுகாறும் எதுவும் நடப்பதாய் இல்லை.

இந்த இனவாதக் குற்றங்களை மூடிமறைக்க அரசாங்கமும் இராணுவமும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எனப்படுவதும் ஒரு கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளன என்பது தெளிவாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு(UNHRC) ஒரு விசாரணையை நடாத்துவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்குவதாக இல்லை என்பதை அம்பலப்படுத்தியுள்ளது. இந்த ஐ.நா.ம.உ.ஆ. இருந்து இந்த மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கான தொழில்நுட்பரீதியான உதவிகளைத் தமிழ் அமைப்புக்கள் கோரிய போது அவர்கள் அரசாங்கத்தின் அங்கீகாரத்தைக் கோரினின்றனர். ஐ.நா.ஏஜன்சியின் ஆணையாளர் மேரி றொபின்சனின்படி இந்த அமைப்பு அந்த உதவியை வழங்கத் தயாரான போதிலும் அதற்கான பச்சை விளக்கை அரசாங்கம் காட்டுவதாக இல்லை.

காணாமல் போனவர்கள் பற்றிய "மேலதிக தகவல்களைத்" திரட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒரு ஆணையாளர் கடந்த அக்டோபர் 4ம் திகதி யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்வதாக இருந்தது. ஆனால் பின்னர் அவர் "பிரயாணக் கஷ்டங்களால் "யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய முடியவில்லை எனத் தெரிவித்தார். இவை இதை இழுத்தடிக்கும் உபாயங்களேயன்றி வேறொன்றும் அல்ல. இந்த ஆணைக்குழுவின் ஒரு அங்கத்தவர் "சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மேல் நடவடிக்கைகளைத் தடைசெய்வதாக" முன்னர் குறிப்பிட்டிருந்தார். அத்தோடு வன்னியில் இடம்பெறும் யுத்தம் இதற்குத் தடையாக இருப்பதாகவும் மேலும் கூறியிருந்தார்.

இதற்கிடையே ஆகஸ்ட் 20ம் திகதி இந்த மனிதப் புதைகுழிகளைப் பற்றிய குற்றச்சாட்டை முதன் முதலாக முன்வைத்திருந்த இராணுவப் படையாள் அவர் சிறைவைக்கப்பட்டிருந்த சிறையில் சிறை அதிகாரிகளால் மோசமாகத் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். பத்திரிகை செய்திகளின்படி படையாள் தமது குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்க மறுத்ததைத் தொடர்ந்தே தாக்கப்பட்டுள்ளார். இந்த முயற்சி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் கூட படையாள் தமது குற்றச்சாட்டு நிஜமானது என்பதை ஊர்ஜிதம் செய்ததன் பின்னரே இடம்பெற்றுள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு எதிரான இந்த இனவாதக் குற்றச்சாட்டை விசாரணை செய்யும் விருப்பமோ அல்லது வல்லமையோ கொண்டது அல்ல. இன்றைய இனவாத யுத்த நடவடிக்கைகளும் யாழ்ப்பாணத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுள்ளவர்களுமான இராணுவ ஜெனரால்களில் பலரும் 1989-90காலப்பகுதியில் தென்இலங்கையில் பல்லாயிரக் கணக்கான கிராமப்புற சிங்கள இளைஞர்களின் படுகொலைக்குப் பொறுப்பாக இருந்தவர்கள். இந்தப் படுகொலைகளை ஆய்வு செய்ய பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்பட்ட ஆணைக்குழுக்கள் இந்த ஜெனரால்கள் சிலரின் பெயர்களை அம்பலப்படுத்தியுள்ளது. அரசாங்கம் இந்த அறிக்கைளை மூடிமறைத்துள்ளதோடு மட்டுமன்றி, தெற்கில் உள்ள மாபெரும் மனித புதைகுழிகளைப் பற்றி ஆய்வு செய்வதையும் நிறுத்திக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தற்சமயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் தாக்குதல்களை நடாத்தி வருகின்றது. ஒரு சில மாதங்களுள் இரண்டு யாழ்ப்பாண நகர மேயர்களும் இரண்டு இராணுவத் தளபதிகளும் கொலை செய்யப்பட்டதன் பின்னர் அது சிவில் நிர்வாகத்தை சீர்குலைக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. இதன் தாக்கம் காரணமாக பொதுஜன முன்னணி அரசாங்கம் கெரில்லாப் படைகளை "துடைத்துக்கட்டும்" இராணுவ நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டுள்ளது. செப்டம்பர் 28ம் திகதி சங்கானையில் அத்தகைய ஒரு இராணுவ நடவடிக்கையின் போது 5000கிராமவாசிகள் சுற்றிவளைக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டனர். இதில் சுமார் 100 பேர் மேல் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டனர். இது இவர்களில் சிலர் ஒன்றில் "காணாமல்" போகலாம் அல்லது சிறைக்குள் தள்ளப்படலாம் என்பதைக் காட்டுகின்றது.

*இரத்தினபுரி:*

## வேவல்வத்தை இனவாத தாக்குதல் பற்றி செய்தி திரட்டச் சென்ற பத்திரிகையாளருக்கு எதிராக பொலிஸ் கெடுபிடி

சிங்கள இனவாதக் குண்டர்கள் அலுபொல தோட்டத்தில் வேவல்வத்தை தொழிலாளர் லயின்களுக்கு தீமூட்டி நாசமாக்கியது பற்றிய தகவல்களைத் திரட்ட சென்ற பத்திரிகையாளர்களும் மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தோட்ட சுப்பிரன்டனதும் பொலிசாரினதும் கெடுபிடிகளுக்கும் மிரட்டல்களுக்கும் முகம் கொடுக்க நேரிட்டது. இந்தக் குழுவில் சரிநிகர் பத்திரிகையாளர் எம்.சரவணன், ஹிரு பத்திரிகையின் எம்.செனவிரத்ன, மனித உரிமைகள் அமைப்பின் பிரதீப் கமகே உட்பட அறுவர் இருந்தனர்.

வேவல்வத்த தோட்ட சுப்பிரன்டென் இன்னும் சிலருடன் சேர்ந்து இந்தப் பத்திரிகையாளர்கள் செயற்படுவதை தடைசெய்ததோடு தோட்டத்தினுள் நுழைவதற்கு இராணுவத்திடம் இருந்து அனுமதி பெற வேண்டும் எனவும் மிரட்டியுள்ளார். இதைத் தொடர்ந்து பத்திரிகையாளர் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவல் நிலையத்துக்கு சென்று அனுமதி கேட்டுள்ளனர். பொலிசார் படம் பிடிக்கும் தடையுடன் கூடிய செய்தி திரட்டலுக்கு அங்கீகாரம் வழங்கினர். அத்தோடு இந்த இனவாதக் குண்டர்களால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் தோட்டத் தொழிலாளர்களிடம் இருந்து பத்திரிகையாளர் கேட்பது என்ன என்பதை மோப்பம் பிடிக்க பொலிசார் அவர்களைப் பின் தொடர்ந்துள்ளனர்.

இந்தத் தடைக்கு மத்தியில் பத்திரிகையாளர்கள் படம் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் மீது அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டதோடு தொழிலாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களைக் கொண்ட பதிவுநாடாக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. தொழிலாளர்களும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டதோடு பத்திரிகையாளர்களுடன் பேசிய தொழிலாளர் பற்றிய தனிப்பட்ட விபரங்களும் திரட்டப்பட்டன.

தோட்டச் சுப்பிரன்டனதும் பொலிசாரினதும் மிரட்டல் காரணமாக தொழிலாளர்கள் தாம் எதிர்கொண்ட உண்மைநிலையைக் கூறப் பெரிதும் தயக்கம் காட்டியுள்ளனர். பொலிஸ் மிரட்டல் காரணமாக அறிக்கைகள் பெறுவது பெரிதும் கஷ்டமான பணியாக விளங்கியதாக சரிநிகர் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

பத்திரிகையாளர்களுக்கும் மனித உரிமை இயக்கப் பிரதிநிதிகளுக்கும் எதிராகத் தொடுக்கப்பட்ட இந்த பொலிஸ் , தோட்ட சுப்பிரென்டன் பயமுறுத்தல்களை தொழிலாளர் பாதை வன்மையாகக் கண்டனம் செய்கின்றது. அது தொழிலாளர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இனவாத தாக்குதல்களை பூசிமெழுகச் செய்யும் முயற்சியாகும்.

## இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துக்கு எதிராகத் தடை உத்தரவு

25 சதவீத சம்பள அதிகரிப்பைக் கொண்ட புதிய கூட்டு ஒப்பந்தத்தை ஸ்தாபிதம் செய்யும்படி ஒன்பது தனியார் வங்கி முதலாளிகளை நெருக்கும் விதத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கிய இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துக்கு எதிராக முதலாளிமாரின் கோரிக்கையின் பேரில் கொழும்பு மாவட்ட நீதிபதி ஏ.எச்.ஏ.சலாம் தடை உத்தரவு விதித்துள்ளார். இந்த உத்தரவு அக்டோபர் 2ம் திகதி பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் முறைப்பாட்டாளர்களாக அட்டன் நஷனல் வங்கி, இலங்கை கொமர்ஷல் வங்கி, ஹொங்கொங் அன்ட் ஷங்காய் வங்கி, இன்டியன் வங்கி, இன்டியன் ஓவர்சீஸ் வங்கி, ஸ்ரான்டர்ட் சார்ட்டட் வங்கி, ஸ்ரேற் பாங் ஒப் இன்டியா என்ற தனியார் வங்கி நிர்வாகம் இணைந்து கொண்டுள்ளன.

1995 ஜூலை 31ம் திகதி மேற்சொன்ன வங்கி நிர்வாகத்துக்கும் வங்கி ஊழியர்களுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம், ஊழியர்களை வே[illegible] மூலம் இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மீறிவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குழப்பம் ஏற்படுத்தாது கைத்தொழில் அமைதியை ஊர்ஜிதம் செய்ய கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் ஊழியர்கள் கட்டுப்பட்டுள்ளனர் எனவும் மறியல் செய்வதும் மற்றும் அத்தகைய கூட்டு நடவடிக்கைகளும் ஒப்பந்தத்தை மீறுவதாகும் என்பதையும் இங்கு நீதிபதி ஒப்புக் கொண்டுள்ளார். அக்டோபர் 2ம் திகதி தொடக்கம் அக்டோபர் [illegible] திகதி வரை எந்த ஒரு தொழிற்சங்க நடவடிக்கையிலும் ஈடுபடுவதையும் இந்தத் தடையுத்தரவு தடை செய்கின்றது.

வங்கி ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி ஆரம்பித்த பிரச்சார இயக்கத்தை தகர்ப்பது இந்தத் தடை உத்தரவின் நோக்கமாக இருந்த போதும் அதன் இலக்கு அதற்கு அப்பால் நீண்டதூரம் செல்கின்றது. இது வங்கி ஊழியர்கள் எதிரில் பெரும் அரசியல் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவில் பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே பலத்த மோதுதல்

மலேசியாவின் மாஜி.பிரதி பிரதமர் அன்வர் இப்பிராஹீமை சிறையில் தள்ளியதை எதிர்த்தும் நாட்டின் ஜனநாயக விரோத சட்டங்களை சீர்திருத்தக் கோரியும் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் தொடர்ந்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிசாருடன் மோதிக் கொண்டனர்.

அன்வர் அமைச்சர் பதவியில் இருந்தும் ஆளும் ஐக்கிய தேசிய மலாய் அமைப்பில் இருந்தும் பிரதமர் மஹதீர் மொஹமட்டினால் நீக்கப்பட்டு ஊழல், தன்னினச் சேர்க்கை தொடர்பான பொய்க் குற்றச்சாட்டுக்களின் பேரில் பிணைமறுக்கப்பட்டு சிறையில் தள்ளப் பட்டுள்ளார்.

செப்டம்பர் 20ம் திகதி அன்வர் கைது செய்யப்பட்டதில் இருந்து மோதுதல்கள் பெரிதும் வன்முறையானதாக மாறியதாக எதிர்க்கட்சியும் மனித உரிமைகள் அமைப்புக்களும் தெரிவித்தன. நகரின் மத்தியில் அமைதியான ஊர்வலத்தை தகர்க்க பொலிசார் துர்நாற்றம் கொண்ட மருந்துகளைத் தெளித்ததோடு மலே கிராமப்புறமான கம்பொங்பாறுவில் ஒரு பள்ளிவாசலை கண்ணீர்ப்புகை கொண்டும் தாக்கினர்.

பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் லிம் கிட் சியாங்கின் ஒரு அறிக்கையின்படி கலகம் நிராயுதபாணிகளான அப்பாவி மக்களை பொலிசார் மிகவும் காட்டுமிராண்டித்தனமான முறையில் கையாண்டதைத் தொடர்ந்தே வெடித்துள்ளது.

இதில் ஈடுபட்ட பொலிசாரில் பலரும் சாதாரண உடையில் காணப்பட்டதோடு சிலர் பாதுகாப்பு உடை அணிந்தும் இருந்தனர்.

பொலிசாரின்படி 241பேர் கைது செய்யப்பட்டனர். ஆனால் பத்திரிகைச் செய்திகளின்படி இது 400 ஆகும். அத்தோடு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதும் பாதசாரிகள் மீதும் இந்தத் தாக்குதல்கள் வேண்டும் என்றே நடாத்தப்பட்டதாக பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களுள் பல பெண்களும் அடங்குவர்.

அன்வர் ஆதரவு ஆர்ப்பாட்ட ஊர்வலம் சட்டவிரோதமாகப் பிரகடனம் செய்யப்பட்டு இருந்த நிலையிலும் அக்டோபர் 24ம் திகதி சனிக்கிழமை நடாத்தப்பட்டுள்ளது. பொலிசார் ஊர்வலத்தை உடைப்பதாக எச்சரிக்கை செய்திருந்ததோடு கைது செய்யப்படும் எந்த ஒரு நபரும் நாட்டின் உள்நாட்டு பாதுகாப்பு சட்டத்தின் கீழ்த் தடுத்துவைக்கப்படுவர் எனவும் கூறியது. இந்தச் சட்டத்தின் கீழ் எவரும் வழக்கு விசாரணை இல்லாமல் இரண்டு வருடங்களுக்கு தடுத்துவைக்கப்பட முடியும்.

பிரதமராகவும் அத்தோடு உள்நாட்டு அமைச்சராகவும் விளங்கும் மஹதீர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதலுக்கான கட்டளையைப் பிறப்பித்தார். அவர் பொலிசாரின் வன்முறைக்காக வக்காலத்து வாங்கினார். சில ஆர்ப்பாட்டக்காரர்கள் பெற்றோல் குண்டுகளைப் பாவித்ததாகவும் பெண்களையும் குழந்தைகளையும் மனித கேடயமாகப் பாவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார். "கலம்பகத்தின் போது குழந்தைகள் தீக்கிரையானால் பொலிசாரை குறை சொல்ல வேண்டாம்" என மஹதீர் கூறினார்.

ஆனால் தொடர்ந்து வரும் ஆரப்பாட்டங்களை நசுக்க பொலிஸ் நடவடிக்கையில் ஈடுபட மஹதீர் முயன்றமையானது அவர் ஆட்சியில் கொண்டிருந்த பிடி சிதறுண்டு போனதற்கான ஒரு தெளிவான சமிக்ஞையாக விளங்கியது. மஹதீருக்கு பேரளவிலான ஆதரவு இருந்த போதிலும் அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை தொடர்பாக ஐக்கிய தேசிய மலாய் அமைப்பிலும் மலேசியன் ஆளும் வட்டாரங்களிலும் பெரும் பிளவு ஏற்பட்டுள்ளது.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் மஹதீர் கோலாலம்பூரிலான காமன்-வெல்த் விளையாட்டுக்களைத் தொடர்ந்து தேர்தலை நடாத்துவதற்கான தயாரிப்பில் ஈடுபட்டுவருவதாக பத்திரிகையாளர்களுக்கு மறைமுகமாகத் தெரிவித்தார்.

இப்போது அந்தத் திட்டங்கள் குறைந்தது ஒரு வருடத்துக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளதாக தெரிகின்றது.

அன்வர் பதவி நீக்கம் செய்யப்பட்டு அவரும் அவரின் ஆதரவாளர்களும் ஆளும் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட போதிலும் மஹதீர் அந்த பிரதி பிரதமர் என்ற முக்கிய பதவிக்கு எவரையும் நியமனம் செய்யவில்லை. அவரின் இடத்துக்கு யார் நியமிக்கப்படுவர் என்பது தொடர்பாக இருந்துவரும் பிளவுகளையும் இழுபறிகளையும் இது காட்டுகின்றது.

மஹதீரின் ஆதரவாளரும் ஐக்கிய தேசிய மலாய் அமைப்பின் சுப்ரீம் சபையின் அங்கத்தவருமான இப்பிரஹாம் அலி தன்னினச் சேர்க்கை எதிர்ப்பு தொண்டர் இயக்கத்தை அமைப்பதை மஹதீரின் மூத்த மகள் எதிர்த்துள்ளார். இது தன்னினச் சேர்க்கையாளர்களுக்கு சேறடிக்கவும் நவம்பர் 2ம் திகதி அன்வர் வழக்கு விசாரணைக்கு சார்பாக சூழ்நிலையை மாசுபடுத்தவும் செய்யப்பட்ட முயற்சியெனக் கண்டனம் செய்தார்.மரீனா மஹதீர் மலேசியன் உதவி சபையின் தலைவியாவார்.

இந்த அரசியல் நெருக்கடி மலேசியா ஆசியா-பசிபிக் பொருளாதார கூட்டின்( ) உச்சி மகாநாட்டை நவம்பரில் நடாத்தும் போது மேலும் உச்சக் கட்டத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பிலிப்பீன் ஜனாதிபதி எஸ்ட்ராடாவும் இந்தோனேஷிய ஜனாதிபதி ஹபிபியும் அன்வர் கையாளப்பட்டுள்ள விதம் குதித்து மஹதீரை விமர்சித்துள்ளனர்.இந்த ஆசியா-பசிபிக் பொருளாதார கூட்டின் உச்சி மகாநாட்டின் போது கிளின்டன் மலேசிய ஜனாதிபதி மஹதீருடன் எந்தவிதமான அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளும் நடாத்த மாட்டார் என அமெரிக்க நிர்வாகம் காட்டிக்கொண்டுள்ளது.

## உண்மைக் காரணம்

மலேசியாவில் வெடித்துள்ள அரசியல் நெருக்கடிகள் அன்வரின் ஊழல் அல்லது தன்னினச் சேர்க்கை எனப்படுபவற்றின் பெறுபேறாக ஏற்பட்டவை அல்ல. ஆனால் ஆசியாவிலும் அனைத்துலக ரீதியிலும் ஏற்பட்டுள்ள ஆழமான பொருளாதார நெருக்கடி தொடர்பாக என்ன கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதன் பேரில் ஆளும் வட்டாரங்களில் ஏற்பட்டுள்ள ஆளமான பிளவைப் பிரதிபலிக்கின்றது.

நிதியமைச்சர் என்ற வகையில் அன்வர் மலேசிய பொருளாதார நெருக்கடிக்கு வங்கி கடன் வழங்குவதில் சலுகை காட்டியமையும் நெருக்கடிக்குள்ளானவர்களை மீட்டெடுக்க அரசாங்கம் பிணை நின்றமையும் பிரமாண்டமான திட்டங்களின் பேரிலான எல்லையற்ற செலவினங்களுமே காரணம் என்றுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக பணச் சந்தையினதும் கோரிக்கைகளுக்கு அமைய அவர் மலேசிய பொருளாதாரத்தை மேலும் திறந்துவிடத் தள்ளப்பட்டார். இவை ஐக்கிய மலேசிய தேசிய அமைப்புடன் நெருக்கமான உறவுகொண்ட மலேசிய பெரும் வர்த்தகர்களைப் பாதித்தது.

சர்வதேச ஊகக்காரர்களுடன் மோதிக்கொண்டதோடு மலேசிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு பெரும் அதிகாரமும், மூலதனப் பாய்ச்சல்கள் மீது இறுக்கமான விதிகளையும் வேண்டிய மஹதீருடன் அன்வர் பெரும் அளவில் மோதிக்கொண்டார்.அன்வர் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்னதாக மஹதீர் சிக்கன நடவடிக்கைகளை ரத்துச் செய்தார்.குறுங்கால மூலதனப் பாய்ச்சல்களை வரையுறுத்தார். மலேசியன் டாலரில் வெளிநாட்டு வர்த்தகம் செய்வதை நிறுத்தினார்.

நிதி அமைச்சராக பதவி ஏற்ற மஹதீரினால் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் மலேசிய வர்த்தக நிறுவனங்களுக்கு பிரமாண்டமான வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன. 2000 ஆண்டுக்கான புதிய வரி முறைக்கு மாறிச் செல்வதாக குறிப்பிட்ட அவர் 1999ல் கம்பனிகளுக்கான வரிகள் அடியோடு நீக்கப்படும் என்றுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தைச் சமர்பித்து உரைநிகழ்த்துகையில் மஹதீர் தமது பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொண்டார்." நான்கு சகாப்தங்களுக்கு மேலாக எமது பொருளாதார அபிவிருத்தியில் ஈட்டிக்கொண்டவைகளை நாடு கட்டிக்காக்கும் விதத்தில் அரசாங்கம் செயற்பட்டுள்ளது. உங்களது தொடர்ச்சியான ஆதரவுடன் நாம் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் பார்க்கின்றோம் ." என்றுள்ளார்.

## நெருக்கடியும் பிளவும்

ஆனால் மஹதீர் ஐக்கிய மலேசிய தேசிய அமைப்பினுள் தற்காலிக அரசியல் ஆதரவைக் தேடிக் கொண்டிருந்தாலும் அவரின் அரசியல் மூலோபாயம் விரைவில் ஆழமான பிளவுகளுக்கும் நெருக்கடிகளுக்குமே இட்டுச் சென்றுள்ளது. மலேசியாவில் பொருளாதாரப் பின்னடைவுகள் பெரும் வர்த்தக நிறுவனங்களில் ஒரு பகுதியை பெரிதும் பாதித்துள்ளது. தனது அரசியல் ஆதரவுக்கு ஐக்கிய தேசிய மலே அமைப்பு சார்ந்துள்ள மலே மத்தியதர வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தை அது பாதித்துள்ளது.

வரி வெட்டுக்களும் குறைந்த வட்டி வீதங்களும் மற்றும் நிதி உதவிகளும் இந்த ஐக்கிய தேசிய மலே அமைப்பின் சமூக அடிப்படைக்கு உடனடி நிவாரணம் வழங்கியுள்ளது. மலேசிய பொருளாதார நெருக்கடி மேலும் ஆழமாகும் இடத்து மஹதீரின் ஆதரவு துரிதமாக தகர்ந்து போகும். அத்தோடு அன்வரை சிறையில் தள்ளியதன் மூலம் மஹதீர் ஆளும் வட்டாரங்களில் ஆழமான பிளவுகளையும் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களையும் உருவாக்கியுள்ளார். அது அரசாங்கம் கொண்டிராத ஒரு வெகுஜன இயக்கத்தை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே தோற்றுவிக்கும் ஆபத்தை உருவாக்கியுள்ளது. அன்வராலோ அல்லது பல்வேறு எதிர்க்கட்சிகளினாலோ அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொணர முடியாது.

# வர்த்தகர்கள் புதிய அரசியல் முறையை வேண்டுகிறார்கள்

2ம் பக்கத் தொடர்ச்சி

போயுள்ளதாலும் தென் மாகாணங்களில் வர்க்க முரண்பாடுகளின் ஆதாளபாதாளம் உக்கிரம் அடைவதாலும் எல்லாவற்றுக்கும் மேலாக உலக முதலாளித்துவ நெருக்கடியின் உக்கிரத்தினால் இலங்கை முதலாளிகள் குழம்பிப் போயுள்ளனர். தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளி அனைத்துலக மூலதனத் துடன்சேர்ந்து சுரண்டலுக்கான பெரும் வாய்ப்பான நிலைமைகளை உருவாக்கிக் கொள்வது அவர்களுக்கு உடனடித் தேவையாகி உள்ளது."உலகளாவிய ரீதியில் நிதி நெருக்கடி நிலவும் ரூஷ்யாவைப் போல் பொருளாதாரங்கள் பொறிந்து போகும் நிலைமையினுள் முதலீட்டுக்கான நல்ல உள்நாட்டு நிலைமைகளை ஊர்ஜிதம் செய்வதன் மூலம் தனியார்துறையை பலப்படுத்துவது முக்கியம்." என தேசிய கைத்தொழில் சபையின் தலைவர் வீரசிங்க அவர்களின் மகாநாட்டில் கூறியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் பொருளாதார பின்னடைவு பரந்துவரும் ஒரு நிலைமையினுள் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் சுரண்டலுக்கு வாய்ப்பான நிலைமைகளை உருவாக்கிக் கொள்ள ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் பல்வேறுபட்ட முறையில் தலையிட்டுக் கொண்டுள்ளார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டினுள் பிரித்தானிய அரசாங்கத்துக்கும் அயர்லாந்து அரசாங்கத்துக்கும் ஐ.ஆர்.ஏ.க்கும் இடையே சமரசம் திணிக்கப்பட்டதும் பழைய யூகோசலாவிய பிராந்தியத்தினுள் தத்தமது அதிகாரத்தின் கீழ் அரசுகளையும் ஆட்சியாளர்களையும் வழிநடாத்த ஐரோப்பிய, அமெரிக்க ஆட்சியாளர்கள் தலையிட்டுக் கொண்டுள்ளதும் இந்நிலையிலேயேயாகும்.

செப்டம்பர் கடைப்பகுதியில் கிளிநொச்சியில் இலங்கை இராணுவ முகாம் வீழ்ச்சிகண்டு சுமார் இரண்டாயிரம் படையாட்கள் கொல்லப்பட்டதும் சுமார் இரண்டாயிரம் படையாட்கள் காயம் அடைந்ததும் அரசாங்கம் யுத்தத்தினுள் மோசமான முறையில் சிக்கிக் கொண்டுள்ளதைக் காட்டிக்கொண்டுள்ளது. இலங்கை முதலாளி வர்க்கப் பகுதிகள், ஏகாதிபத்தியவாதிகள் என்ற இரு தரப்பினரும் வெற்றி கொள்ள முடியாத நிலைமையினுள் சிக்கிக் கொண்டுள்ளது மீண்டும் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாக வலியுறுத்துகின்றார்கள்.

பிரிவினைவாத யுத்தமொன்றில் ஈடுபடும் அதேசமயம் விடுதலைப் புலிகள் தமக்கு அதிகமான வசதிவாய்ப்புக்களைக் கொண்ட ஒரு குட்டி அரசின் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள நீண்டகாலமாகவே முயன்று வந்துள்ளது. விடுதலைப் புலிகளின் நெருக்கடி வரவர உக்கிரம் கண்டு வருகின்றது. இராணுவப் பின்னடைவுகள் மட்டுமன்றி விடுதலைப் புலிகளின் பொதுமக்கள் அடிப்படை வெகுவேகமாக சிதறுண்டு கொண்டுவருகின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவின் தலைவர் தமிழ்ச் செல்வம் பேச்சுவார்த்தை மேசைக்கு வருகை தருவதற்கு தெற்கின் முக்கிய இரண்டு முதலாளித்துவக் கட்சிகளது ஐக்கியத்தையும் அக் கட்சிகளுக்கும் தமக்கும் இடையேயான நம்பிக்கையையும் நிர்மாணிக்கவும் மூன்றாவது தரப்பின் தலையீடு அவசியம் என கடந்த ஆகஸ்டில் த சண்டே லீடர் பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ளார். புரொன்ட் லைன் என்ற இந்திய பிரசித்திபெற்ற சஞ்சிகைக்கு (1998 அக்டோபர் 3ம் திகதி) வழங்கிய பேட்டியில் தலையீட்டாளராகும்படி கேட்டு விடுதலைப் புலிகள் தலைமை தென்ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு கடிதம் எழுதியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈபிஆர்எல்எவ், ஈபீடீபி, முதலான தமிழ் முதலாளித்துவ அமைப்புக்கள், அந்த வர்த்தக அமைப்புக்கள் கூட்டிய சர்வ கட்சி மகாநாட்டில் கலந்து கொண்டு அதன் ஆரம்பிப்பைப் பற்றி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டுள்ளன. இந்த அமைப்புக்கள் லியம் பொக்ஸ் உடன்படிக்கைக்கு உயிரூட்டவும் இணக்கம் தெரிவித்துள்ளன.

முதலாளித்துவ ஏஜமானர்களின் மகாநாட்டில் கலந்து கொள்ளாத லங்கா சமசமாஜக் கட்சி மீண்டும் கண்களில் மண்தூவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. "பல்லாண்டு காலங்களாக இடம்பெற்ற போராட்டங்கள் மூலம் தொழிலாளர் வர்க்கம் வெற்றிகொண்ட பாதுகாப்புநிறைந்த சட்டங்களையும் நடைமுறைகளையும் ஒழித்துக் கட்ட" முதலாளிகள் முயற்சிப்பதாக ல.ச.ச.க.வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழிலாளர் சட்டச் சீர்திருத்தம் பற்றிக் குறிப்பிடாது போயிருந்தால் சீலையையும் வரிந்து கட்டிக் கொண்டு சர்வகட்சி மகாநாட்டில் சென்று குதிக்க தமக்கும் வாய்ப்பு இருந்து கொண்டிருந்ததாக சமசமாஜக் கட்சித் தலைவர்கள் சுற்றிவளைத்துக் கூறியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிச இலக்கியங்களை நீங்களும் வாசியுங்கள்!



## லியொன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்



## சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00



## முதலாளித்துவத்தின் மரண ஓலமும்

நான்காம் அகிலத்தின் பணிகளும்

இடைமருவு வேலைத்திட்டம்

நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.


விலை ரூ. 15.00



## இலங்கையில் ட்ரொட்ஸ்கிசமும் திரிபுவாதமும் சமசமாஜ வரலாற்று ஏட்டிலிருந்து

கீர்த்தி பாலசூரிய

விலை ரூ. 15.00



## அடிப்படைக் கொள்கைகளுக்கும், மூலோபாயத்துக்குமான 25 ஆண்டுக்கால உறுதியான போராட்டம்

விஜே டயஸ்

விலை ரூ. 10.00



## இலவசக் கல்வியை காப்பது எப்படி?

விஜே டயஸ்

விலை ரூ. 10.00



ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும்

## பேர்ளின் உலக மகாநாட்டின் முன்நோக்கும்

விலை ரூ. 25.00



ஆகஸ்ட் சதியின் பின்னர்:

## சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?

விலை ரூ. 25.00



சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதன் பின்னர்

## மார்க்சிசத்துக்கான போராட்டமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

டேவிட் நோர்த்

விலை ரூ. 5.00



## நிரந்தரப் புரட்சியும் சோசலிச அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும்

கீர்த்தி பாலசூரிய நினைவுப் பேருரை

டேவிட் நோர்த்

விலை ரூ. 8.00

தொழிலாளர் பாதை வெளியீடு, 90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு 10. தொலைபேசி: 682220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத யுத்தத்தை நூற்றுக்கு 77 வீதமானோர் எதிர்க்கின்றனர்

1ம் பக்கத் தொடர்ச்சி

தீர்வைக்காண எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன?என்பதாகும். இதற்கு நூற்றுக்கு 20.8வீதமானோர் சமத்துவம் வழங்குவதன் மூலம் எனவும் நூற்றுக்கு 18.6வீதமானோர் பரஸ்பரம் நல்லெண்ணத்தின் மூலம் எனவும் கூறியுள்ளனர். வடக்கு யுத்தத்துக்கு அடிப்படையாக உள்ள காரணிகள் என்ன எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு, நூற்றுக்கு 29.2 வீதமானோர் ஒரே வீச்சில் "நிஜ குறைபாடுகள்" எனப் பதில் அளித்துள்ளனர். மற்றொரு 23.2வீதமானோர் அதற்குக் காரணம் இனவாதமே என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்தக் கருத்துக் கணிப்பு வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் நடாத்தப்பட்டதோடு இந்தக் கருத்துக்கள் 2000 பேரிடம் இருந்து திரட்டப்பட்டும் உள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடக்கம் சிங்கள இனவாதக் குண்டர்கள் வரையிலான பிற்போக்குக் கும்பல்கள் தமிழர் எதிர்ப்பு இனவாதத்தின் மூலம் பொதுமக்களைக் குழப்பியடிக்க சகலதையும் செய்து கொண்டுள்ள ஒரு நிலைமையில் அப்பகுதி மக்களிடையே தளிர் விட்டுள்ள இந்த ஆர்வம் பெரும் பெறுமதிமிக்கதாகும்.

1983 தொடக்கம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளத் தொடுக்கப்பட்டுள்ள மிலேச்ச யுத்தத்துக்கும் அத்தோடு நாடு பூராவும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள கொடிய இராணுவ பொலிஸ் அடக்குமுறை ஆட்சிக்கும் சிங்கள தமிழ் தேசிய இனங்கள் இரண்டினது மக்களும் முகம் கொடுத்துள்ளனர்.

இந்தக் கருத்துக்கணிப்பு அந்த யுத்தத்துக்கும் வளர்ச்சிகண்டுவரும் அடக்குமுறை ஆட்சிக்கும் எதிராக பொதுமக்களிடையே அபிவிருத்தி கண்டுவரும் மனோபாவத்தையும் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கும் ஜனநாயக வழிபற்றி பெரிதும் நனவான பகுதியினர் சிந்திக்கத் தொடங்கி உள்ளதையும் சரியான விதத்தில் எடுத்துக் காட்டியுள்ளது.

## இனவாதிகள் வெறியாட்டம்

சிங்கள இனவாதிகளும் அவர்களின் ஊதுகுழலான சில முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இந்தக் கருத்துக் கணிப்புக்கு எதிராக பாய்ந்து விழுந்துள்ளனர். காரணம்? மக்களிடையே வளர்ச்சி கண்டுவரும் யுத்த எதிர்ப்பினை அது பிரதிபலிப்பதேயாகும். பொது மக்களிடையே வளர்ச்சி கண்டுவரும் நிலைமையையிட்டு முதலாளி வர்க்கமும் அதனது இனவாத வெறியர்களும் கலக்கம் அடைந்துள்ளனர் என்பதில் சந்தேகம் கிடையாது.

இலங்கை இனவாதிகளில் பேர்போனவரான நளின் டி.சில்வா ஜலண்ட் பத்திரிகைக்கு(1998 அக்டோபர் 14) "கருத்துக்கணிப்பின் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். மேற்சொன்ன ஆய்வினை நடாத்துவதற்கு அரச சார்பற்ற அமைப்புக்கள் (NGO) பணம் கொடுத்துள்ளதாலும் ஆய்வின் விடயங்களையிட்டு ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்கள் "மகிழ்ச்சியில் மூழ்கி இருப்பதாலும்" அந்த விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூற நளின் டி சில்வா முயற்சிக்கின்றார். நளின் டி சில்வா உட்பட்ட சிங்கள பௌத்த இனவாதப் புள்ளிகள் சிங்களம் பேசும் , பௌத்த மதத்தைப் பின்பற்றும் பிற மக்கள் சகலரையும் எருமைகளாகவே கணித்துக் கொண்டுள்ளனர்.

ஆதலால் நூற்றுக்கு 77.4 வீதமானவர்கள் யுத்தத்தினை எதிர்ப்பது என்பது இம்மக்களின் புத்தியின் பெறுபேறாக ஏற்படவில்லை எனவும் பிறரை மகிழ்விக்கும் சிங்கள பௌத்த பண்பின் பெறுபேறாகும் எனவும் நளின் டி சில்வா கூறுகின்றார். இந்த இனவாதி ஒரு புறத்தில் கருத்துக்கணிப்பை முரண்பாடுகள் கொண்டது என்கின்றார். மறுபுறத்தில் தமக்கு வாய்ப்பானது எனத் தோன்றும் இடத்தில் கருத்துக் கணிப்பின் பெறுபேறுகளை சுரண்டிக் கொள்ளவும் முயற்சிக்கின்றார்.

உதாரணமாக வடக்கு யுத்தத்துக்கு "நிஜ குறைபாடுகளே" அடிப்படையாகியுள்ளது எனக் கூறியுள்ள ஆட்கள் நூற்றுக்கு 29.2 வீதமான சிறுதொகையினர் இல்லையா? என நளின் டி சில்வா துள்ளிக் குதிக்கின்றார். இனவாதத்தை வயிற்றுப் பிளைப்பாகக் கொண்டு அதன் மூலம் இலங்கை முதலாளி வர்க்கத்துக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இராணுவ சர்வாதிகாரத்துக்கும் சாமரை வீசும் இவர்கள் யுத்தத்துக்கு எதிராக மக்களிடையே வளர்ச்சி கண்டு வரும் மனோநிலையை அடியோடு கிள்ளி எறிய முயற்சிக்கின்றனர்.

இதற்கிடையே ஜலண்ட் பத்திரிகை இந்தக் கருத்துக் கணிப்பை வழிநடாத்திய பேராசிரியர் ஹெட்டிகேயுடன் ஒரு பேட்டியை நடாத்தியுள்ளது. அது அக்டோபர் 21ம் 22ம் திகதிய ஜலண்ட் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. எந்தளவுக்கு இவர்கள் குழம்பிப் போயுள்ளார்கள் தெரியுமா? இனவாதப் பிரச்சாரத்திற்கு பேர்போன இவர்கள் அக்டோபர் 9ம் திகதி பத்திரிகையில் இந்தக் கருத்துக்கணிப்பை பற்றி ஒரு ஆசிரியத் தலையங்கத்தையும் தீட்டியுள்ளனர். இவை எல்லாமே அதில் வெளிப்பாடான கருத்துக்களைப் பற்றிய ஒரு குழப்பத்தையும் அவநம்பிக்கையையும் சிருஷ்டிப்பதையே இலக்காகக் கொண்டிருந்தன.

பேராசிரியருடனான பேட்டியில் "ஜலண்ட்" காரர்கள் தூக்கி வீசிய ஒரு கேள்வியைப் பாருங்கள்: "பிரச்சினையைப் பற்றி தாம் உண்மையிலேயே கருதுவது என்ன என்பதை வெளிப்படுத்திக் கொள்ள கணிப்பின் போது பொதுமக்கள் முன்வருவார்கள் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களா?"

அவர்களின் பிரதிபலிப்புக்கள், ஒழிப்புமறைப்புக்கள், தனிப்பட்ட பண்புகள் பெறுபேறுகளை மாசு படுத்தாதா? இது இனவாதக் குண்டர்களும் அவர்களின் எழுத்தாளர்களும் தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களை அவமானம் செய்யும் முறைகளில் ஒன்றாகும்.பொதுமக்கள் நேரடியாக முன்வந்து தெரிவிக்கும் கருத்துக்களுக்கு எதிராக பொதுஜன அபிப்பராயத்தின் உரித்துக்காரர்களாக இராணுவத்துடன் சேர்ந்து இந்த இனவாதிகள் பொதுஜன அபிப்பராயத்துக்கு கட்டளை பிறப்பிக்கின்றார்கள். அது இராணுவ பாசிச சர்வாதிகாரத்திற்கான முன்னோடிக் கூச்சலாகும். பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதில் சி.ல.சு.க.முதலாளிகள் மட்டும் அல்ல சகல வகையறாக்களைச் சேர்ந்த சந்தர்ப்பவாதிகளும் மாஜி.தீவிரவாதிகளும் சந்திரிகா குமாரதுங்கவை சுற்றிவளைத்துக் கொள்ள பயன்படுத்தியது யூ.என்.பி.அரசாங்க காலத்தில் 11 ஆண்டுகளைக் கடந்துவிட்டிருந்த இந்த இனவாத யுத்தம் தொடர்பாக மக்களிடையே வளர்ச்சி கண்டுவிட்டிருந்த இந்த எதிர்ப்பை அல்லவா? சமாதானம் பற்றிய மோசடி பொய்ப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் 1995ஏப்பிரலில் பொதுஜன முன்னணி அரசாங்கம் இனவாத யுத்தத்தை மீண்டும் ஆரம்பித்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்டுள்ளது. இதனால் முன்னர் ஒரு போதும் இல்லாத பேரழிவு இடம்பெற்றுள்ளது.

## யுத்தத்தின் பேரழிவு

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சகல தமிழ் ஒடுக்கப்படும் மக்களும் யுத்தத்தின் பயங்கரத்தில் நசுங்குண்டு போயுள்ள அதே வேளையில் குறைந்தது நான்கு இலட்சம் மக்கள் அகதிகள் முகாம்களில் பட்டினிக்கும் தொற்றுநோய்களுக்கும் மரணத்துக்கும் பலிகடாக்களாகியுள்ளனர்.

கிராமப்புறங்களில் இருந்து இராணுவத்துக்கு திரட்டப்பட்ட வேலையற்ற பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் யூ.என்.பி.அரசாங்க காலத்தில் கொலை செய்யப்பட்டதன் பின்னர் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளாக கொலை செய்யப்பட்டுள்ள படையாட்களின் எண்ணிக்கை 11548 ஆகும். இந்த நான்கு ஆண்டுக் காலங்களிலும் காயமடைந்துள்ள படையாட்களின் எண்ணிக்கை 23037 ஆகும். ஆயிரக் கணக்கான விடுதலைப் புலிகளின் படையாட்களையும் சேர்த்து வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரத்தக் காடாகியுள்ளது. 1983ல் 120 கோடி ரூபாக்களாக இருந்த பாதுகாப்பு செலவினம் இப்போது 5700 கோடி ரூபாக்களாகியுள்ளது. தென்மாகாணங்களில் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் மீது அடக்குமுறை ஆட்சியைத் திணிக்கும் கொலைகார ஆயுதமாக மாறியுள்ளது. பொதுமக்களின் தொழில், வாழ்க்கைத் தரம், நலன்புரி சேவைகள் வெட்டிச் சரிக்கப்பட்டுள்ளதோடு அனைத்துலக மூலதனத்தின் பயங்கர சுரண்டலைக் கட்டி அடிப்பதற்கு முன்னர் யூ.என்.பி.அரசாங்கத்தைப் போலவே இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தை பயன்படுத்திக் கொண்டுள்ளதை பொதுமக்கள் பெரிதும் கண்டு கொண்டுள்ளனர். அத்தகைய ஒரு நிலையில் இடம்பெற்ற ஒரு கருத்துக் கணிப்பில் இருந்து இத்தகைய பெறுபேறுகள் வெளிப்பட்டதை முதலாளித்துவ பிற்போக்காளர்களும் இனவாதக் குண்டர்களுமே புதுமையாகக் காட்ட முடியும்.

யுத்தத்துடனும் தேசிய இனப்பிரச்சினையுடனும் தொடர்பு பட்ட விதத்தில் நடாத்தப்பட்ட இந்தக் கருத்துக்கணிப்பு மக்கட் சமுத்திரத்தின் அடியில் குமுறிக் கொண்டுள்ள அபிவிருத்திகளைக் காட்டுகின்றது. சோசலிச சமத்துவக் கட்சி இதை எதிர்ப்பார்க்கின்றது. அதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றது. அதற்கிடையே முதலாளித்துவப் பிற்போக்காளர்களும் சந்தர்ப்பவாதிகளும் இனவாதிகளும் பொதுமக்களிடையேயான இந்த அபிவிருத்திகளை துவம்சம் செய்துவிடக் கூட்டுச் சேர்ந்து கொண்டுள்ளனர். இந்த மனோநிலையை நசுக்கித்தள்ள மட்டுமல்லாது தமது பிற்போக்கு தேவைகளுக்காக நிலைமையைச் சுரண்டிக் கொள்ளவும் பார்க்கிறார்கள்.இதற்கு எதிராக யுத்தத்தை நிறுத்தவும் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கவும் வல்ல விஞ்ஞான பூர்வமான வேலைத்திட்டத்தை ஸ்தாபிதம் செய்ய சோசலிச சமத்துவக் கட்சி போராடுகின்றது.

இனவாத யுத்தத்தை நடாத்தும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் அதற்கு எண்ணெய் வார்க்கும் இனவாதிகளும் விடுதலைப் புலிகளின் பிரிவினை வாதத்துக்கும் அதன் பிற்போக்கு வேலைத் திட்டத்துக்கும் விரல் நீட்டுவதன் மூலம் தமது பிற்போக்கினை மூடிமறைக்க முயற்சிக்கின்றார்கள். விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் சுரண்டலின் வசதிவாய்ப்புக்களை தமிழ் முதலாளி வர்க்கத்துக்கு தட்டிக் கொள்ளும் இலக்குடன் பிணைந்து கொண்டுள்ளதோடு இதைப் பூர்த்தி செய்யப் பிற்போக்கு நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்கின்றது. ஆனால் இந்தப் பிரிவினைவாதம் சிங்கள முதலாளி வர்க்கம் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத பாகுபாடு காட்டுவதன் உற்பத்தியாகும்: அதனால் போஷிக்கப்படுவதாகும்.தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டி, தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை இனரீதியில் பிளவுபடுத்தி ஏகாதிபத்தியச் சார்புவர்க்க ஆட்சியைக் காக்கும் முதலாளி வர்க்க உபாயமாகியது.இது மறுபுறத்தில் தமிழ் முதலாளி வர்க்கத்தை இரண்டாம் இடத்துக்குத்தள்ளி, தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை சுரண்டும் தனி உரித்தினைத் தமது கரங்களுக்குள் போட்டுக் கொள்ளும் முயற்சியுடன் இணைந்து கொண்டுள்ளது.

இந்த இனவாதப் பிளவினை சிதறடித்து, சிங்களம்-தமிழ் பேசும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஐக்கியப்படுத்த கடந்த காலத்தில் போராடியது ட்ரொட்ஸ்கிச இயக்கமான லங்கா சமசமாஜக் கட்சியேயாகும். அக்கட்சி 1964ல் இனவாதத்தைத் தூண்டும் அரசியலைக் கொண்ட இலங்கை முதலாளிகளின் முக்கிய கட்சியான சி.ல.சு.க.வுடன் கூட்டரசாங்கத்தில் சேர்ந்து கொண்டதன் மூலம் முதலாளிகள் இனவாதப் பிளவினை யுத்தம் வரை சுதந்திரமாக முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்ததோடு மட்டுமன்றி, விடுதலைப் புலிகள் என்ற பிரிவினைவாத இயக்கத்தின் தோற்றத்துக்கான நிலைமைகளையும் உருவாக்கினர்.இன்று மக்கள் முகம் கொடுக்கும் சகல பேரழிவுகளுக்குமான அடிப்படை இங்குதான் இருந்து கொண்டுள்ளது.

இந்த நிலைமையை அடியோடு மாற்ற வேண்டும். இல்லையேல் முதலாளித்துவப் பிற்போக்காளர்கள் பொதுமக்களை காட்டுமிராண்டித்தனத்தை நோக்கி இட்டுச் செல்வர். யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை உருவாக்கவும் சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் ஸ்தாபிதம் செய்யவும் பொதுமக்களிடையே வளர்ச்சி கண்டுவரும் அபிலாசைகளும் அக்கறையும் இந்த நிலைமையை மாற்றுவதற்காக உருவான நிலைமையாகும்.

## தீர்வுக்கான வழி

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனை எனப்படுவது யுத்தத்தினை முன்னெடுத்துச் செல்வதனதும் இனவாதப் பிளவுகளைச் சிருஷ்டிப்பதனதும் ஒரு ஆயுதமாகும். சுதந்திரம் எனப்படுவதன் பின்னர் கடந்து சென்றுள்ள காலப்பகுதியினுள் இலங்கை முதலாளி வர்க்கத்தின் சகல தரப்பினரும் அதன் குட்டி முதலாளித்துவ ஏஜன்சியும் தம்மால் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியாது என்பதைக் காட்டிக் கொண்டுள்ளதோடு அதை நச்சுத்தனமான முறையில் உக்கிரமாக்கி தமது வர்க்க ஆட்சியைக் கட்டிக்காப்பதற்கான எந்த ஒரு காட்டுமிராண்டி நடவடிக்கையிலும் ஈடுபடத் தாம் தயார் என்பதைக் காட்டிக் கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவில் கடற்படை மீனவர்களுக்கு எதிரான கெடுபிடி

நயினாதீவு கடற்தொழிலாளர்கள் தமது கடற்பிராந்தியத்தில் பிடிக்கும் மீனை நயினாதீவுக்கு வெளியே எடுத்துச் சென்று விற்பதை அங்கு முகாமிட்டுள்ள கடற்படையினர் தடை செய்துள்ளனர். மீனை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் சென்று நியாயமான விலைக்கு விற்க மீனவர்கள் எடுக்கும் முயற்சிகள் இதனால் தடுக்கப்பட்டுள்ளன. கடற்படையினரின் இந்த நடவடிக்கைகளுக்கு தீவில் உள்ள பிரஜைகள் குழு எனப்படுவது துணை போவதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

கடற்படையினரின் இந்தக் கெடுபிடிகள் பற்றி குறிப்பிடுகையில் ஒரு மீனவர் கூறியதாவது: "கடற்தொழிலாளி ஒருவர் மீனை யாழ்ப்பாணம் கொண்டு செல்ல படகில் ஏற்ற முற்பட்ட போது கடற்படையினர் அதைத்தடுத்து; பிடுங்கிப் பாலத்தில் கொட்டிவிட்டனர். தொழிலாளியை ஏசிய கடற்படையினர் நயினாதீவில் வைத்து மீனை விற்கும்படி கட்டளையிட்டனர்" என்றனர்.

இனவாத யுத்தக் கெடுபிடிகளினால் ஒரு தசாப்தத்துக்கு மேலாக அரசாங்கம் விதித்த கடற்வலய சட்டத்தினால் கடற்தொழிலாளர் மீன்பிடிக்க முடியாது இருப்பதோடு மட்டுமன்றி மக்களுக்கு உணவுக்கு மீனும் கிடைக்காது போயுள்ளது. நிலைமை இப்படி இருக்க பிரஜைகள் குழுவின் ஒத்துழைப்பினால் கடற்படையினை மக்களின் இரட்சகர்களாகத் தூக்கிப் பிடிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை பற்றி கடற்தொழிலாளர் கூறியதாவது : "கடற்தொழிலாளர் எதிர்நோக்கும் வாழ்க்கை நெருக்கடிகளை தீர்க்க இந்த பிரஜைகள் குழு முன்நிற்பது இல்லை. தொழிலாளி தான் பிடிக்கும் மீனை உயர்ந்த விலைக்கு விற்பதன் மூலமே தனக்கு அவசியமான பொருட்களை அவனால் கொள்வனவு செய்ய முடியும். ஒரு கிலோ மீனை ரூபா.50/க்கு மேல் விற்பனை செய்யக் கூடாது என இந்தப் பிரஜைகள் குழு தீர்மானம் செய்துள்ளது."

இந்தக் கெடுபிடியின் ஆபத்தை வர்ணிக்கையில் அந்தத் தொழிலாளி மேலும் கூறியதாவது: "தொழிலாளி மீனைச் சந்தையில் ரூபா.50க்கு கூடுதலாக விற்றால் அவரை மறுநாள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல அனுமதிக்க மாட்டார்கள்" என்றார். இந்தப் பிரஜைகள் குழு தீவில் ஏனைய பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாடு விதித்துள்ளதா? எனக் கேட்ட அவர், வர்த்தகர்கள் பொருட்களைத் தாம் நினைத்த விலைக்கு விற்பனை செய்து மக்களைச் சுரண்டுகின்றார்கள் என்றார்.

கடற்படையினரின் விசேட அங்கீகாரத்துடன் கடலில் மீன், கடல் அட்டை பிடிக்கும் உரிமையை ஒரு சில தனியார் வியாபாரிகள் கொண்டுள்ளனர். ஆனால் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு அட்டை பிடிக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இதனால் கடற்படையினரின் விசேட அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளின் படகுகளில் சென்று மட்டுமே அட்டை பிடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடற்பிராந்தியத் தடையினால் கடற்தொழிலாளர் பாதிக்கப்பட்டு உள்ளதோடு மட்டுமன்றி வரையறுக்கப்பட்ட கடற்பிராந்தியத்தில் சென்று மீன் பிடிப்பதும் விற்பனை செய்வதும் கூட அரசாங்க ஆயுதப் படைகளதும் அவர்களின் கையாட்களாக இயங்கும் பிரஜைகள் குழுக்களதும் கெடுபிடிகளுக்கு உட்பட்ட விடயமாகி உள்ளது.

தொழில் உரிமைக்கு இருந்துவரும் பெரும் சவாலைப் பற்றி கலந்துரையாடுவதும் கூட பெரும் அச்சுறுத்தலுக்குரிய விடயமாக இருப்பதாக இம்மீனவர்கள் தெரிவித்தனர். தீவுக்கு வெளியே இந்தத் தகவல்களை கொடுத்தோர் அடையாளம் காணப்பட்டால் அவர்களின் தேசிய அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்படும் ஆபத்து இருந்து கொண்டுள்ளது. அந்நிலையில் தொழிலாளர் தீவுக்கு வெளியே செல்ல முடியாதது மட்டுமன்றி வீதி துப்புரவு செய்தல், வேலி அடைத்தல், பாலத்துக்கு அணைகட்டுதல், பனை ஏறுதல், தேங்காய் பறித்தல் போன்ற வேலைகளை செய்யும் நிலை ஏற்படும் "என்றனர்.

நயினாதீவில் யுத்த நிலைமைகளின் கீழ் சீரழிந்து போன சுகாதார, போக்குவரத்து பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிடுகையில் தொழிலாளர் பின்வருமாறு குறிப்பிட்டனர்: எமது தீவில் டாக்டர் இல்லை.சேவையில் இருந்து ஓய்வு பெற்ற ஒருவரை இங்கு நியமித்துள்ளனர். அவருக்கு வயசானதால் நோயாளர் சீரான விதத்தில் சிகிச்சை பெற முடியாது உள்ளது. அம்புலன்ஸ் மூலம் நோயாளரை எடுத்துச் செல்ல தீவுப்பகுதி மக்களுக்கு வாய்ப்பு இல்லை.காலையில் இடம்பெற்று வந்த அரசு படகுச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. இரவில் யாரும் நோய்வாய்ப்பட்டால் அவர்பாடு அதோ கதிதான்."

கர்ப்பிணிப் பெண்களின் நிலை எத்தகைய ஆபத்தானது என்பதை விபரிக்கையில் அவர்கள் பின்வருமாறு கூறினர்:

பிரசவ பெண்களை கடற்படையினர் தங்களின் விசைப்படகு மூலம் ஊர்காவற்துறைக்கு கொண்டு போய்ச் சேர்க்கின்றனர். அதுவும் நாம் கடற்படையினரிடம் சென்று அறிவித்தல் கொடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். அரச படையாட்கள் பயந்து பயந்து கடல் ரோந்துக்கு செல்லும் போது கர்ப்பிணிகளு[ம்] நோயாளர்களும் என்ன துணிச்சலு[டன்] கடற்படை படகில் செல்வது ? என[வு]ம் அவர்கள் கேட்டனர்.

## மார்க்சிசமும் இருபதாம் நூற்றாண்டின் பிரச்சினைகளும்

### ஒன்பது விரிவுரைகள்

1. லியொன் ட்ரொட்ஸ்கியும் இருபதாம் நூற்றாண்டின் சோசலிசத்தின் தலைவிதியும்
2. பூகோளமயமாக்கமும் வரலாற்று அர்த்தமும் புரட்சிகரத் தன்மையும்
3. சீர்திருத்தவாதமும் புரட்சியும்-போர்ண்ஸ்டீனிற்கு எதிரான போராட்டமும் வரலாற்று முன்நோக்கும்
4. கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிசம்: ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்.
5. நிரந்தரப் புரட்சி--இந்தியாவிலும் சீனாவிலும் அதன் படிப்பினைகள்.
6. நிரந்தரப் புரட்சி-காஸ்ட்ரோவாதமும் குட்டி முதலாளித்துவ தேசியவாதமும்
7. தொழிற்சங்கங்களின் 150 ஆண்டுகள்- ஒரு மார்க்சிச மதிப்பீடு
8. கலை, கலாச்சாரம், சோசலிசம்
9. சோசலிச சமத்துவமும் புரட்சிக் கட்சியின் வேலைத்திட்டமும்

**கம்பஹா சுஹத மாவத்தை சனசமூக மண்டபம்**

8. நவம்பர் 22 மாலை 2 மணிக்கு
9. டிசம்பர் 20 மாலை 2 மணிக்கு

## பகிரங்கக் கூட்டம்

- சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்ததை விடுதலைப் புலிகள் ஊர்ஜிதம் செய்ய வேண்டும்!
- சோ.ச.க. ஜனநாயக உரிமைகளை காப்பாற்று!

**பதுளை சேனாநாயக்க மைதானம்**

**நவம்பர் 29ம் திகதி**

**மாலை 3 மணிக்கு**

**சோசலிச சமத்துவக் கட்சி**

**இளம் சோசலிஸ்டுகள்**

**சோசலிச சமத்துவக் கட்சி மாத இதழ்**

**தொழிலாளர் பாதை**

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

**சந்தாதாரர் ஆகுங்கள்**

சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.27 |
| இதழ் 6 | ரூ.54 |
| இதழ் 12 | ரூ.108 |
| இதழ் 24 | ரூ.216 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10
தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . . திகதி . . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு-10
தொ.பே. 682220

90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்ப்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org